YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
ஜன 28-பெப் 03
ஓசை : 01 நாதம் : 13 வெள்ளிக்கிழமை 28.01.2011 வார இதழ் விலை : ரூபா 15.00

# ஐ.ம.சு.மு. யாழில் தாக்கல் செய்த 16 வேட்பு மனுக்களும் நிராகரிப்பு



யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று தாக்கல் செய்தது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுமந்திரன் ஆகியோர் வேட்பு மனுவை தாக்கல் செய்த பின்னர் செயலகத்திலிருந்து வெளியே வருவதை படத்தில் காணலாம்.

**வெற்றிலை சின்னத்தையுடைய ஆளும் கூட்டமைப்பின் கட்சிப் பெயரை தவறாக குறிப்பிட்டமையே வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு காரணம்**

எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடும் நோக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தாக்கல் செய்த 16 வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நவ சம சமாஜ கட்சியின் வேட்பு மனு ஒன்றும் மூன்று சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் மொத்தமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 20 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள (தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## சுயாதீன தேர்தலை உறுதிப்படுத்த குடாநாட்டில் விசேட பாதுகாப்பு

**கேந்திரநிலைகளில் படையினர்; இரவுநேர ரோந்து**

(எம். நேசமணி)

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பல்வேறு குற்றச்செயல்களை கட்டுப்படுத்தி சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கென விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி அமரசேகர தெரிவித்தார். தேர்தல் பிரசார (தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)




## மார்ச் 17 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

**வேட்புமனு தாக்கல் நேற்றுடன் நிறைவு**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் 301 உள்ளூராட்சி மன்றங்களுக்கே இவ்வாறு மார்ச் மாதம் 17 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்ற (தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## லண்டனில் 176 கோடி ரூபா பணத்தை மோசடி செய்த இலங்கையருக்கு சிறை

வைப்புப் பணத்திற்கு அதிகூடிய வட்டி தருவதாக வாக்களித்து லண்டனில் கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்த இலங்கை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குறுகிய கால வைப்புத் தொகைகளுக்கு நூற்றுக்கு நாற்பத்தியெட்டு வரை உச்சவட்டி வழங்குவதாகக் கூறி ஆறு பேர் கொண்ட குழுவொன்று (தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)


உங்கள் திருமண விழா ஜொலித்திடும்
ஜெயசந்திரன்ஸ் திருமண பட்டாடைகளால்...
JEYECHANDRANS
The art of Fashion
No.433,Galle Road,Colombo-06 Tel:011-4528438/0114528435
www.jeyechandrans.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி வேலைவாய்ப்புக்கள், சீட்டிழுப்புக்கள் குறித்து அவதானமாக இருக்க எச்சரிக்கை

## பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம்

போலி வேலைவாய்ப்புக்கள் மற்றும் சீட்டிழுப்பு வெற்றிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. "உலகளாவிய ரீதியில் போலி சீட்டிழுப்புகளின் எண்ணிக்கையும் வேலைவாய்ப்பு மோசடிகளும் அதிகரித்து வருவதாகத் தெரிகிறது. இல்லாத வேலைவாய்ப்புகளையும் சீட்டிழுப்புக்களையும், இருப்பதாக கூறி பலரும் ஏமாற்றப்பட்டு வருவது வருந்தத்தக்க உண்மையாகும்.

இத்தகைய ஏமாற்று நடவடிக்கைகளால் வருடாந்தம் சுமார் 3 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவதாக புள்ளிவிபரத் தகவல்கள் கூறுகின்றன. இதனால், ஒவ்வொருவரும் சராசரியாக 850 ஸ்ரேலிங் பவுணை இழக்கிறார்கள். சில சமயங்களில் அத்தொகை அதனை விடவும் கூடுதலாகவும் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, மோசடி நடவடிக்கையில் சிக்கிக்கொள்வது மிகவும் துன்பம் தரக்கூடியதாகும்" என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானியாவிலிருந்து வழங்கப்படுவதாக நம்பவைக்கப்பட்ட இலத்திரனியல் அஞ்சல் மற்றும் ஏனைய வழிமுறைகளூடாக பெறப்பட்ட சீட்டிழுப்பு மற்றும் வேலைவாய்ப்புக்கள் குறித்து இலங்கை மற்றும் மாலைதீவிலுள்ள மக்களிடமிருந்து ஒருதொகை முறைப்பாடுகள் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த சீட்டிழுப்பு மற்றும் வேலைவாய்ப்பு இலத்திரனியல் அஞ்சல் ஏமாற்று வேலைகள் கேட்காமலே வந்தடைவதுடன் நல்லவற்றை வழங்குவதாக உறுதியளிக்கின்றன. பிரித்தானியாவிலிருந்து வருவதாக தோன்றும் இந்த ஏமாற்று வாய்ப்புக்கள் வேறு நாடுகளை அடிப்படையாகக் கொண்டியங்கும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களால் செயற்படுத்தப்படுகின்றன என அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அனைத்து அசலான பிரித்தானிய சீட்டிழுப்புகளும் பதிவுசெய்யப்பட்டிருப்பதுடன் அவற்றுக்கென வெப்தளங்களையும் கொண்டுள்ளன. பிரித்தானிய சீட்டிழுப்புகளில் வெளிநாடுகளிலுள்ள தனிநபர்களால் பங்கேற்க முடியாது. அவர்கள் பிரித்தானிய பிரஜைகளாக இருந்தாலும் இது பொருந்தும். பிரித்தானிய வாணிப மற்றும் முதலீடு உள்ளடங்கலாக பிரித்தானிய அரசாங்கமானது எவரும் கேட்காமல் நேரடியாகவோ முகவர்கள் ஊடாகவோ வேலைவாய்ப்புகளை வழங்கும் இலத்திரனியல் அஞ்சல்களை அனுப்புவதில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி மஹிந்த நாடு திரும்பினார்

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்தவாரம் அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடுதிரும்பியதாக ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருவார காலமாக அமெரிக்காவில் தங்கியிருந்த ஜனாதிபதி, நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளையிலேயே நாடு திரும்பியதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த தனிப்பட்ட விஜயத்தில் கலந்துகொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் நேற்று நாடு திரும்பினார்.

கடந்த 19 ஆம் திகதி ஜனாதிபதி தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்தார். ஜனாதிபதி தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ளதாகவும், அதற்கு மேல் எதனையும் கூற முடியாது என்றும் கடந்த வாரம் பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் குடாநாட்டில் தேர்தல் கால நிலைமைகள் சந்தேகத்துக்குரியவை

## அச்சம் முற்றாக நீங்கிவிடவில்லை என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(ஜே.ஜி. ஸ்டீபன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுத் தாக்கல் நடவடிக்கைகள் யாவும் நிறைவடைந்துள்ள போதிலும், குடாநாட்டில் குடிகொண்டுள்ள அச்சம் முற்றாக நீங்கிவிடவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கின் அனைத்துப் பிரதேசங்களும் இராணுவம் மற்றும் புலனாய்வுத்துறை ஆகியோரின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தினால் எதிர்வரும் தேர்தல் கால நிலைமைகள் எந்தளவில் சுயாதீனத் தன்மை வாய்ந்தவையாக அமையப்போகின்றது என்பது தொடர்பிலும் சந்தேகங்களும் கேள்விகளும் எழுந்துள்ளன என்றும் கூட்டமைப்பு குறிப்பிடுகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுத் தாக்கல் நடவடிக்கைகள் யாவும் நேற்று வியாழக்கிழமை நண்பகலுடன் நிறைவுக்கு வந்தது. இந்நிலையில், வடக்கு-கிழக்கை பிரதானமாக கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலான தமிழ்க் கட்சிகளின் கூட்டணி, தேர்தல்களை எதிர்கொள்வதில் நிலவுகின்ற சிக்கல்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பி.யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வந்த மனிதப் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், அச்சுறுத்தல்கள், தாக்குதல் சம்பவங்கள் போன்றவற்றினால் ஏற்பட்ட அச்சநிலைமை இன்னும் மாறிவிடவில்லை.

அதேபோல், இடையூறுகள் முற்றாக ஒழிந்துவிட்டதாகவும் கூறமுடியாதுள்ளது.

இந்த நிலைமைகளால் வடக்கில் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு முன்வர இளைஞர்கள், யுவதிகள் பெரும் அச்சம் கொண்டிருந்தனர். இருப்பினும், தற்போது வேட்புமனுத் தாக்கல் நடவடிக்கைகள் நிறைவுக்கு வந்துள்ளன.

வடக்கு, கிழக்கினை பிரதானமாகக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலான கூட்டணி களமிறங்குகின்றது.

தற்போதுள்ள நிலைமையிலும் பார்க்க தேர்தல் பிரசார காலப் பகுதியானது சற்று மாறுபடுவதற்கான வாய்ப்புள்ளது.

ஏனெனில், வடக்கின் அனைத்துப் பிரதேசங்களும் இராணுவத்தினரதும் புலனாய்வுப் பிரிவினரதும் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

அப்படி இருக்கையில், அரசாங்கத்துக்கு எதிராக களமிறங்குகின்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டணி தனது தேர்தல் பிரசாரங்களை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கான சூழல் உருவாக்கித் தரப்படுமா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

தற்போது தேர்தல் கள நிலைமை ஓரளவுக்கு சுமுகமாகக் காணப்பட்டாலும் பிரசாரங்கள் சூடுபிடிக்கும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு அமையும் என்பது கேள்வியாக இருக்கின்றது.

மேலும், இராணுவ மற்றும் புலனாய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் குடாநாடு இருக்கின்றமையால் அரசுக்கு எதிரானவர்கள் மீது அழுத்தம் கொடுப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

எனவே, நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் போது வடக்கிற்கு முக்கியத்துவம் அளித்து, அங்கு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவதற்கு அரசாங்கமும் தேர்தல்கள் ஆணையாளரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

குடாநாட்டில் அசாதாரண நிலைமைகளை முற்றாக நீக்கி, எமது மக்களின் வாக்குரிமைகளை பாதுகாக்க அரசு உரிய வழிவகைகளை செய்யவேண்டும் என்றார்.

# குற்றச் செயல்கள் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் 9 பேர் கைது

(எம்.நேசமணி)

யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஒன்பது பேரை இராணுவத்தினர் கைதுசெய்துள்ளதுடன், அவர்களை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கோப்பாய் பிரதேசத்தில் ஒரு சந்தேக நபரை கைதுசெய்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே ஏனையோரை கைதுசெய்ததாக யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன. இக்கொள்ளைச் சம்பவங்களுடன் குறித்த சந்தேக நபர்களுக்கு தொடர்பு உள்ளதென தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கைதுசெய்யப்பட்ட ஒன்பது சந்தேக நபர்களையும் கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

# யாழில் சுகாதார பயிற்சி நிறுவனம் கிளிநொச்சியில் தாதியர் விடுதி

## ரூ.150 மில்லியன் செலவில் வடக்கின் சுகாதாரத் துறையை மேம்படுத்த அங்கீகாரம்

வடக்கு மாகாணத்தின் சுகாதாரத் துறையை மேம்படுத்தும் நோக்கில் 150 மில்லியன் ரூபாவில் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜப்பானின் 'ஜய்க்கா' நிறுவனத்தின் உதவியுடன் வடக்கில் வைத்தியசாலைகளின் வசதிகள் அதிகரிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ளன. கடந்த 30 வருட கால யுத்தத்தில் வடக்கில் அமைந்துள்ள பல வைத்தியசாலைகள் சேதமடைந்தன. அந்த வகையில், இவற்றைப் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அரசாங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 50 மில்லியன் ரூபா செலவில் பிராந்திய சுகாதாரப் பயிற்சி நிறுவனம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. மேலும், கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு தாதியர் விடுதி ஒன்று 45 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. வவுனியா வைத்தியசாலையில் இரத்த வங்கி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்காக, 30 மில்லியன் ரூபா செலவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொம்பை வீதி புனரமைப்பு

தெல்லிப்பழை,

வலி.தெற்கு பிரதேசத்திற்குட்பட்ட உடுவில் பிரதேசத்தில் உள்ள தொம்பை வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இவ் வீதியானது புனரமைப்பதற்கு நீண்ட நாட்களாக பறிக்கப்பட்டு இருந்த கற்களால் வீதியில் கனரக வாகனங்கள் மற்றும் பயணிகள் பயணிப்பது பெரும் சிரமாக இருந்து வந்தது.

இவ்வீதியானது பிரதேச சபைச் செயலாளர் திருமதி.சுலோச்சனா முருகேசனின் நேரடிப் பணிப்பின் பேரிலும் அவருடைய பார்வையில் உடன் புனரமைப்புச் செய்யப்பட்டது. புனரமைப்பு செய்தமையினால் மக்கள் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வல்வெட்டித்துறைபிரதேசத்தில்5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்பரீட்சை, ஜீ.சி.ஈ உயர்தர பரீட்சைகளில் சாதனைபடைத்த மாணவர்களும் மாகாண, தேசிய மட்டங்களில் சாதனைபடைத்த வீரர்களும் வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் வைத்தியசாலை வைரவிழாவில் கௌரவிக்கப்பட்டனர். சாதனையாளர்கள், விருந்தினர்கள் சகிதம் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய காசநோய்க்கட்டுப்பாட்டு பணிப்பாளர் டாக்டர் சுனில் டி. அல்விஸ் மாணவர் ஒருவரைக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் வடமராட்சி நிருபர்)

# கனகராயன் குளம் படையினரால் மாணவர்களுக்கு சைக்கிள் அன்பளிப்பு

நெடுங்கேணி

கனகராயன் குளம் 561 படைப்பிரிவின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள், புத்தகப்பைகள் என்பன கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இக் கையளிப்பு வைபவத்தில் 58 சைக்கிள்கள் மற்றும் 70 புத்தகப்பைகள் என்பன படையதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனகராயன் குளம் படைப்பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளான கனகராயன் குளம் மகாவித்தியாலயம், பெரியபுலம் மகாவித்தியாலயம், சின்ன அடம்பன் பாரதி வித்தியாலயம், குஞ்சுக்குளம் வித்தியாலயம், கொல்லர் புளியம் குளம் வித்தியாலயம், குறிசுட்ட குளம் மகா வித்தியாலயம், ஒலு மடு நெடுங்கேணி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே மேற்படி பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் 56 ஆவது படைப்பிரிவின் தளபதி லெப்டினட் கேணல் விஜயவர்த்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மற்றும்16 ஆவது சிங்கப் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி லெப்டினட் கேணல் விஜயகுணதிலக, 56 ஆவது பொது மக்கள் தொடர்பு அதிகாரி வீரசிங்க, 19 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி மேஜர் ஜே.பொன்சேகா மற்றும் கனகராயன்குளம் பாடசாலையின் அதிபர் எஸ்.நித்தியானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நெல்லியடி - மாலுசந்தி வீதி போக்குவரத்துக்காக திறப்பு

வடமராட்சி

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மேற்கொள்ளப்பட்ட வீதி அகலமாக்கும் பணியினை மேற்கொள்வதற்கென மூடப்பட்டிருந்த நெல்லியடி-மாலுசந்தி வீதி போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டு அவ்வீதி ஊடாக போக்குவரத்துக்கள் இடம்பெற்றுவருகின்றன.

வீதி அகலமாக்குவதற்காக கடந்த சில வாரங்களாக மூடப்பட்டிருந்த இவ்வீதிக்குப் பதிலாக நெல்லியடி-வதிரி-மாலுசந்தி வீதி போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

குறிப்பிட்ட வீதி அகலமாக்கும் பணி பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து போக்குவரத்துக்காக அவ்வீதி திறக்கப்பட்டு அதனூடாக தற்போது சகல போக்குவரத்துக்களும் நடைபெற்று வருகின்றன.

## உலக அமைதிக்கான சிறப்பு யாகப் பூஜை

தெல்லிப்பழை

உலக அமைதிக்கான சிறப்பு யாகப் பூஜை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. ஸ்ரீ ரவி சங்கருடைய நல்லாசியுடன் இந்திய வாழுங்கலை நிறுவனத்திலிருந்து வருகை தந்துள்ள வேத பண்டிதர்களும் சிவாச்சாரியர்களும் இணைந்து உலக அமைதிக்கான சிறப்பு யாகத்தை செய்யவுள்ளனர்.

இவ் யாக நிகழ்வானது இன்று வெள்ளிக்கிழமை இந்து சமயப் பேரவை பலாலி வீதி கந்தர் மடத்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு தெரிவிக்கப்படுகின்றது.


CANADA & AUSTRALIA
SKILL MIGRATION
Degree, Diploma & Trade Certificate உடன் 2 வருடத்திற்கு மேல் WorkingExperince உள்ளவர்கள் குடும்பத்துடன் Canada, Australia வுக்கு குடிபுகலாம்.

EDUCATION FOR UK
AND ALL OTHER COUNTRIES
Feb & May intake interviews are going on. you can apply with your O/L to masters ( we can give the assitance for sponsor, Parttime Job, Pickup & accommodation) you can go with your dependants.
And also we are handling all kind of visas (Skill, Sponsor, Dependant, Parents, Refuse, Reject and Spouse)
Call for Details : 0773 049 775 (Hotline)
VISIT எல்லா நாடுகளுக்கும் (India / Malaysia / Italy Canada / Australia / Dubai....etc )
Visa கிடைக்கும் முறையில்
File செய்து தரப்படும். ▶▶▶ 0754516083
GIEEITH INTERNATIONAL
No. 31 A 32nd Lane, Wellawatta, Colombo - 06
E-mail - nzrenold@gmail.com


# சிறப்புற நடைபெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை,

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. அதிகாலை 5.00 மணிக்கு இடம்பெற்ற யாகசாலை பூசையைத் தொடர்ந்து 8.00 மணியளவில் மஹா பூர்ணாகுதி தீபாராதனை, திருமுறைப் பாராயணம், கிரகப் பிரதி யத்திரதானம், அந்தர்யாகி என்பன நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 9.30 மணிக்கு கும்பங்கள் யாக சாலையில் இருந்து புறப்பட்டு 10.30 மணிக்கு தூபிகளுக்கான கும்பாபிஷேகம் இடம்பெற்று 10.53 மணி தொடக்கம் மூர்த்திகளுக்கான மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

தொடர்ந்து தக தர்சனம், மஹா அபிஷேகம், விஷேட பூசை, தீபாராதனை, திருமுறை, பாராயணம், யாகசாலையில் விசர்ஜன எஜமான் அபிஷேகம், சம்பாவனைகள்,சிவாச்சாரியர்களுக்கு கௌரவிப்பு, மஹா ஆசீர்வாதம் என்பன இடம்பெற்றது.

கும்பாபிஷேக கிரியைகள் மாவை ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ சு.க சண்முகநாதக்குருக்கள் தலைமையில் ஆலய சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக மஹாகும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். இந்நிகழ்வில் 100 இற்கு மேற்பட்ட சிவாச்சாரியார்கள் கலந்து கொண்டனர்.

மாலை 4.00 மணிக்கு விஷேட பூசையைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வு இடம் பெற்றது. தொடர்ச்சியாக 45 நாட்கள் தினமும் மு.ப 10.00 மணிக்கு மண்டலாபிஷேகம் இடம் பெறவுள்ளது.

ஆலய புனரமைப்பில் இந்திய சிற்பியான திரு. புருஷோத்தமன் தலைமையில் வாயில் மணிமண்டபங்கள் சிற்ப வேலைப்பாடுகள் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது. லண்டனிலுள்ள துர்க்கை அம்மன் அடியவர்களால் 100 கிலோ எடையுடைய புதிய காண்டாமணியும் ஆலயத்தில் பொருத்தப்பட்டுள்ளது.


YARLOSAI
யாழ் ஓசை
சிறு விளம்பரங்கள்
மணமகன் தேவை
யாழ் இந்து உயர் வேளாளர் மணமகள் 74இல் பிறந்த அனுசம் 7இல் செவ்வாய் 5' 1" உயரமான முதுகல்விமாணி ஆசிரியைக்கு ... தொடர்பு:- 077 1250332


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
2011 ஜனவரி 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

## தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்திய அரசியல் இணைவுகள் வரவேற்கத்தக்கவை

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான என்.ஸ்ரீகாந்தாவை தலைவராகவும் எம்.கே. சிவாஜிலிங்கத்தை செயலாளராகவும் கொண்டியங்கும் தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பே இவ்வாறு இணைந்து போட்டியிட முன்வந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பல்வேறு அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக புதிய கூட்டணிகளை உருவாக்கியிருக்கின்றபோதிலும் மேற்குறித்த இரு கட்சிகளினதும் கூட்டானது தமிழ் தேசிய அரசியல் அரங்கில் முக்கியத்துவமுடையதோர் இணைவாகவே நோக்கப்படுகிறது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீகாந்தாவும் சிவாஜிலிங்கமும் கருத்து முரண்பாடுகள் காரணமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றே தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பைத் தோற்றுவித்திருந்தனர். இருந்தபோதிலும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்களின் இருப்பை உறுதிப்படுத்தவும் பொது நலன்களை முன்னிறுத்தியே தாம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அவர்கள் இருவரும் அறிவித்துள்ளனர்.

மேலும் இந்த இணைவு பற்றிக் கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் எம்.பி. ஸ்ரீகாந்தா, தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான பரந்துபட்ட ஒற்றுமையின் அவசியத்தையும் இன்றைய சூழலில் தமிழ் மக்கள் சந்திக்கும் அவலங்களையும் கருத்திற்கொண்டு தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமைப்படுவதற்கான வாய்ப்பை தோற்றுவிக்க வேண்டும். இதனை எமது கட்சியின் மத்திய சபை இறுதித் தீர்மானமாக எடுத்ததற்கிணங்கவே தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக அறிவித்திருந்தன. இந்நிலையிலேயே இக்கூட்டணியில் தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பும் இணைந்துள்ளது.

போருக்குப் பின்னரான இலங்கையின் அரசியல் நிலைவரங்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வினைத்திறன்வாய்ந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாகவிருந்தால் தமிழ் கட்சிகள் தமக்கிடையே கொள்கை ரீதியாக ஒற்றுமைப்படுவதே இன்றைய பொழுதுகளில் அவசரமும் அவசியமுமான பணியாகும்.

போர் காரணமாக மிகக் கடுமையான இழப்புக்களைச் சந்தித்துள்ள வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உள்ளங்களை ஆற்றுப்படுத்தவும் அவர்களது அரசியல் உரிமைகளை மீட்டெடுக்கவும் முழு வீச்சிலான அரசியல் போராட்டம் ஒன்றை தமிழ் கட்சிகள் முடுக்கிவிட வேண்டும்.

ஆனால் அவ்வாறானதொரு போராட்டத்தை தனித் தனிக் கட்சிகளாகப் பிரிந்து நின்று முன்னெடுப்பதென்பது சாத்தியமல்ல. மாறாக சகல தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களின் பெயரால் ஒன்றுபடும்போதே அது சாத்தியமாகும். எனவேதான் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிறுத்தி சில கட்சிகள் தமக்கிடையே இணக்கப்பாட்டை எட்டியிருப்பது போல தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளை முன்னிறுத்தியும் தமக்கிடையே இணக்கப்பாட்டை எட்ட முயற்சிப்பது அவசியமாகும்.

இதேவேளை நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை தமிழ் வேட்பாளர்களும் வாக்காளர்களும் நிதானமாக அணுக வேண்டியதன் அவசியத்தையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறோம். போரினால் சிதைந்துபோய்க்கிடக்கும் வடக்கு கிழக்கு தமிழ் கிராமங்களை மீளக்கட்டியெழுப்புவதில் உள்ளூராட்சி மன்றங்களே முக்கிய பங்குவகிக்கின்றன. எனவே இம் முறை உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தமிழ் பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான உறுதிப்பாட்டைக் கொண்டிருப்பதுடன் அதனை நிறைவேற்ற திடசங்கற்பம் பூணுவதும் அவசியமாகும். வெறுமனே தனிப்பட்ட அரசியல் கோபதாபங்களை ஒருபுறம் ஒதுக்கித்தள்ளிவிட்டு மக்களின் பெயரால் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டியது காலத்தின் கடமையாகும்.

## வல்லரசுகளின் நலன் பேணும் ஆயுதமாக மனித உரிமை மீறல்கள்

மேலை நாடுகளிலும் சரி இந்தியாவிலும் சரி சீன பொருளாதார நிபுணத்துவம் ஆழ ஊடுருவி விட்டதாக கருதப்படுகிறது. உதாரணமாக 885 பில்லியன் டொலர் பெறுமதி மிக்க அமெரிக்க திறைசேரி தாள்களை சீன அரச நிறுவனங்கள் கொள்வனவு செய்து வைத்துள்ளன.

தற்போதய பொருளாதார நிலையில் அமெரிக்க அரசு இதனை மீளப்பெற்று கொள்ளும் வாயப்புகள் மிக அரிதாகவே காணப்படுகிறன என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் இடம்பெறும் வர்த்தக பரிமாற்றங்கள் மிக விரைவில் ஆண்டொன்றுக்கு 60 பில்லியன் அமெரிக்க டொலரை தாண்டும் நிலையை அடைந்திருக்கிறது.

மேலும் பிறேசில், ஐரோப்பிய நாடுகள் என உலகெங்குமான பொருளாதார முதலீடுகளில் சீனா வியாபித்து நிற்கிறது.

ஆக ஆய்வாளர்களின் கருத்துகளுடாக பார்க்கும் பொழுது சீனாவுடன் நேரடியாக மோதுவதோ, சீனாவுக்கு எதிராக பொருளாதார முடக்க நிலையை கொண்டு வருவதோ பொதுவாக சாத்தியப்படாத ஒன்றாகவே கருதப்படுகிறது.

மாறி வரும் உலக நியதிகளும், வல்லரசுகளின் பாதுகாப்பு உத்திகளும், இராஜதந்திர சூழ்ச்சிகளும் சீனாமீதான நேரடி நெருக்குதல்கள் கொடாது மறைமுகமான பல அழுத்தங்களை உருவாக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பல பத்தாண்டுகளாக சீனா உலக விவகாரங்களில் தலையிடாத நிலையை கடைப்பிடித்தபடி தொடர்ந்து தனது பொருளாதார வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கின்றது. அமெரிக்கா போன்ற நாடுகள் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராக யுத்தம் புரிந்து கொண்டிருந்த அதே வேளை, சீனா தனது பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதில் முனைப்புடன் ஈடுபட்டு வந்திருந்தது.

இதனால் தற்போது அமெரிக்க பொருளாதாரத்தை மட்டுமல்ல உலகையே பொருளாதார ரீதியாக கைக்குள் போட்டு கொள்ளும் நிலையை சீனா அடைந்திருக்கிறது.

மேலும் தனது பொருளாதார திட்டங்களை பல ஆண்டுகளுக்கு திடப்படுத்தி கொள்ள கூடிய வகையில் உலக நாடுகளுடன் ஒப்பந்தங்களும் செய்து கொண்டு வருகிறது.

இந்த நிலையில் சீனாவை உலக நடப்பு விவகாரங்களில் தலையிட வைப்பதன் மூலம் அதனுடைய பிரத்தியேக வளர்ச்சிப்போக்கை கட்டுக்குள் கொண்டு வருவது குறித்து ஐரோப்பிய சிந்தனையாளர்கள் திட்டங்களை வகுத்து வருகின்றனர்.

அதேவேளை, சீன பாதுகாப்பு யுக்தி நகர்வுகளுக்கு எதிராகவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவது ஆதாரபூர்வமாக வெளித்தெரிகிறது.

அனைத்துலக அரங்கில் சீனாவுடன் நெருக்கமாக இருக்கும் நாடுகள் ஒரு பிரிவாக தற்காலத்தில் நோக்கப்படுவதும் சாதாரணமான விடயமாகிவிட்டது. வட கொரியா, மியான்மர், இலங்கை, பாகிஸ்தான், சூடான் என இந்தப்பட்டியல் நீண்டு செல்கிறது.

அத்துடன், உலகில் சீன பொருளாதார உதவிகளை அதிகம் பெற்ற நாடுகள் மத்தியிலே 'மனித உரிமை' என்ற விடயமும் பொருளாதார வளர்ச்சி என்ற விடயமும் ஒன்றுக்கொன்று எதிராக தாக்கத்தை விளைவிக்க கூடிய வகையில் அமைந்திருப்பதாக மேலை நாடுகளால் பார்க்கப்படுகிறன.

மனித உரிமை விவகாரம், ஒரு நாட்டின் தலைமையை அந்த நாட்டின் மக்களை விட்டு பிரித்தெடுத்து தண்டிப்பதாக அமைவது இங்கே குறிப்பிட தக்கதாகும். இதன் மூலம் உள்நாட்டு மக்கள் மத்தியிலே தாங்கள் மதிப்பை இழக்க வேண்டிய கட்டம் ஏற்படாது என்பது இதன் அர்த்தமாகும்.

உதாரணமாக தியனமன் சதுக்கத்திலே 1989இல் இடம் பெற்ற படுகொலைகளை மனித உரிமை மீறல்கள் என்றால் அது சீன அரச அதிகாரிகளும் சீன பாதுகாப்பு படையான மக்கள் இராணுவத்தையுமே சாரும்.

அதே போல இலங்கையில் இடம்பெற்றன எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் அனைத்துக்கும் ராஜபக்ச சகோதரர்கள், துணை இராணுவக்குழு தலைவர்கள், விடுதலைப்புலிகளின் தலைவர்கள் ஆகியோரே காரணம் என மேலைத்தேய அரச - அரச சார்பற்ற நிறுவனங்களின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அண்மைய இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான போரிலே நேரடி இராணுவத்தலையீடு காரணமாக ஈராக்கிலும் ஆப்கனிஸ்தானிலும் அமெரிக்க படைகள் உள்நாட்டு மக்களிடம் நன்மதிப்பை பெற்று கொள்ள முடியாது போனது. இதனால் அமெரிக்கப்படைகள் பின்வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளபட்டுள்ளன.

மேலும் எழுபதுகளில் வியட்னாமில் நடாத்திய படை நகர்த்தல்களின் பின் விளைவுகள், தற்போது வியட்னாமிய அரசுடன் பல்வேறு வர்த்தக பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்து கொண்டாலும் அமெரிக்கா என்றதும் வியட்னாமிய மக்கள் மத்தியிலே இன்னமும் கசப்புணர்வு தெரிவதாகவே கூறப்படுகிறது.

ஆக மேலை நாடுகளின் உத்தியில்

**லோகன் பரமசாமி**

மக்களின் நன்மதிப்பை தக்க வைத்து கொண்டு தாம் விரும்பும் வகையில் ஒரு நாட்டின் அரசை மாற்றி அமைப்பதற்கு 'மனித உரிமை' என்ற சொற்பதம் மிகவும் வசதியானதாகும்.

அதேவேளை மனித உரிமை மீறல்களில் பாரிய குற்றங்களில் ஈடுபட்ட தலைவர்கள் தாம் சார்ந்த மக்கள் மத்தியில் திடீர் (தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்த கச்சதீவை மீட்பதுதான் நிரந்தர தீர்வாக அமையும்



## மத்திய, மாநில அரசுகள் தங்கள் கடமையை மறந்து விட்டன என்கிறார் ஜெயலலிதா

**வேதாரண்யம்,**

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுப்பதற்கு, இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்பதுதான் நிரந்தர தீர்வாக அமையும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறினார்.

இலங்கை கடற்படையினரின் முறை யற்ற செயற்பாட்டால் உயிரிழந்ததாகக் கூறப்படும் வேதாரண்யம் மீனவர் ஜெயக் குமாரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறு வதற்காக, ஜெயலலிதா நேற்றுமுன்தினம் வேதாரண்யம் சென்றிருந்தார்.

அப்போது மீனவர் ஜெயக்குமாரின் மனைவி முருகேஸ்வரியை நேரில் சந்தி த்து ஆறுதல் கூறிய அவர், கட்சியின் சார் பில் ரூ.1 இலட்சம் நிதி வழங்கினார்.

பின்னர் நிருபர்களுக்கு பேட்டியளித்த அவர்,

ஆசியாவின் வலிமையான நாடாக இந் தியா இருந்தும் சிறிய நாடான இலங் கையை சேர்ந்த கடற்படையினர் தமிழக மீனவர்களை துணிச்சலாக கொன்று குவிப்பதற்கு பலவீனமான மத்திய அரசு தான் காரணம். மத்திய, மாநில அரசுகள் தங்கள் கடமையை மறந்துவிட்டன. மக்க ளுக்கு பாதுகாப்பு கொடுப்பதில் அக்கறை இல்லை

அப்போதைய மத்திய அரசு அங்கீகாரம் இன்றியும், பாராளுமன்றத்தில் உரிய அனுமதி பெறாமலும் கச்சதீவை இலங் கைக்கு தாரைவார்த்து கொடுத்துள்ளது. இது சட்டப்படி செல்லாததாகும். இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் நான் வழக்கு தொடர்ந்துள்ளேன்.

அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் விரைவில் நீதி கிடைக் கும் என நம்புகிறேன்.

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்பது மட்டுமே நிரந்தர தீர்வாக அமை யும். வருகிற சட்டசபை தேர்தலில் மீனவ மக்கள் சரியான முடிவை தருவார்கள். வரும் சட்டசபை தேர்தல் நல்ல முடிவை ஏற்படுத்தும்.

தமிழக மீனவர்களை இராணுவத் தாக் குதலில் இருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் பிரதமர் ராஜி னாமா செய்ய வேண்டும். இறந்த ஜெயக் குமாரின் குழந்தைகளின் படிப்பு செலவை அ.தி.மு.க. ஏற்கும் என்று தெரிவித்தார்.

## காந்தியை அவமதித்த இணையத்தளம் முடக்கம்

**லக்னோ:**

மகாத்மா காந்தியை அவமதித்ததாக புகார் கூறப்பட்ட இணையத்தளம் முடக்கப்பட் டது.

பேஸ்புக் இணையதளத்தில், மகாத்மா காந்தியை அவமதிக்கும் வகையில், காந்தி யை வெறுப்போர் குழு என்ற பெயரில் சிலர் இணையதள பக்கங்களை உருவாக்கி யிருந்தனர்.

இதை பார்த்த உ.பி.யைச் சேர்ந்த ஐ.பி. எஸ்.அதிகாரியொருவர் மகாத்மா காந்தியை இழிவுபடுத்தும் வகையில் வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டு, பேஸ் புக் மீது லக்னோவில் உள்ள கோமதிநகர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

இதையடுத்து, காந்தியை இழிவுபடுத்தும் குழுவின் இணைய பக்கங்களை முடக்க பேஸ்புக் இணையதளம் நடவடிக்கை எடுத் துள்ளது.

## மக்களை அழ வைக்காமல் இருக்கும் கட்சியுடன் கூட்டணி : விஜயகாந்த்

**சென்னை :**

மக்களை அழ விடாமல், அவர்கள் வருமானத்தை சுரண் டாமல், விலைவாசி உயர்வைக் குறைத்து, சுகாதாரம், சமச்சீர் கல்வி, வேலைவாய்ப்பு அளி த்து, எப்போதும் அவர்களை சிரிக்க வைத்துக் கொண்டே இருக்க எந்த தியாகத்தையும் செய்ய தயாராக இருக்கிறேன். நான் யாருடன் கூட்டணி வைக் கிறேனோ அக்கட்சிக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என தே.மு.தி .க., தலைவர் விஜயகாந்த் தெரிவித்தார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்,

முதல்வர் பதவியை விட தலைவர் பதவி க்கு முக்கியத்துவம் அளிக்கப் போகிறேன் என்கிறார் கருணாநிதி. மக்கள் அவருக்கு நிரந்தர ஓய்வு கொடுக்க முடிவு செய்து விட்ட தை முன்கூட்டியே அறிந்து, இந்த முடிவை எடுத்துள் ளார். படுத்த படுக்கையாக இருப்பது போன்று பாசாங்கு செய்து, மக்களின் அனு தாப வாக்குகளை வாங்க அவர் திட்டமிட் டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. உண் மைக்கு அரிச்சந்திரன் என்றால், பொய்யின் உச்சத்திற்கு உச்சம் கருணாநிதி தான்.

மக்கள் பிரச்சினையை பற்றியும், விலை வாசி உயர்வு பற்றியும் அவருக்கு கவலையி ல்லை. ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ஊழல் நடக்கவில்லை வருமான இழப்பு ஏற்பட்டு ள்ளது என்கின்றனர். ஒருவர் சொந்தமாக கடை வைத்து, அங்கு கொள்முதல் விலை யைவிட குறைந்த விலையில் பொருட்கள் விற்றால் அதற்கு என்ன பெயர்?. இழப்பு ஏற்படுத்தும் அமைச்சரை வைத்துக் கொண்டு அவருக்கு சாதகமாக தாளம் போடுகின்றனர்.

இத்தகையவர்களுக்கு, தேர்தல் மூலம் மக்கள் பாடம் கற்றுத்தர வேண்டும் என் றார்.

## இரண்டு கிலோ அரிசியை உதட்டால் தூக்கி சாதனை



**சென்னை :**

தனது உதட்டால் 2 கிலோ அரிசியை தூக்கி சாதனை புரிந்துள்ளார் மாமல்ல புரத்தை சேர்ந்த சிற்பியொருவர்.

சுற்றுலா வழிகாட்டியாக பணியாற்றும் இவரின் பெயர் சத்யராஜ் (வயது 25).

சிறு வயதில் இருந்தே ஏதேனும் ஒரு சாதனை படைக்க வேண்டும் என்பதில் நாட்டம் கொண்டிருந்த சத்யராஜ் பல் லால் கார், பஸ், வேன் போன்றவறை இழு த்து சாதனை படைத்தவர். ஆனாலும் மற்றவர்களைப் போலல்லாமல் வேறு ஏதாவது செய்யவேண்டும் என்று நினை த்த அவர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு தனது உதட்டில் துளை போட்டு வளை யம் ஒன்றை மாட்டிக் கொண்டார். .பின் னர் அந்த வளையத்தினூடாக நைலோன் கயிற்றை செலுத்தி அதனூடாக தின மும் 100, 250, 500 கிராம், ஒரு கிலோ உள்ளி ட்ட பொருட்க ளை தூக்கி பயிற்சி யெடுத்துக் கொண்டார். இந்நிலையில், நேற்றுமுன்தினம் மாமல்லபுரம் அர்ஜு னன் தபசு அருகே உதட்டு துளையில் நைலோன் கயிற்றை கட்டி, பிளாஸ்டிக் டப்பாவில் இருந்த 2 கிலோ அரிசியை 2 நிமிடம் தூக்கி சாதனை படைத்தார். இதைக் கண்ட சுற்றுலா பயணிகள் மகிழ் ச்சி ஆரவாரம் செய்து, சத்யராஜுக்கு வாழ் த்து தெரிவித்தனர்.

## இணையத்தால் இணைந்திருக்கும் கிராமம்

**அகமதாபாத்**

குஜராத் மாநிலம், ஆமதாபாத் அருகே உள்ள, 'சங்கா கேம்' கிராமத்தைச் சேர்ந்தவர் கள், தங்களுக்கென பிரத்தியேகமாக இணையதளம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.



குஜராத் மாநிலம் ஆமதா பாத் நகரிலிருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில், உள்ளது 'சங்கா கேம்' என்ற கிராமம். இந்த கிராம த்தின் மக்கள் தொகை 8,000. இந்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள், வேலை நிமித்தமாக உலகின் பல்வேறு பகுதிகளுக்கு இடம் பெய ர்ந்து, அங்கேயே நிரந்தரமாக தங்கி விட்டனர்.

ஆனாலும் அவர்கள், தங்கள் கிராமத்தில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளை உடனுக் குடன் தெரிந்து கொள்வதற்கு பிரத்தியேக மாக இணையதளம் ஒன்றை நடத்தி வரு கின்றனர்.

இதன் மூலம், அக்கிராமத்தினர் ஒன்றிணைந்து செயற்படுகின் றனர்.

'சங்கா கேம்' கிராமத்தின் உட் கட்டமைப்பு, கிராமத் தின் வளர்ச்சி, அங்கு புதிதாக செயற்படுத்தப்படும் திட்டங் கள், நிர்வாக முறை உள்ளிட்ட தகவல்கள் அனைத்தும், அந்த தளத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும், அந்த கிராமத்தினரின் பெயர்கள், முகவரி, தொலைபேசி எண்கள் உட்பட அனைத்து விவரங்க ளும் உள்ளன.

மேலும், அங்கு நடக்கும் நிகழ்ச்சிகள், விழாக்கள், சம்பவங்கள் உள்ளிட்ட அனை த்தும், இணையதளத்தில் பதியப்படுகின் றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் திருமதி விஜயகலா மகேஸ்வரன், மக்கள் விடுதலை முணின்னணியின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன்,யாழ்.மாவட்ட அமைப்பாளர் லலித் குமார், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் ஆகியோர் தாக்கதல் செய்த பின்னர் எடுக்கப்பட்ட படங்கள். (படப்பிடிப்பு:- வண்ணார்பண்ணை நிருபர்)

# வவுனியா மாவட்ட அபிவிருத்திக்காக கடந்த வருடம் 2537 மில்லியன் ரூபா

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை

வடக்கு மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக கடந்த வருடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2537 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்கள் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்பட்ட 102 கிராம சேவை பிரிவுகளில் 505 கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் வீதிகளை புனரமைக்க 85 மில்லியன் ரூபாவும் நெடுங்கேணி நீர்த்திட்டத்துக்காக 25 மில்லியன் ரூபாவும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஏழு கிராமங்களுக்கு நீர் வழங்குவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாவட்டத்தின் சிறிய மற்றும் மத்திய அளவிலான குளங்களை புனரமைக்க 23 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. முக்கியமாக 170 கிராம சேவகர் பிரிவுகளில் 220 கிராமங்களில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 29 செயற்திட்டங்களின் கீழ் 42 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ.ம.சு.மு... (தொடர்ச்சி)

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வேட்பு தாக்கல் செய்யும் பணிகள் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தன. அந்த வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான வேட்பு மனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிலை சின்னத்தையுடைய ஆளும் கூட்டமைப்பின் கட்சிப் பெயரை தவறாக வேட்பு மனுவில் குறிப்பிட்டமையே வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. வேட்பு மனுவில் முன்னணி என்பதற்கு பதிலாக அமைப்பு என்று குறிப்பிடப்பட்டிருந்தமையே நிராகரிக்கப்பட்டமைக்கு காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச சபை லிந்துலை தலவாக்கலை நகர சபை ஆகியவற்றுக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் 63 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவற்றில் 20 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் 43 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் ஐக்கிய தேசிய கட்சி யாழ். மாவட்டத்தின் 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சியும் 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளது.

### சுயாதீன... (தொடர்ச்சி)

நடவடிக்கைகளின்போது கட்சிகளிடையேயும் கட்சி ஆதரவாளர்களிடையேயும் ஏற்படும் அசம்பாவிதங்களைத் தடுத்து அச்சமற்ற சுதந்திரமான தேர்தலுக்கான களத்தினை ஏற்படுத்துவதற்கே இந்த விசேட ஏற்பாடு எனவும் அதில் பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண நகர் உட்பட பல பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்தோடு, விசேட ரோந்து நடவடிக்கைகளும் இரவுநேரங்களில் முன்னெடுக்கப்படுகின்றன.

தேர்தல் காலங்களை மையமாக வைத்து பல்வேறு கொள்ளைச் சம்பவங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. எனவே, பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என்பதுடன், சந்தேகத்திற்கு இடமானவர்கள் தொடர்பாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது பொலிஸ் அவசர அழைப்பான 119 க்கோ தெரியப்படுத்தலாம்.

யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு தொடர்பாக கடந்த வாரம் யாழ். செயலகத்தில் விசேட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அதன்போது, இப்பகுதியில் இடம்பெறும் கொள்ளை, கொலை போன்ற பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதுடன், அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

அதன் அடிப்படையிலேயே பொலிஸாரும் இராணுவத்தினரும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். எனவே, பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பினை அதிகரிக்கும் பொருட்டு படையினர் கேந்திர நிலைகளில் நிறுத்தப்பட்டுள்ளதுடன் இரவுநேர ரோந்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என யாழ். இராணுவ கட்டளைதளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் இடம்பெற்றுவரும் கொள்ளைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை முன்னிட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் சொன்னார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், மூன்று தசாப்த காலமாக போர் நடவடிக்கைகள் காரணமாக பல்வேறு பிரச்சினைகளை யாழ். மக்கள் எதிர்நோக்கி வந்தனர். தற்போது சுதந்திரத்தை அனுபவித்து வருகின்ற நிலையில் குடாநாட்டில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதனால், யாழ். குடாநாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்குகளைப் பேணுவதற்காக பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் பல்வேறு பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்றனர்.

மேலும் யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக கடத்தல், கொலை, கொள்ளை மற்றும் கப்பம் கோரல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதுடன் அவை தனிப்பட்ட தேவை கருதிய சம்பவங்களாகவே அமைந்துள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளன. இந் நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் கூட்டுரோந்திலும் ஈடுபடுவர் என்றார்.

### லண்டனில்... (தொடர்ச்சி)

லண்டனில் ஒரு கோடி பவுண்களை அதாவது நூற்றி எழுபத்தாறு கோடி ரூபாவை மோசடி செய்துள்ளது.

அதன் தலைவராக இலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் செயற்பட்டுள்ளார். அவரின் கீழ் இன்னும் இரண்டு இலங்கையரும் ஒரு பாகிஸ்தானியரும் இரண்டு வெள்ளையரும் செயற்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி கறுப்புப் பணத்தை சட்டபூர்வமான பணமாக்கிக் கொடுக்கும் நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

இலங்கையர்களான மூவருக்கு தற்போது சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கர்களான வெள்ளையர்கள் இருவருக்கும் எதிராக வழக்கு நிலுவையிலுள்ளது.

### மார்ச்... (தொடர்ச்சி)

தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல்கள் நேற்று 27 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

நாடளாவிய ரீதியில் 600 சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் வேட்பு மனுதாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ். மாநகர சபை தவிர்ந்த ஏனை பகுதிகளில் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்க ஆறு இலட்சத்து 96 ஆயிரத்து 587 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இம்முறை தேர்தல் 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரமே நடைபெறவுள்ளது என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் குகநாதன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மார்களுக்கான பயண டிப்ஸ்

**பொ**துவாக பயணங்கள் என்றாலே முறையான திட்டமிடல் இருந்தால்தான் இனிமையானதாக அமையும். அதுவும் சிறு குழந்தைகளுடன் பயணம் மேற்கொள்ளும்போது கூடுதல் கவனம் அவசியம். எல்லா விஷயங்களிலும் சிறப்பாக திட்டமிடும் ஆற்றலுடைய பெண்களுக்கு சில சிறிய முன்னெற்பாடுகளை செய்து கொண்டால் குழந்தைகளுடன் மேற்கொள்ளும் பயணமும் குதூகலமானதாக அமையும்.

**அதற்கு சில ஆலோசனைகள்...**

1. நீங்கள் செல்லவிருக்கும் இடத்தின் காலநிலைக்கு ஏற்றாற் போல், குழந்தைகளுக்கு ஆடைகளை எடுத்துச் செல்ல வேண்டும். வெப்பமான பகுதி என்றால் பருத்தி ஆடைகளையும், குளிர் பகுதி என்றால் அதற்கு ஏற்ற உடைகளும் அவசியம்.

2. கோடை விடுமுறைப் பயணம் என்றால், முன்னதாகவே டாக்டருடன் ஆலோசித்து குழந்தைகளுக்கான தடுப்பு ஊசிகளை போட வேண்டும்.

3. டிராவல் ஏஜென்சிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படும் பயணம் என்றால் குழந்தைகளை அழைத்துச் செல்வது குறித்து அவர்களிடம் முன்கூட்டியே தெரிவிப்பது நல்லது. இப்போது குழந்தைகளுக்கு சிறப்பு ஏற்பாடுகளை பல ஏஜென்சிகள் செய்து தருகின்றன.

4. பயணத்தின் போது, குழந்தைகளின் ஆடைகளை எளிதில் எடுக்க வசதியாக வைத்துக் கொள்ள வேண்டும். பொம்மைகள், சிறிய விளையாட்டுப் பொருள்களை எடுத்துச் செல்வதும் அவசியம்.

5. எளிதில் ஜீரணமாகக் கூடிய மற்றும் திரவ உணவுப் பொருள்களையே குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். கூடுதலாக உணவுப் பொருள்களையும், தண்ணீரையும் எப்போதும் வைத்துக் கொள்வது அவசியம். அசைவ உணவுகளை பெரும்பாலும் தவிர்த்து விடுங்கள்.

6. பல இடங்களுக்கு தொடர்ந்து பயணம் மேற்கொள்ளும்போது, ஹோட்டல் அறைகளை முன்கூட்டியே பதிவு செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் கடைசி நேரத்தில் அறை கிடைக்காமல் அலைவதைத் தவிர்க்கலாம்.

7. குழந்தைகளை எப்போதும் தோளிலேயே தூக்கிச் செல்லுங்கள். உங்கள் உடலுடன் குழந்தையின் உடல் தொட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அதன் மூலம் குழந்தையின் உடல்நிலையை நீங்கள் எளிதாக அறிந்து கொள்ள முடியும்.

8. கார்களில் பயணிக்கும் போது, குழந்தைகளை காரிலேயே வைத்து விட்டு இறங்கிச் செல்லக்கூடாது. முக்கியமாக ஏ.சி.யை வைத்து விட்டுச் செல்லக்கூடாது.



## சுறா வறை



**தேவையான பொருட்கள்**

சுறா-250 கிராம், தேங்காய்-1/2பாதி, தனிமிளகாய்த்தூள்-2தேக்கரண்டி, மஞ்சட் தூள்-1/2தேக்கரண்டி,மிளகு-1/4 தேக்கரண்டி,வெள்ளைப்பூடு-4,சின்ன வெங்காயம்-5,செத்தல் மிளகாய்-2,கறிவேப்பிலை- சிறிதளவு,கடுகு-1/4தேக்கரண்டி,பெருஞ்சீரகம்-1/2தேக்கரண்டி,முருங்கையிலை-ஒரு கைப்பிடி, உப்பு- தேவையான அளவு, தேங்காயெண்ணெய் -1மேசைக்கரண்டி.

**செய்முறை**

சுறாவைச் சுத்தம் செய்து நடுத்தரத் துண்டுகளாக வெட்டி ஒரு தம்ளர் நீரும் சிறிது உப்பும் சேர்த்து வேக வைக்கவும்

வெங்காயம்,மிளகாய்,கறிவேப்பிலை றைச் சுத்தம் செய்து குறுணலாக வெட்டிக் கொள்ளவும்.

பூடு,மிளகு இவற்றை அரைப்பதமாக அரைத்துக் கொள்ளவும்.

சுறா வெந்து நீர் வற்றியதுடன் இறக்கி சூட்டுடன் நன்கு மசித்துக் கொள்ளவும்.

தேங்காய்ப்பூவுடன்,மஞ்சள்,மிளகாய்த்தூள்,செத்தல்,மிளகாய்,கறிவேப்பிலை,கடுகு,பெருஞ்சீரகம்,இவற்றைத் தாளித்துக் கொள்ளவும்.தாளிதம் பொன்னிறமாகியதும் சுறாக்கலவையை அதனுள் இட்டு வறுக்கவும்.

இடையில் முருங்கையிலை,அரைத்த கூட்டு இவற்றைச் சேர்த்து அடிப்பிடிக்க விடாது வறுத்து,இலேசாகக் குழைந்த பத்தில் இறக்கிக் கொள்ளவும்.

**குறிப்பு**

இதே முறையைப் பின்பற்றி நண்டு, இறால்,திருக்கை என்பவற்றில் வறை தயாரிக்கலாம்.

## மரக்கறி சூப்



**தேவையான பொருட்கள்**

- கரட்-50கிராம், கோவா-50 கிராம், போஞ்சி - 50 கிராம், லீக்ஸ்-50கிராம், முள்ளங்கி-50கிராம், துவரம்பருப்பு-1 மேசைக்கரண்டி, வெங்காயம் - 5, வெள்ளைப்பூடு-4 பல்லு, மிளகு-1/4தேக்கரண்டி, நற்சீரகம்-1/2 தேக்கரண்டி, உப்பு- தேவையான அளவு, எலுமிச்சம்புளி-1தேக்கரண்டி, தண்ணீர்- 6 தம்ளர்.

**செய்முறை** காய்கறிகளைக் கழுவிச் சுத்தஞ் செய்து சிறிய துண்டுகளாக வெட்டவும். வெட்டிய காய்கறி, துவரம் பருப்பு, வெங்காயம், வெள்ளைப்பூடு இவற்றைத் தண்ணீரிலிட்டு அவியவிடவும். நற்சீரகம், மிளகு, இரண்டையும் சுத்தமான வெள்ளைத் துணியிலிட்டுத் தளர்ந்த பொட்டலமாகக் கட்டிக் காய்கறிகளுடன் சேர்ந்து அவியவிடவும். காய்கறிக்ள நன்கு மசிய வெந்ததும் கோன்பிளவரைச் சிறிது நீரிலிட்டு கரைத்துச் சேர்த்து நன்கு கடைந்து இறக்கவும். பின் வடித்து உப்பும், எலுமிச்சம் புளியும் சேர்த்துப் பயன்படுத்தவும்.

**குறிப்பு**

சிறு குழந்தைகள், வளரும் பருவத்தினர், கர்ப்பவதிகள், நோயாளர்களுக்கு மிகவும் பொருத்தமானது. விரும்பின் வடிக்காது மசித்துக் காய்கறிகளுடன் சேர்த்துப் பரிமாறலாம். காய்கறிகளுடன், கோழி எலும்பைச் சேர்த்து கோழிச் சூப்பாக பயன் படுத்தலாம்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி விளையாட்டுத் துறை அபிவிருத்தி

**யுத்தத்தால் பின்னடைவை சந்தித்த கிளிநொச்சியின் விளையாட்டுத்துறை மீண்டும் புத்துணர்ச்சி பெறும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.குமாருடன்**

**ஒரு சந்திப்பு**



கிளிநொச்சி நகரப்பகுதியும் மாவட்டமும் கடந்த காலங்களில் விளையாட்டுத்துறையில் வளர்ச்சி கண்ட மாவட்டம், மாகாணம், தேசிய மட்டம் என பல விளையாட்டு வீரர்கள் கழக அணிகள் நன்கு பிரகாசித்தது.

அத்துடன் பிரமாண்டமான விளையாட்டு பெரு விழாக்களையும் நடத்தி வடக்கு, கிழக்கை சேர்ந்த பல கழகங்களையும் ஆயிரக்கணக்கான வீர, வீராங்கனைகளையும் கிளிநொச்சியை நாட வைத்த காலங்களும் இருந்தன.

இவற்றை மேற்கொள்ள கிளிநொச்சி நகரில் மிகப் பிரபல்யமிக்க றொற்றிக்கோ மைதானம் அமைந்திருந்தது. வெள்ளக்காரர் ஆட்சி செய்த காலத்தில் அப்போதைய நிர்வாகி றொற்றிக்கோவின் பெயர் இம் மைதானத்திற்கு சூட்டப்பட்டது.

ஒரு புறம் கிளிநொச்சி குளமும், மறுபுறம் கிளிநொச்சி ஏ 9 வீதியும் நகருமாக இயற்கை அம்சங்கள் நிறைந்த இம்மைதானம் இன்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானம் என அழைக்கப்படுகிறது.

இக்கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் சிறுபிராயம் முதல் விளையாட்டு பயிற்சியை பெற்று விளையாட்டு சிரேஷ்ட மத்தியஸ்தராகவும், பயிற்றுவிப்பாளராகவும், விளையாட்டு வீரராகவும், கிளிநொச்சி கரைச்சி பிரிவின் விளையாட்டு உத்தியோகத்தராகவும், விளங்கும் எஸ். குமார் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான சில கருத்துக்களை முன்வைத்தார். அவரது கருத்துக்கள் யாழ் ஓசைக்காக பிரத்தியோகமாக வழங்கப்படுகிறது.

முன்பெல்லாம் கிளிநொச்சி விளையாட்டுத் துறையில் ஏனைய மாவட்டத்தவர்களுக்கு இணையாக அபிவிருத்தியடைந்திருந்தது. ஏனைய மாவட்டங்களுடன் பல துறை விளையாட்டுக்களில் பங்கு கொண்டு பல வெற்றிகளை சந்தித்து வந்தது. குறிப்பாக தலை சிறந்த உதைபந்தாட்ட அணிகள் இருந்தன.

மெய்வல்லுநர் போட்டி, கபடி, கரப்பந்தாட்டம், கிரிக்கெட் என சகல விளையாட்டு வீரர்களும் இருந்தனர். பலர் தேசியமட்ட வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் திகழ்ந்தனர்.

இன்றும் யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்த கிளிநொச்சி வீர, வீராங்கனைகள் அங்கு நன்கு பிரகாசிக்கின்றார்கள். நாம் யுத்தத்தால் பாரிய இழப்புக்களையும் சொல்லெணாத்துயரங்களையும் சந்தித்தவர்கள். நான் கூட இவ்வாறு பாதிக்கப்பட்டவன்தான்.

இதையிட்டு தொடர்ந்தும் சிந்திந்துக் கொண்டிருக்காமல் மனத்திடத்துடன் எமதும் எமது சந்ததியினரது நல் வாழ்விற்காக திட உறுதி கொள்ள வேண்டும்.

இன்று கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை விளையாட்டுத்துறை பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. சிறந்த விளையாட்டு பயிற்சிவிப்பாளர், மத்தியஸ்த்தர், விளையாட்டு உத்தியோகத்தராக பிரகாசித்த உருத்திரபுரம் சிவா உட்பட பல வீரர்களையும் இழந்து நிற்கிறோம்.

அவ்வாறான பெரிய கழகங்களாக இருந்த பழம்பெரும் விளையாட்டு கழகம் கிளிநொச்சி இளம் பறவைகள் விளையாட்டு கழகம். இக்கழகம்தான் உதைபந்தாட்டத்தில் உருத்திரபுரம் அணியுடன் இறுதிப் போட்டிக்கு வரும்.

இதில் பங்கேற்றி பயிற்சி எடுத்து பயிற்றுவிப்பாளராக வந்தவன்தான் நான். கிளிநொச்சி இன்று விளையாட்டுத்துறையில் பின்னடைவாக உள்ளது. விளையாட்டு வீரர்கள் சிறுகச் சிறுக பயிற்சி எடுக்க வேண்டும். பயிற்சிதான் உயர்ச்சி தரும்.

கிளிநொச்சியில் சிறந்த வியைாட்டு வீரர்கள் இன்றும் இருக்கிறார்கள். சிரேஷ்ட விளையாட்டு வீரர்களான நிகால், விக்கினேஸ்வரன், வி.கருணா இவர்களைக் கூட குறிப்பிடலாம். இவர்கள் தொடர்ந்தும் விளையாடாமல் பயிற்றுவிப்பபாளராக மாறவேண்டும்.

விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் பங்கு பெற வேண்டும். வெற்றி பெற வேண்டும் என்பதல்ல. போட்டிகளில் பங்குபெற பங்குபெற வெற்றி தானாக வரும். இதற்கு நான் முன்பு சொன்னது போல பயிற்சி மிக அவசியம்.

அத்துடன் கட்டுக்கோப்பு, நல் ஒழுக்கம், கீழ்ப்படிவு, தலைமைக்கு கட்டுப்படல், பிற விளையாட்டு வீரர்களை மதித்தல், என்பன முக்கியம். விளையாட்டுத் துறை உடல், உள, நல விருத்திக்கு மிகவும் முக்கியம்.

கிளிநொச்சியை பொறுத்த வரை எல்லா மாணவர்களும் இளைஞர்-யுவதிகளும் விளையாட்டுத்துறையில் கவனம் செலுத்த வேண்டும். மீண்டும் இத்துறையில் கிளிநொச்சி முன்னுக்கு வரவேண்டும். முன்னுக்கு வரும் இவ்வாறு விளையாட்டு அதிகாரி எஸ்.குமார் குறிப்பிட்டார்.

**கே.வி.கே.திருலோகமூர்த்தி**





விமானி இல்லாமலேயே விமானத்தை இயக்கி விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். விமானி இல்லாத விமானம் இரண்டாவது உலகப் போரின்போது பயன்படுத்தப்பட்டது. போர் முடிந்த பிறகு ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு பயன்படுத்த புதுமையான அம்சங்கள் புகுத்தப்பட்ட ஒரு தானியங்கி விமானம் தயாரிக்கப்பட்டது. இதன் பெயர் 'ஸ்கை மாஸ்டர்' இதை 1947இல் அட்லாண்டிக் கடல் மீது பறக்கவிட்டனர். 2400 மைல் தூரம் பறந்து சென்று திரும்பி வந்தது. முன் கூட்டியே சரியாக முறைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த மின் மூளை ஒன்று விமானம் பறப்பதற்கான எல்லா பொறுப்பையும் ஏற்றுக் கொண்டது.

அதாவது விமானம் தரையிலிருந்து மேலே ஏறவும் குறிப்பிட்டி உயரத்தில் பறக்கவும் தரையில் இறங்கவும் பிரேக்குகள் போடுவதுமான எல்லா பணிகளைச் சரியாக செய்து முடித்தது. பயணிகள் விமானத்தையும் விமானி இல்லாமல் இயக்க விஞ்ஞானிகள் எடுத்த முயற்சியின் விளைவாக பயணிகள் இல்லாமல் ஒன்றை 1966ஆம் ஆண்டு இயக்கி லண்டன் விமான நிலையத்தில் பலமுறை தரையிறக்கப்பட்டது.

சில மாதங்களுக்கு பிறகு 98 பயணிகளுடன் நியூயார்க் கென்னடி விமான நிலையத்திலிருந்து 'போயிங் 727' என்ற விமானம் தானியங்கி முறையில் வானில் பறந்தது ஆபத்து ஏற்பட்டால் உதவுவதற்கு விமானி ஒருவர் இருந்தார். ஆனால் அவர் விமானத்தை இயக்கவில்லை. அப்போது விமான நிலையத்தில் பயங்கரமான பனி மூட்டம் இருந்த போதும் விமானம் பத்திரமாக தரையிறங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் மலர்



படத்தில் மொத்தம் எத்தனை பல்லிகள் உள்ளன என கண்டுபிடியுங்கள்.




ம.கொலினஸ் தரம் 9
யா/முருகமூர்த்தி வித்தியாலயம் உடுவில்

# அசுர ஆயுதம்



கொல்வது எளிய செயல் அல்ல. மிகவும் வலிமை வாய்ந்த ஆயுதத்தால் தான் அவனை வீழ்த்த முடியும். அப்படிப்பட்ட அயுதம் ததீசி முனிவரின் முதுகு எலும்புதான். அந்த எலும்பில் தேவ அசுர ஆயுதங்கள் அனைத்தும் சேர்ந்து உள்ளன. அவர் உயிர்த்தியாகம் செய்தால்தான் அந்த எலும்பு கிடைக்கும், என்றனர் அவர்கள்.

ததீசி முனிவரிடம் சென்றான் அவன். விருத்திராசுரனின் கொடுமைகளைத் தாங்காது மூவுலகங்களும் துன்பப்படுகின்றன. நிங்கள் நினைத்தால் அந்த அசுரனைக் கொன்று மூவுலகங்களையும் காப்பாற்ற முடியும், என்றான்.

''நான் என்ன செய்ய வேண்டும்?!''

''உங்கள் முதுகெலும்பு தேவை. அசுரர்களின் ஆயுதங்கள் சேர்ந்த மிக வலிமையாக உள்ளன. அந்த எலும்பால் செய்த ஆயுதத்தால் தான் அவனைக் கொல்ல முடியும்,'' என்று தயக்கத்துடன் சொன்னான் அவன்.

இதைக் கேட்ட அவர் உலகம் வாழ தன் உயிரை இழக்கத் துணிந்தார். அவர் முதுகெலும்பில் ஆயுதம் செய்தான் அவன். அதற்கு வஜ்ஜிராயுதம் என்று பெயர் வைத்தான் அதை விருத்திராசுரனின் மீது விட்டான். அது அசுரனின் மார்பில் பாய்ந்தது அவன் உயிரைக் குடித்தது. கொடிய அசுரன்மாண்டதை அறிந்து எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தனர்.





| கண்டு பிடிப்புக்கள் | கண்டுபிடித்தவர் | ஆண்டு | நாடு |
|---|---|---|---|
| உந்துருளி | G.டைம்லர் | 1885 | ஜேர்மனி |
| நுணுக்குக்காட்டி | Z.ஜன்சென் | 1590 | நெதர்லாந்து |
| ஒலி வாங்கி | கிரகம்பெல் | 1876 | அமெரிக்கா |
| தீக்குச்சி | யோன்வோக்கர் | 1826 | பிரித்தானியா |
| இயந்திரச்சுடுகலன் | ஜேம்ஸ்புக்லி | 1718 | பிரித்தானியா |
| ஒலி பெருக்கி | கொரேஸ் ஸ்ோட் | 1900 | பிரித்தானியா |
| நெசவு இயந்திரம் | E.காட்ரைட் | 1785 | பிரித்தானியா |
| தொடரூந்து இயந்திரம் | றிச்சட்ட்ரேவித்திக் | 1804 | பிரித்தானியா |
| மின்உயர்த்தி | எலிசா ஜி.ஒட்டிஸ் | 1852 | அமெரிக்கா |
| சலவை இயந்திரம் | J.F.கென்ரேல் | 1934 | அமெரிக்கா |





நேசராஜ்குமார் வித்யாசாகர் தரம் 7
கிளிநொச்சி ம.வி

### உலகிலேயே அண்டீஸ் மலைத்தொடர் தான் மிகவும் நீளமானது

அண்டீஸ் மலைத்தொடர் தென் அமெரிக்காவின் மேற்கு கடற்கரையோரம் 7 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் உள்ளது. இது ஏழு நாடுகள் வரை படர்ந்து விரிந்து காணப்படுகிறது. ஆர்ஜன்டீனா, பொலிவியா, சிலி, கொலம்பியா, பெர, ஈக்வடார் மற்றும் வனிசுலா ஆகிய நாடுகளை தொட்டுச் செல்கிறது.



யாழ். மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பு சித்திரப் போட்டியில் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ் / ஒஸ்மானியாக் கல்லூரி மாணவி ஏ.எல். எப்.பஸ்னாவிற்கு இராணுவ பாதுகாப்பு பிரிவினர் வழங்கிய ரூபா 2 ஆயிரம் ரூபா பணமும் பரிசில்களையும் அதிபர் வழங்கவதையும் அருகில் ஆசிரியை நிற்பதையும் படத்தில் காணலாம்.




நேசராஜ்குமார் வித்தியாசாகர் தரம் 7C
கிளி/கிளிநொச்சி ம.வி.

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லேடனின் பாதுகாவலர் கிலானிக்கு ஆயுள் தண்டனை

கென்யா, தன்சானியாவிலுள்ள அமெரிக்க தூதரகங்கள் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்திய சம்பவத்தில் முக்கிய பங்கு வகி த்தவரும், சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனின் பாதுகாவலரான அகமது கல்பான் கிலானிக்கு அமெரிக்க நீதிமன் றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளி த்தது.

கடந்த 1998 ஆம் ஆண்டு கென்யா மற்றும் தன்சானியாவில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் சர்வதேச பயங்கர வாதி ஒபாமா பின்லேடனின் அல் - குவைதா அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் குண்டு வீசி தாக்குதல் நடத்தினர். இதில் 224 பேர் பலியாயினர்.

இச் சம்பவம் சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த தாக்குதலை முன்னிட்டு நடத்தியது பின்லேடனின் பாதுகாவலரான அகமது கல்பான் கிலானி என்று விசாரணையில் உறுதியானது. இவரைப் பிடிக்க, அமெரிக்க உளவுப்படையினர் வலை வீசி தேடி வந்தனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டார். கடந்த ஆறு ஆண்டுகளாக குவாண்டன் மனோ மற்றும் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டார். கடந்தாண்டு குவண்டன் மானோ மன் ஹோட்டனில் உள்ள சிறைக்கு கிலானி மாற்றப்பட்டார். இவர் மீதான விசாரணை, அமெரிக்க சிவில் நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

விசாரணையின் போது, கிலானி மீதான குற்றத்தை மறுத்தார். வழக்கை விசாரித்த நீதிபதி லெவிஸ், 'இந்த சம்பவத்தில் அப்பாவி மக்களின் உயிர் பலி வாங்கப்பட்டுள்ளது. இது கொடூரமான குற்றம். விளைவுகளை நன்கறிந்து திட்டமிட்டு இந்த பயங்கரவாதத்தை நிறைவேற்றியுள்ளனர். இதற்கு கடும் தண்டனை அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.



ஜெனிவாவில்நடைபெற்ற மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான நல கருத்தரங்கில் (இடமிருந்து வலமாக)உலக சுகாதார அமைப்பின் இயக்குனர் சீனாவின் மார்கரெட் சான், தன்சானியா ஜனாதிபதி ஜகாயா கிட்வேட்டி, ஐ.நா., பொது செயலாளர் பான்கிமூன்,கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மொஸ்கோ குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்கு அஞ்சலி



மொஸ்கோ விமான நிலைய குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்காக ரஷ்யாவில் ஏராளமானவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ அருகே, டொமொடிடோவோ சர்வதேச விமான நிலையத்தில் சமீபத்தில் பயங்கர குண்டு வெடித்தது.

இச்சம்பவத்தில் 35 பேர் பலியாயினர் 180 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவத்துக்காக ரஷ்ய அரசு துக்கம் அனுசரிக்கிறது. இதையொட்டி, மொஸ்கோ உள்ளிட்ட நகரங்களில் தேசியக் கொடி அரை கம்பத்தில் பறக்க விடப்பட்டன. அரசு விழாக்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இறந்தவர்களுக்கு தேவாலயங்கள் மற்றும் மசூதிகளில் இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டன. இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் பிரிட்டன், ஜெர்மனி, கிர் கிஸ்தான், தஜிகிஸ்தான், உக்ரைன், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த எட்டு பயணிகளும் பலியாகியுள்ளதாக ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் பயணிகளை ஜனாதிபதி மெட்வடேவும், பிரதமர் புடினும் சந்தித்து உடல் நலம் விசாரித்தனர்.

# மரணமடைந்ததாக நம்பப்பட்டவர் தொலைக்காட்சியில் தோன்றிய அதிசயம்



மரணமடைந்த தாக நம்பப்பட்ட நபர் மீண்டும் தனது குடும்பத்தவர்களோடு இணைந்த சம்பவம் ஒன்று பிரிட்டிஷ் கொலம்பியா வில் இடம்பெற்றுள்ளது.

டெனி மக்கனோன் என்ற 54 வயது நபர் கடந்த ஐந்தாண்டுகளாக குடும்பத்தவர்களுடன் தொடர்பின்றி இருந்தவர். மன அழுத்தம் மற்றும் மதுப்பழக்கம் என்பனவற்றால் பாதிக்கப்பட்டு குடும்பத்தைவிட்டு வெளியேறி வான்கூவர் நகர வீதிகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்த இவர் காலப்போக்கில் காணாமலே போய் விட்டார்.

வீதிகளில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த இவர் எங்கோ இறந்துவிட்டார் என்றே உறவினர்களும் கருதி பேசாமல் இருந்து விட்டனர். அண்மையில் தொலைக்காட்சியில் வீட்டு வசதிகள் இன்றி வீதிகளில் கஷ் டப்பட்டுகின்றவர்கள் பற்றி ஒரு விவர ணம் ஒளிபரப்பாகியது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த இவரின் சகோதரருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அதுவரை இறந்ததாக நம்பப்பட்ட டெனி மக்னோனின் பிரச்சினை பற்றியும் அந்த நிகழ்ச்சியில் பேசப்பட்டது. இவர் நல்ல ஆரோக்கியத்துடன் காணப்பட்டார். நன்றாகப் பேசினார். ஒரு நல்ல வீட் டிலும் அவர் இருப்பது தெரியவந்தது. வீடின்றி உள்ளவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் நன் மைகள் மற்றும் அந்தத் திட்டம் தனது வாழ்வை மாற்றியமைத்த விதம் என்பன பற்றி அவர் இந்த நிகழ்ச்சியில் விரிவாகப் பேசினார்.

கனடாவின் மனநல ஆரோக்கிய ஆணைக்குழு சில சமூக நல அமைப்புக்களுடன் சேர்ந்து அமுல் செய்து வரும் திட்டத்தின் மூலமே இவர் நன்மையடைந்துள்ளார். நிகழ்ச்சியைப் பார்த்த சகோதரர் தனது மற்ற சகோதரிகளிடம் இது பற்றி அறிவித்துள்ளார்.



இத்தாலி நாட்டின் சான் ரொஸ்சோர் கடற்கரையில் இறந்த நிலையில் இராட்சத திமிங்கலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது. இதனை ஒருவர் தனது கமெரா மூலம் படம்பிடிப்பதை காணலாம். இவ் திமிங்கலத்தின் நீளம் 25 மீற்றராகும்.

# அரைகுறை ஆடை பொம்மைகளுடன் வலம் வரும் முதியவர்

கனடாவைச் சேர்ந்த முதியவர் ஒருவர், அரைகுறையான உடை அணிவிக்கப்பட்ட கவர்ச்சி பொம்மைகளுடன், ஒவ்வொரு நாடாக சுற்றி வருகிறார். 'தப்பாக நினைத்துக் கொள்ள வேண்டாம். இது எனது பொழுது போக்கு' என்கிறார், அவர்.

கனடாவைச் சேர்ந்தவர் டேவ் ஹொக்கி. இவருக்கு வயது 57. முதுமை வாட்டும் இந்த வயதில் கூட, இவர் அசாதாரணமான காரியங்களை செய்து வருகிறார்.



சிறுவயதில் இருந்தே பொம்மைகள் மீது இவருக்கு ஆசை அதிகம். வயது அதிகம் ஆன பின்னரும் கூட, பொம்மைகள் மீதான ஆசை, இவரை விடவில்லை. தனது வீடு முழுவதும் பொம்மைகளாக வாங்கி குவித்து வைத்துள்ளார்.

தற்போது அவருக்கு வினோதமான ஆசை வந்துள்ளது. கவர்ச்சியான பெண் பொம்மைகளுடன் இந்த உலகத்தைச் சுற்றி வர வேண்டும், பொம்மைகள் பற்றிய ஆவண ப்படம் ஒன்றையும் தயாரிக்க வேண்டும் என் பதுதான், அந்த ஆசை. உடனடியாக, தனது விருப்பங்களை செயல்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நவாலி வடக்கு இலகடி மக்களுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாண நிருபர்)

நவாலி வடக்கு -இலகடி வீதியில் வசிக்கும் எட்டுக் குடும்பங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. இதற்கான வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் மானிப்பாய், நவாலி, கட்டுடை ஆகிய கிராமங்களுக்கும் பொக்கணையிலிருந்து சுன்னாகம், சங்குவேலி ஊடாக குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இக்குடி நீரை மேலும் பல கிராமங்களுக்கு விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளில் மேற்படி சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, குழாய்மூலம் குடிநீர் வீடுகளுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் நவாலி வடக்கிலுள்ள இலகடி வீதியில் வசிக்கும் எட்டுக் குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீரை வழங்குவதற்கான நடவடிக்கையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் ஈடு பட்டுள்ளனர்.

தற்பொழுது நிலத்திற்கடியிலான குழாய் பொருத்தும் வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதேவேளை குடிநீர் பெறுவதற்கு விண்ணப்பித்த பல குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.




# சுயதொழில் ஓய்வூதியக் கொடுப்பனவுத் திட்டத்தில் அதிகம் பேரை உள்ளடக்கிய கோப்பாய் பிரதேசம்

கைதடி,

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் கடந்த ஆண்டு அதிகம் பேரை இணைத்து கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாம், மூன்றாம் இடங்களை நல்லூர், பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவுகள் பெற்றுள்ளன. இத்திட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு பயனாளிகளை இணைத்த அடிப்படையில் 2006 ஆம் ஆண்டு 02 ஆம் இடத்தையும், 2007 ஆம் ஆண்டு 03 இடத்தையும் ஏற்கெனவே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2008, 2009 ஆம் ஆண்டுகளில் ஆயிரம் பேருக்கு மேல் இணைத்து சிறப்பு பரிசையும் இப்பிரதேச செயலகப் பிரிவு பெற்றுள்ளது. தொடர்ச்சியாக 5 வருடங்கள் சிறப்பான செயற்பாட்டைக் காட்டிய பிரதேச செயலகப் பிரிவாக கோப்பாய் பிரதேசம் உள்ளது. பிரதேச செயலரின் வழிநடத்தலில் சமூக சேவைகள் அதிகாரி இத்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றார்.

யாழ். மாவட்டம் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் தேசிய ரீதியாக முதலாம் இடத்தை அடைந்திருந்தது. ஆனால் ,சென்ற வருடம் 5 ஆம் இடத்தை இப் பிரதேசம் பெற்றுள்ளது. மூவாயிரம் ரூபாவுக்கு குறைந்த வருமானமுடைய வறுமைக் கோட்டிற்கு உட்பட்டோருக்கான 'சகன' திட்டத்தில் பயனாளிகளை இணைப்பது சென்ற வருடம் நிறுத்தப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

சென்ற ஆண்டின் இறுதிவரை இணைக்கப்பட்ட 33 ஆயிரத்து 484 பயனாளிகளில் அதிகமானோர் 'சகன' திட்டத்தில் தான் இணைந்துள்ளனர். யாழ்.மாவட்டச் செயலகத்தில் சென்ற வருடம் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு வர்த்தக அபிவிருத்தி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகன திட்டத்தை மீள ஆரம்பிக்க முயற்சிப்பதாக குறிப்பிடிருந்தார்.

ஆனால், திறைசேரியின் நிதிச்சுமை கருதி சபையின் தலைமைப்பீடம் இத்திட்டத்தை மீள நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கவில்லையெனக் கூறப்படுகின்றது. ஆறு சுயதொழில் ஓய்வூதியத்திட்டங்களில் தற்போது மூவாயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களை உள்ளடக்கிய வெகுமதி சம்பத்துக்கள், சுரக்கும ஆகியவையே நடைமுறையில் உள்ளன.

ஆயினும் முன்னர் இருந்த 3 திட்டங்களிலும் ஏற்கெனவே இணைந்திருந்தவர்கள் அதற்குரிய நன்மைகளைப் பெற தகுதியுடையவர்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிதித் திட்டமிடல் 2008, 2009, 2010 ஆகிய வருடங்களுக்குரிய தேசிய பரிசளிப்பு விழா மிக விரைவில் கொழும்பில் நடத்தப்படஉள்ளதாக கூறப்படுகின்றது.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் யாழ். மாட்ட அலுவலகம் இவ் வருடம் முதல் கணனி மயப்படுத்தப்பட்டதாக வலைப்பின்னல் மூலம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

புதிதாக இணைபவர்களுக்கு உறுதிப் புத்தகம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் வைத்தே உடனுக்குடன் வழங்கப்படஉள்ளது.

## நினைவஞ்சலிக் கூட்டம்

(அலுவலகநிருபர்)

இலங்கை வர்த்தக ஒன்றியத்தின் முன்னாள் வட மாகாண அமைப்பாளர் அமரர் பரராஜசேகரத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் யாழ். வண்ணை நாவலர் வித்தியாலய பொது மண்டபத்தில் நாளை மறுதினம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை ஆசிரிய சங்கத்தின் தலைவர் ச. தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

# நொசாரியன் ச.ச.நிலையம் நடத்திய போட்டி முடிவுகளின் விபரம் வெளியீடு

(அலுவலக நிருபர்)

கொழும்புத்துறை நொசாரியன் சனசமூக நிலையத்தினால் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடல் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாம் இடம் அழகரத்தினம் பிரதீபன் (அரியாலை), 2 ஆம் இடம் -செல்வி றோயல் பேரேரா சாமினி (திருநெல்வேலி), 3 ஆம் இடம்- செந்தில் நாதன் அகிலன் (நீர்வேலி), 4 ஆம் இடம்- ஜெராட் நிரோஷன் (யாழ்ப்பாணம்), 5 ஆம் இடம் புஸ்பராசா அன்ரனி பாலா (சுண்டிக்குளி) ஆகியோரே முதல் 5 இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களாவர்.

இசைக்கருவிகளை இசைக்கும் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு,

**தபேலா:**-1 ஆம் இடம்- த. துவாரகன் (அரியாலை), 2 ஆம் இடம் -த.கிரிதரன் (அரியாலை), 3 ஆம் இடம் -எட்மன் றொபேட் (கொழும்புத்துறை).

**பாண்ட்:-**

1 ஆம் இடம்- த. துவாரகன் (அரியாலை), 2 ஆம் இடம்- ஜெ. திருக்குமரன் (யாழ்ப்பாணம்) , 3 ஆம் இடம்- தி. அரவிந்தன் (யாழ்ப்பாணம்).

**ஓகன்:-**

1 ஆம் இடம்- த. துவாரகன் (அரியாலை) , 2 ஆம் இடம்- யே.சு ஜீவன் (நாவாந்துறை , 3 ஆம் இடம்- யோ. நிவேதன் (பண்டத்தரிப்பு) ஆகியோர் முதல் 3 இடங்களைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் விரைவில் வழங்கப்படும் என போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

# ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(அலுவலக நிருபர்)

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ். மாவட்டத்தில் புதிய தொழில்களை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் புதிய ஹோட்டல் பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

பகுதி நேரமாகவும் முழுநேரமாகவும் இக் கற்கைநெறிகள் நடத்தப்படவுள்ளன. ஹோட்டல் பராமரிப்பாளர் பயிற்சி, ஹோட்டல் மேற்பார்வையாளர், அல்லது உபசரணையாளர் பயிற்சி, ஹோட்டல் நவீன சமையலாளர் பயிற்சி ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இக்கற்கைநெறிகள் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் முக்கியம் பெறுகின்றன.

இக்கற்கை நெறிகளை பயில விரும்பும் மாணவர்கள் தமது சுய விபரக்கோவையுடன், விண்ணப்பிக்கும் பாட நெறியையும் குறிப்பிட்டு மாவட்ட இணைப்பாளர், இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை, இல. 375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்க முடியும் எனவும் அதன் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## இறுவெட்டுக்கள் வெளியீடு

(தெல்லிப்பழை)

அளவெட்டியைச் சேர்ந்த கவிஞரும் பாடகருமான சத்தியமூர்த்தியின் பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள் இரண்டின் வெளியீட்டு விழா எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பண்டிதர் மாணிக்கம் எழுதிய அளவெட்டி அழகொல்லை விநாயகர் குறித்த திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் ஒரு தொகுதியாகவும் இலங்கை வானொலியில் சத்தியமூர்த்தி பாடிய பாடல்கள் மறு தொகுதியாகவும் வெளிவரவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகமம் அதிரடிப்படை முகாமிலிருந்து 21 வருடங்களின் பின் படையினர் வாபஸ்

திருக்கோவில்,

அம்பாறை சாகமம் பிரதேசத்தில் அமைந்திருந்த விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து 21 வருடங்களின் பின் படையினர் நேற்று முற்று முழுதாக வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

கடந்த கால உள்நாட்டு யுத்தத்தின் போது 1990 ஆம் ஆண்டு சாகாமம் நீர்ப்பாசன திணைக்களக் கட்டிடத்தில் விசேட அதிரடிப்படை முகாம் அமைக்கப்பட்டது.

21 வருடங்களாக படை முகாமாக செயற்பட்டுள்ளது. இவ் முகாமிலிருந்து படையினர் நேற்று முற்றாக வாபஸ் பெறப்பட்டு கட்டிடத்தை நீர்ப்பாசன திணைக்களத்திடம் கையளித்துள்ளதாக சாகமம் விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 24 ஆம் திகதி திருக்கோவில் சங்கமன்கண்டி விசேட அதிரடிப்படை முகாமும் 21 வருடங்களின் பின்னர் மூடப்பட்டு கட்டிடம் பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பம்

## சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் அஸீஸ் தெரிவிப்பு

(அட்டாளைச் சேனை மேலதிக நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுவருவதாக கிழக்கு மாகாண சுகாதார, சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் யூ.எஸ்.ஏ.அஸீஸ் தெரிவித்தார்.

அன்மைய வெள்ள அனர்த்தத்தின் போது கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 7000 வீடுகள் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்களை அமைச்சின் கீழுள்ள சமூக சேவைகள் திணைக்களம் பெற்றுள்ளது.

முற்றாகச் சேதமடைந்த வீடுகளுக்கு வேறாகவும் பகுதிகளில் சேதமடைந்த வீடுகளுக்கு வேறாகவும் நஷ்டஈடு வழங்கப்படும் இதற்கேற்றவகையில் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெள்ள அனர்த்தத்தைத் தொடர்ந்து எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான வேலைத் திட்டங்களை சுகாதாரத் திணைக்களம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் இப்பணியினை ஏக காலத்தில் நிறைவேற்றுவதற்கான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பணிகளில் சிரத்தை காலதாமதம் காட்டப்படுமானால் அது குறித்த முறையீட்டினை அமைச்சுக்கு ஆதாரபூர்வமாகச் சமர்ப்பிக்க முடியும் எனவும் செயலாளர் அஸீஸ் குறிப்பிட்டார்.

# திருகோணமலையில் மீண்டும் மழை

(திருகோணமலை மேலதிக நிருபர்)

திருகோணமலையில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியுள்ளது.

கடந்த நான்கு வாரங்களாகப் பெய்த அடை மழையையும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கையும் அடுத்து மீண்டும் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. நேற்று மாலை 4 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை சாதாரண மழை பெய்யத் தொடங்கியது.

இதனால் மாலையில் தொழிலுக்குச் சென்றோர் பலர் தமது வீடுகளுக்குச் செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கினர். எனினும் மழை நீர்தேங்கி நிற்கக் கூடிய வகையில் பாரியளவிலான மழை பெய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கடல் அரிப்பு காரணமாக கோட்டைக்கல்லாறில் ஆலயமும் வீடுகளும் கடலில் மூழ்கும் அபாயம்

மண்டூர்,

கடல் அரிப்பு காரணமாக கோட்டைக் கல்லாறு, கோட்டை வாசல், நாகதம்பிரான் ஆலயமும் 12 வீடுகளும் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த அபாயம் சம்பந்தமாக மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவுக்கு கிடைத்த தகவலை அடுத்து அவர் அந்த இடத்தை அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டார். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ரி. மோகனதாஸ், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் எஸ்.அருள்ராசா, கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ரி. ஜோர்ஜ் ஆகியோரும் சென்றிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது கோட்டைக் கல்லாறு, முகத்துவாரம் வெட்டப்பட்டு மழை நீர் கடலுக்கு செல்ல வகை செய்யப்பட்டது. இதனை அடுத்து ஏரியில் கடல் அலை ஏற்பட்டு மண் அரிப்பை ஏற்படுத்தியுள்ளதாக கண்டறியப்பட்டது.

இதனை அடுத்து உடனடியாக பொ. செல்வராசா எம்.பி. அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் தொடர்பு கொண்டு நிலைமையை எடுத்துக் கூறினார். கடல் அரிப்பை தடுப்பதற்கான சுவர் அமைப்பதற்கான செலவு மதிப்பீட்டை அனுப்பி வைத்தால் அதற்குரிய பணத்தை மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைப்பதாக அமைச்சர் தன்னிடம் தெரிவித்ததாக பொ.செல்வராசா எம்.பி.கூறினார். உத்தேச மதிப்பீட்டின் அடிப்படையில் சுமார் 2 கோடி ரூபா தேவைப்படும் என்று அறிய வருகிறது.

இந்த வேலை நடைபெறுமானால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் 2 ஆவது வெள்ள தடுப்பு திட்டமாக இது அமையும். 1 ஆவது திட்டம் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் வேண்டுகோளின் பேரில் காத்தான்குடியில் அமைச்சர். ஏ.எச்.எம். பௌசி, அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக இருந்த போது மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## காரைதீவு பிரதேச சபைக்கு

# ஐந்து பேரை தெரிவு செய்ய ஐம்பத்தாறு பேர் போட்டி

காரைதீவு,

காரைதீவு பிரதேச சபைக்கான இரண்டாவது தேர்தலில் ஐந்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய இதுவரை ஐம்பத்தாறு வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

ஆறு கட்சிகளும் இரண்டு சுயேட்சைக் குழுக்களும் இதுவரை வேட்பு மனுத் தாக்கலைச் செய்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஈரோஸ் ஆகிய கட்சிகள் களத்தில் குதிக்கின்றன.

பெரும்பான்மையான தமிழர்களைக் கொண்டுள்ள காரைதீவு பிரதேச சபையில் கடந்த தேர்தலில் கன்னிப் பிரதி நிதிகளாக தமிழரசுக் கட்சி சார்பில் நால்வரும், ஸ்ரீல.மு.கா.சார்பில் ஒரு பிரதிநிதியும் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஒரு சில கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட நேற்று ஏற்பாடாகியிருந்தது. முஸ்லிம்களின் துஆ கட்சியும் வேட்பாளர்களைத் தெரிந்த வண்ணமிருந்தது. எனவே பலத்த போட்டி எதிர்பார்க்கப்படுகிறது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களை அரசு மாற்றாந்தாய் மனப்பாங்குடன் பார்ப்பது வேதனை

## கூட்டமைப்பு எம்.பி. யோகேஸ்வரன் கூறுகிறார்

திருக்கோவில்,

கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் பார்ப்பது வேதனை தருகின்றதுடன் இந்தியா உதவியளித்ததாக பெரும் விளம்பரம் செய்யப்பட்டபோதும் ஒரு சில குறைந்த பொருட்களே மக்களிடம் சென்றடைந்துள்ளன. எனவே பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற அரசாங்கம் முன்வர வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உலர் உணவு உதவி மிகவும் குறைவாகவே மக்களுக்கு வழங்கப்படுகிறது. சில பிரதேசங்களுக்கு இன்னும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை. இதனால் பெரும்பாலான மக்கள் உணவு பொருள் உதவியை பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோருகின்றதுடன் அரசுக்கு எதிராக சில இடங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர்.

எனவே பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்களிடம் குற்றம் கூறுவதில் பயனில்லை. மட்டு. மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர்களும் மக்களுக்கு எவ்வாறு உதவியை அரசிடமோ அரச சார்பற்ற நிறுவனங்களிடமோ பெற்று வழங்கலாம் என்ற ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் அடிக்கடி பிரதேச செயலாளர்கள் மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்பு கொள்வதால் அவர்களின் கஷ்ட நிலைமையை என்னால் உணர முடியும்.

பெரும்பாலும் பிரதேச செயலாளர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர். ஆனால் அரசாங்கத்தினால் அவர்களுக்கு வழங்கப்படும் உதவியோ மிகக் குறைவாகவுள்ளது. இதனால் இவர்களால் மக்களின் முழுத் தேவையும் பூர்த்தி செய்யமுடியாத நிலையிலுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியையாவது பெற்று மக்களுக்கு உதவும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளனர். இதேபோன்று தான் பெரும்பாலான கிராம அதிகாரிகளும் மக்களுக்கு உதவும் நடவடிக்கையில் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் சில கிராம அதிகாரிகள் அசமந்த போக்கில் உள்ளனர்.

இவ்வாறு மக்களுக்கு உதவும் பணியில் அரச அதிகாரிகள் காட்டும் அக்கறைக்கு ஏற்றதாக அரசாங்கத்தின் உதவி அமையவில்லை. இதுவே மாவட்டத்தில் சில பிரதேசங்களில் நிவாரண உதவி இன்றி மக்கள் தவிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இதேவேளை சில ஊடகங்கள் மக்களுக்கு உதவும் நோக்கில் வந்தாலும் தங்களது ஊடக விளம்பரத்தை மிகைப்படுத்துவதால் நிவாரணத்தை பெறுவதற்காக மக்கள் இரவு வேளைகளில் வீதிகளில் குழந்தைகளுடன் நிவாரண உதவிக்காக குவிந்து கிடந்து ஏமாறும் நிலைக்கு ஆளாகின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து பல வகையில் அரசாங்கத்திற்கு உதவினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ் உதவி பூரணமாக சென்றடையுமா என்பது கேள்விக்குறியாகும்.

மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தை பயன்படுத்தி சில அரசியல்வாதிகள் அரசியல் லாபம் தேட முயற்சித்து வருவதாகவும் இது கண்டிக்கப்பட வேண்டியதுடன் அரசியல் பேதங்களுக்கு அப்பால் இவ்வேளையில் மனித நேய உணர்வுடன் இன, மத, பேதமின்றி சேவையாற்ற முன்வரவேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன தோட்டங்களை மறுசீரமைத்து தொழிலாளர்களை பாதுகாக்க நடவடிக்கை

## அமைச்சர் தயாசிறி த திஸேரா உறுதி

இறத்தோட்டை,

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குக் கீழ் நடத்தப்படும் தோட்டங்களை முறையாக மறுசீரமைத்து அங்கு தொழில்புரியும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் தயாசிறி த திஸேரா உறுதியளித்துள்ளார்.

அமைச்சின் அலுவலகத்தில் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் தலைவர் பேராசிரியர் விஜயகுமார் தலைமையில் பொதுச் செயலாளர் எஸ். இராமநாதன், நிதிச் செயலாளர் ஆர்.நடராஜா, மாவட்டத் தலைவர் எஸ்.ஜெயசீலன், பன்வில மாவட்டத் தலைவர் இராசலிங்கம் உட்பட தோட்டக் கமிட்டித் தலைவர்களுடன் அமைச்சர், அமைச்சின் செயலாளர் கலாநிதி விலிகமகே மற்றும் உதவிச் செயலாளர்கள் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன தலைவர் பிரியந்த டி அல்விஸ், பொது முகாமையாளர் எஸ். சோமரத்ன ஆகியோர் கலந்து கொண்ட பேச்சு வார்த்தையொன்றின் போதே அமைச்சர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின்கீழ் வரும் தோட்டங்கள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை என்றும் நிர்வாகச் சீர்கேடுகள் மலிந்து, வீண் விரயம், ஊழல் போன்றவை வெகுவாக நிலவி வருவதாகவும் இதன் காரணமாக தொழிலாளர்களின் சட்டபூர்வமான உரிமைகள் பலவும் மறுக்கப்பட்டு வருவதாகவும் மேற்படி யூனியன் தொடர்ச்சியாகப் பல மட்டங்களிலும் வலியுறுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்ற இப்பேச்சு வார்த்தையின் போது தோட்டங்கள் முறையாகப் பராமரிக்கப்படாதது, தொழிற்சாலைகள் பல மூடப்பட்டும் ஏனையவை மூடப்படும் நிலையிலும் இருப்பது, வாகன வசதிகள் இல்லாதிருப்பது, தொழிலாளரின் கொடுப்பனவுகள் வழங்கப்படாதிருப்பது, சேமலாப நிதிக்கான பாக்கிப் பணத்தை வங்கியில் இடாமல் இருப்பது, தற்போது தொழில் செய்து வரும் தொழிலாளர்களது சம்பளத்திலிருந்து கழித்தெடுக்கப்படும் பணத்தை வங்கிக்கு செலுத்தாமல் இருப்பது போன்ற பல்வேறு விடயங்களை யூனியனின் தூதுக்குழுவினர் முன்வைத்தனர்.

இப்பேச்சு வார்த்தையின் பயனாகத் தொழிற்சங்கத்தால் முன்வைக்கப்பட்ட சகல விடயங்களும் அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும் தோட்டங்களின் நிர்வாகங்களைக் கைமாறும்பொழுது இவ்வாறன மாற்றங்களுக்கு முன் சகல தொழிற்சங்கங்களுடனும் கலந்து பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமெனவும் அவ்வாறு கைமாறும் சந்தர்ப்பங்களில் அதற்குமுன் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவுகள் சகலவற்றையும் கொடுத்து முடிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தவிர, தோட்டங்கள் கைமாறும் பொழுது அதனை எடுத்து நடத்தும் புதிய நிர்வாகத்தின் நிதி நிலை, நிர்வாகத் திறமை போன்ற சகல விடயங்களும் ஆராயப்பட்ட பின்பே கைமாற்றப்பட வேண்டுமெனவும் இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேச்சு வார்த்தையின் இறுதியில் அரச கட்டுப்பாட்டுக்குக் கீழுள்ள சகல தோட்டங்களையும் குறைவாக மறுசீரமைத்து அங்கு தொழில் புரியும் தொழிலாளர்களின் தொழில், வேலை வாய்ப்பு கொடுப்பனவுகள் உட்பட அவர்களின் வாழ்க்கை நிலை போன்றவற்றை சீர்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

# லுணுகலைக்கு தனியான பிரதேச சபை 11 உறுப்பினர்களை தெரிவு செய்யலாம்

பதுளை,

பசறை பிரதேச சபைக்குட்பட்டிருந்த லுணுகலை பிரதேசத்திற்கும் தனியான பிரதேச சபையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. நடைபெறவுள்ள பிதேசசபைத் தேர்தலின் போது இச்சபையும்உள்ளடக்கப்பட்டுள்ளது.

பசறை பிரதேசசபைக்குள் லுணுகலை பிரதேசமும் அடங்கப்பட்டிருந்து, தற்போது பசறை, லுணுகலை ஆகிய இரு பிரதேசங்களிலும் இரு பிரதேசசபைகள் உருவாகியுள்ளன. ஏற்கனவே பசறை பிரதேசசபையில் அங்கம் வகித்த 22 உறுப்பினர்களும் சரிசமமாகப் பிரிக்கப்பட்டு பசறைப் பிரதேசசபைக்கு 11 பேரும் லுணுகலைப் பிரதேசசபைக்கு 11 பேருமாக நடைபெறப்போகும் தேர்தலில் தெரிவாகவுள்ளனர்.

இவ்விரு பிரதேச சபைகளும் பெருந்தோட்டப் பகுதிகளை உள்ளடக்கியிருப்பதினால் பெருந்தொகையிலான தமிழ் வாக்காளர்கள் இருந்து வருகின்ற போதிலும் லுணுகலை பிரதேச சபைக் குட்பட்ட பகுதியில் தமிழ் மக்களே பெரும்பான்மை பலத்தைக் கொண்ட வாக்காளர்களாக இருந்து வருகின்றனர். ஆகையினால் லுணுகலைப் பிரதேச சபையை தமிழர்கள் கைப்பற்றும் அதிக வாய்ப்பே இருந்து வருகின்றது. இது விடயத்தில் தமிழ் வாக்காளர்கள் நன்கு சிந்தித்து தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய சமூகப்பற்றுடன் செயற்பட வேண்டியது கட்டாயத் தேவையாக உள்ளது.

இது தொடர்பாக தமிழ் வேட்பாளர்களும் போட்டி, பொறாமைகளை விட்டு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்பட்டு லுணுகலை பிரதேச சபையை தம்வசமாக்கிக் கொள்ளும் நிலையினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பதுளை மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில் முழுமையாக பிரதிநிதித்துவங்களை இழந்தமை மற்றும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் சமூகப் பிரதிநிதித்துவங்களில் பின்னடைவு ஏற்பட்டமையையும் படிப்பினையாகக் கொண்டு பிரதேசசபைத் தேர்தலிலாவது சமூகப் பிரதிநிதித்துவங்களை, அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்ற நிலைப்பாட்டினை பின்பற்ற வேண்டும்.

லுணுகலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் 24 ஆயிரத்து நானூற்று மூன்று பேரும் பசறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் 36 ஆயிரத்து நூற்று ஐம்பத்தொரு பேரும் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களாக இருக்கின்றனர்.

லுணுகலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இன அடிப்படையிலான விபரம் பின்வருமாறு,

தமிழர்கள்: 21 ஆயிரத்து484 பேர், சிங்களவர்கள்:- 15 ஆயிரத்து 356 பேர், முஸ்லிம்கள் ஆயிரத்து 507 பேர், இதர சமூகத்தவர்:- 29 பேராவர். இதனடிப்படையில் 38 ஆயிரத்து முன்னூற்று எழுபத்தாறு பேர் இருந்த போதிலும் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டிருப்பவர்கள் 24 ஆயிரத்து நானூற்று மூன்று பேரே ஆவர்.

பசறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இன அடிப்படையிலான விபரம் பின்வருமாறு:- சிங்களவர்கள்: 30 ஆயிரத்து 644 பேர், தமிழர்கள் 20899 ஆயிரத்து 899 பேர், முஸ்லிம்கள்:- இரண்டாயிரத்து 397 பேர், இதர சமூகத்தவர்:- 86 பேராவர். அதனடிப்படையில் 54 ஆயிரத்து ஆறு பேர் இருந்த போதிலும் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டிருப்பவர்கள் 36 ஆயிரத்து நூற்று ஐம்பத்தொருவரே.இந்நிலையில் புதிய பிரதேச சபையாக லுணுகலை பிரதேச சபை உருவாகியிருப்பது தமிழ் வாக்காளர்களுக்கு கிடைத்த சந்தர்ப்பமேயாகும். இதனை எமது சமூகம் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

## தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் கதிர்காமம் பொது முன்றலில்

பதுளை,

நாட்டின் தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி கதிர்காமம் பொதுமுன்றலில் நடைபெறவுள்ளன.

அந் நிகழ்வின் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையிலான ஒரு வாரகாலத்திற்கு 'தேசத்திற்கு மகுடம்' தேசிய கண்காட்சி நிகழ்வுகள் புத்தளையிலும் நடைபெறவுள்ளன.

இவ்விரு நிகழ்வுகளும் ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் நடைபெறவிருப்பதால் நிகழ்வுகளின் அனைத்து ஏற்பாடுகளும் ஊவா மாகாண முதலமைச்சர் சசிந்திர ராஜபக்ஷவின் நேரடி கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

இறத்தோட்டை,

மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவம் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

முன்னதாக கடும் மழையையும் பொருட்படுத்தாது காலை 8 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட யானை மீது நகர வீதிகளில் கொடி ஊர்வலம் இடம்பெற்றது. மேற்படி கொடி ஊர்வலத்தில் கலாசார ஊர்திகளுடன் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் கலந்துகொண்டனர். மேற்படி கொடியேற்றத் திருவிழாவை முன்னிட்டு நகர வீதிகள் வாழை, கமுகு, குருத்தோலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மாலை ஏழு மணியளவில் ஆரம்பமான தேர்ப்பவனி திருகோணமலை வீதி வழியாக மண்டண்டாவளை பரமகுருசுவாமி மடம் வரை சென்று பின்னர் இந்துக் கல்லூரி வீதி வழியாக இறத்தோட்டை வீதியை அடைந்து அங்கிருந்து சுதுகங்கை ஸ்ரீ ஏழுமுககாளியம்மன் திருக்கோயில் வரை சென்று மீண்டும் நேற்று அதிகாலை 2 மணியளவில் ஆலயம் வந்தடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் ஒரு பார்வை

இலங்கை மக்களின் உரிமைகள், ஜனநாயகம், சுதந்திரம் என்பனவற்றினை முதன்மைப்படுத்தியுள்ள உலக நாடுகள் அதிகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு பல அரசாங்க முறையினை கொண்டுள்ளது. பாராளுமன்ற ஜனாதிபதி ஒற்றையாட்சி, கூட்டாட்சி என்ற அரசாங்க முறைகளைக் கொண்டு காணப்படுகின்றது. இவற்றின் மூலம் சாதாரண மக்களின் நலன்களை பேணமுடியாது என்ற நோக்கில் மேலும் வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்ட ஓர் அமைப்பு உள்ளூராட்சி மன்றங்கள் ஆகும்.

இவ்வகையில் இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் நீண்ட வரலாற்று பாரம்பரியங்களைக் கொண்டுள்ளதனை வரலாற்றுச் சான்றுகள் மூலம் விளங்கிக்கொள்ள முடியும். குறிப்பாக வரலாற்று நூலாகிய மஹாவம்சம் இலங்கையினது உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பாக அடையாளப்படுத்துகின்றது. பிரதேச நிர்வாகத்தினையும் குறித்த பிரதேசத்து மக்கள் சார்பான விடயங்களையும் நகர முதல்வர் ஒருவரின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளது.

**வரலாற்று நூலாகிய மஹாவம்சம் இலங்கையினது உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பாக அடையாளப்படுத்துகின்றது. பிரதேச நிர்வாகத்தினையும் குறித்த பிரதேசத்து மக்கள் சார்பான விடயங்களையும் நகர முதல்வர் ஒருவரின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளது.**

மேலும் சிங்கள மன்னர்களது ஆட்சிக் காலத்தில் 'கம்சபா' இருந்தமையை அறியமுடிகின்றது. குறிப்பாக போர்பல் (Fothes) என்கின்ற அறிஞர் எழுதிய நூலாகிய 'இலங்கையில் பதினொரு வருடங்கள்' என்பதில் 1840களில் கம்பா அல்லது பிரதேச சபை என்கின்ற கட்டமைப்பிலும் உள்ளூராட்சி மன்றங்களது செயற்பாடுகள் காணப்பட்டதாக வரலாற்று சான்றுகளினைக் கொண்டு அடையாளப்படுத்தியுள்ளனர். தொடர்ந்து வந்த பிரித்தானியரது காலனித்துவ காலப்பகுதியில் கிராம, நகரம் சார் பகுதிகளில் உள்ளூராட்சி மன்றங்களினை நிறுவி அதிகாரத்தினை தொடர்ந்து பேணுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் 1931-1946 வரையிலான டொனமூர் அரசியல் அமைப்பு சீர்திருத்த காலப்பகுதியின் ஒரு திடமான உள்ளூராட்சி கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு கிராம சபைகள், பட்டின சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் போன்ற அமைப்புக்கள் உள்ளூராட்சி திணைக்களத்தின் கண்காணிப்பிலும் கட்டுக்கோப்பிலும் தனது செயற்பாடுகளினை மக்கள் மத்தியில் முன்னெடுத்து வந்ததை அவதானிக்கலாம்.



இவ்வாறு வளர்ச்சியடைந்த இலங்கையினது உள்ளூராட்சி மன்றங்கள் சுதந்திரத்திற்குப் பின்னர் பல்வேறு சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மாநகர, நகர, பிரதேச, பட்டின கிராம, கிராமோதய சபைகள் போன்றவைகளை தோற்றுவித்தன. பின்னர் 1980ஆம் ஆண்டு பட்டின சபைகள், கிராம சபைகள் என்பன ஒழிக்கப்பட்டன. அதன் பின்னர் கிராமோதய ஒழிக்கப்பட்டன. இவ்வாறு காணப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் இன்று மாநகர சபை, நகர சபைகள், பிரதேச சபைகள் என்று காணப்படுகின்றது. இது இன்று இலங்கையில் 18 மாநகர சபைகளாகவும் 55 நகர சபைகளையும் 257 பிரதேச சபைகளையும் கொண்டுள் ளது.

இவ்வாறு நாம் இலங்கையில் உள்ளூராட்சி மன்றம் தோற்றம் பற்றி கூறுகின்ற அதே வேளை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முறையில் யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் எத்தனை நகர சபைக்கு, பிரதேச சபைகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது, எத்தனை உறுப்பினர்கள் இவ் மன்றத்துக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர், இதனை எவ்வாறு வாக்காளர் கையாள வேண்டும் என்பதனை பற்றி நோக்குவோம்.

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் தொகுதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களையும் சேர்த்து தேர்தல் மாவட்டம், யாழ்.மாவட்டம் என அழைக்கப்படுகிறது. இதில் மூன்று நகர சபைக்கும் 16 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் போட்டியிடும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் அல்லது சுயேச்சைக் குழு ஒவ்வொன்றும் இவ் மன்றங்களின் நிலபரப்பு வாக்காளர் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதிநிதிகளை தெரிவு செய்யும் எண்ணிக்கையினை விட மேலதிகமாக வேட்பாளர்களை நியமிக்க வேண்டும். அத்துடன் இங்கு நியமிக்கப்படும் வேட்பாளர்களில் 40 வீதமானவர்கள் 18-35 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் காணப்படல் வேண்டும்.

இந்த வகையில் பருத்தித்துறை நகர சபைக்கு 9 பேர் தெரிவு செய்ய வேண்டும். இவற்றில் இளையோர் மட்டம் 6 பேர். ஏனையவர் 7பேர். மொத்தம் 12 பேர்.

பருத்தித்துறை நகர சபைக்கு 9பேர் தெரிவு செய்யப்பட வேண்டும். இதில் இளையோர் மட்டம் 6 பேர். ஏனையோர் 7 பேர். மொத்தம் 12 பேர்.

சாவகச்சேரி நகர சபைக்கு 11 பேர் தெரிவு செய்யப்பட வேண்டும். இவற்றில் இளையோர் மட்டம் 6 பேர். ஏனையவர் 9 பேர். மொத்தம் 15 பேர்.

காரைநகர் பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் 5 பேர். இளையோர் மட்டம் 3 பேர். ஏனையவர்கள் 4 பேர். மொத்தம் 7 பேர்.

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பறு வேண்டியவர்கள் 5 பேர். இளையோர் மட்டம் 3 பேர். ஏனையோர் 4பேர். மொத்தம்7 பேர் தெரிவு செய்யப்படவேண்டும்.

நெடுந்தீவு பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்படவேண்டியவர்கள் 9 பேர். இதில் இளையோர் மட்டம் 5 ஏனையோர் 7 பேர். மொத்தம் 12 பேர்.

வேலணை பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்படவேண்டியவர்கள் 11 பேர். இளையோர் மட்டம் 6 பேர். ஏனையோர் 9 பேர் .மொத்தம் 15 பேர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு 14 பேர் தெரிவு செய்யப்பட வேண்டும். இளையோர் மட்டம் 8 பேர். ஏனையோர் 11 பேர். மொத்தம் 19 பேர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு 21 பேர் தெரிவு செய்யப்பட வேண்டும். இளையோர் மட்டம் 11 பேர். ஏனையோர் 16 பேர்.மொத்தம் 27 பேர்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை 16 பேர் தெரிவு செய்யப்பட வேண்டும். இளையோர் மட்டம் 8 பேர். ஏனையோர் 13 பேர். மொத்தம் 21 பேர்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் 16 பேர். *(19ஆம் பக்கம் பார்க்க)*

**எஸ்.ரி.விமல்**
*அரசறிவியல் துறை யாழ். பல்கலைக்கழக மாணவர்*

## வாசகர் ஓசை

உள்ள விடயங்களை உள்ளபடியே கூறும் பத்திகையின் சிறப்புற நடாத்தி வருகின்றமையையிட்டு வாழ்த்துக்கள்

யாழில் நடைபெறுகின்ற கலாச்சாரச் சீரழிவுகள் எனும் தலைப்பில் வருகின்ற விடயங்கள் முற்றிலும் உண்மையாகவே காணப்படுகின்றன.

தமிழ் இலக்கிய சிறுகதை என்பன சிறப்புற வெளி வருகின்றன

இனிவரும் காலங்களிலும் இவ்வாறான இழிவான நடவடிக்கைகளையும் கண்ணுக்கு முன்னால் நடக்கும் விசமத்தனங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் சாதனமாக 'யாழ் ஓசை' திகழ்கின்றது (இதனைத் தொடர்ந்து எழுத வேண்டும்)

மேலும் எம்மாலியன்ற அறிவுறுத்தல்கள் ஆலோசனைகள் என்பவற்றையும் யாழ்நகர் தொடர்பான தகவல்கள் திருத்தியெடுத்து மனிதன் மனிதனாக வாழ்வதற்கான செய்திகள் என்பவற்றை அனுப்பிவைப்பதில் ஓர் நிறைவை அடைய முயற்சிக்கிறேன்.

**நன்றி**

அன்பார்ந்த வாசகர்
*சி.ச.ஈழவேந்தன்*
*இணுவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை நடத்தும் இலவச கணினி, தையல் பயிற்சிகள்

கொடிகாமம்,

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவை யினால் வேலையற்ற இளைஞர், யுவதிக ளுக்கான இலவச கணினி மற்றும் தையல் பயிற்சி வகுப்புக்களை விரைவில் நடத்த வுள்ளனர். இதற்கான விண்ணப்பங்களை ஆர்வமுடையவர்களிடமிருந்து கோரப் பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி பயிற்சி நெறி களைப் போதிக்குக தகுதி வாய்ந்த ஆசிரி யர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோ ரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை இம் மாத இறுதிக்குள் தலைவர், பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் பேரவை, கண்டி வீதி பளை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அதன் செயலாளர் கேட் டுள்ளார்.

இதேவேளை மேற்படி சபையினால் அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைக ளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவிருப்பதால் வறு மைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்க ளின் விபரங்கள் அதிபர்களிடம் கோரப் பட்டுள்ளது.

இவர்களுக்கான உதவிகளை புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் பச் சிலைப்பள்ளி பிரதேச வாழ் மக்கள் வழங் குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



வலி. மேற்கு- சங்கானை மத்தி (J/180) குடியேற்றத் திட்ட காணிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட்டு ஈபிடிபி தொகுதி அமைப்பாளர் மகேந்திரன் ஆகியோர் விஜயம் செய்தனர். அவர்களை குடியேற்ற திட்ட செயலாளர் மா. சிவஞானம் மாலை அணிவித்து வரவேற்பதனை படத்தில் காணலாம். (படம்:- யாழ் மத்தி நிருபர்)

# பஸ் தரிப்பு நிலையத்தில் வீண் பொழுது போக்கும் நபர்களால் பயணிகளுக்கு சிரமம்

தெல்லிப்பழை,

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசா லைக்கு முன்பாக உள்ள 7ஆம் கட்டை பஸ் தரிப்பு நிலையத்தில் இருக்கும் இர ண்டு விசமிகளால் பஸ் தரிப்பிடத்துக்கு செல்லும் பயணிகள் பலத்த சிரமத் தினை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த நபர்கள் அதிகாலை முதல் இரவு வரை குறித்த பஸ் தரிப்பு நிலை யத்தில் இருந்து அரட்டை அடிப்பதுடன் ஆடு புலியாட்டம் விளையாடி வருகின் றனர்.

பாரத்துடன் பஸ்ஸால் இறங்கும் மக் களுக்கு இருப்பதற்க இடம் கொடுக்காது இவர்கள் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றர்.

அண்மையில் 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் பஸ்ஸில் இருந்து இறங்கி அமர் வதற்கு இடம்கிடையாது மயக்கமுற்றுள் ளார். பெண்கள் பஸ்தரிப்பு நிலையத் திற்கு வெளியே வெய்யிலில் நிற்க வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

எனவே, இது தொடர்பாக சம்பந் தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கும்படி மக்கள் வினயமாக கேட்டுக்கொள்கின்றனர்.

# அளவெட்டி அபிவிருத்தி மன்ற நிர்வாகக் கூட்டம்

தெல்லிப்பழை,

அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் நிர்வாகக் கூட்டமானது அளவெட்டி மகா ஜன சபை கல்யாண மண்டபத்தில் தலை வர் மணிசேகரன் தலைமையில் இடம் பெற்றது.

அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆரா யப்பட்ட கூட்டத்தில் பின்வரும் தீர்மா னங்கள் எடுக்கப்பட்டன.

அளவெட்டியிலுள்ள முன்பள்ளிகளின் தேவையை இனங்கண்டு அவற்றை மேம்படுத்துதலும் நிறைவேற்றுதலும், வருடாந்த பொதுக் கூட்டத்தை விரை வில் நடத்தி புதிய பொதுச்சபையை தெரி வு செய்தல், எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி வருடாந்த சாதனையாளர்களை கௌரவித்தல் என்பன தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.

அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின ரால் அளவெட்டி நலன்புரிச் சங்கம் சுவிஸ் கிளையின் அனுசரணையில் அள வெட்டி தெற்கு றோ.க.த.க. பாடசா லைக்கு கணினித் தொகுதி ஒன்று பாட சாலை அதிபர் திருமதி. தர்மபாலசிங்கத்தி டம் கையளிக்கப்பட்டது.

# அபிவிருத்தி மன்றத்தின் இலவச கற்கைநெறிகள்

தெல்லிப்பழை

அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின ரால் இலவச கற்கைநெறிகள் ஆரம்பிக்கப் பட்டு நடைபெற்றுவருகின்றன. இக் கற்கைநெறிக்கான அனுசரணையை அள வெட்டி நலன்புரிச்சங்கம், சுவிஸ் மற்றும் லண்டன் மக்கள் சங்கம் ஆகியன வழங்கு கின்றன.

கற்கைநெறிகளாக ஆங்கில மொழி வகுப்பு, சிங்கள மொழி வகுப்பு, கணனி அடிப்படை கற்கை என்பன அடங்குகின் றன. மேற்படி கற்கை நெறிகள் தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வகுப்புக்கள் , கல் விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர பரீட் சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான வகுப்புக்கள், இளைஞர், யுவதிகளுக்கான வகுப்புக்கள் என பிரிவாக நடைபெற்று வருகின்றது. அத்தோடு இலவச கற்றலுக் கான முன்பள்ளி ஒன்றும் அண்மையில் அளவெட்டி மகாஜன மண்டபத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.



சுன்னாகம் பொது நூலகத்தில் இடம்பெற்ற உலக மகளிர் தின விழாவில் இடம்பெற்ற நாடகக் காட்சியை படத்தில் காணலாம்.

# யாழ். மாவட்ட பிரதேச ஊழியர்களுக்கு சீருடை அறிமுகப்படுத்த ஆலோசனைகள் முன்னெடுப்பு

ஏழாலை,

யாழ். மாவட்ட செயலகம் மற்றும் பிர தேச செயலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு பொதுவான சீருடை யினை அணியமுடியுமா என பிரதேச மட் டத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த வாரம் அரசாங்க அதிபரினால் நடாத்தப் பட்ட பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் அலு வலர்கள் பொதுவான நிறத்திலான உடையினை அணிவதன் மூலம் பொது மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க முடியும் எனவும் இலகுவில் அலுவலர் களை பொது மக்கள் இனங்காண்பதற் கும் வசதியாக இருக்கும் எனவும் கூறப்ப டுகின்றது.

சீருடையினை அலுவலர்களிடையே அறிமுகப்படுத்தல் மற்றும் அது தொடர் பான கலந்துரையாடல்களை அலுவலக மட்ட ஊழியர்களிடையே நடத்தி பொது வான முடிவு எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அரசாங்க அதிபரினால் ஆலோசனை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

இதனையடுத்து யாழ். மாவட்டத்தில் ஒரு சில பிரதேச செயலகங்களில் அலுவ லர்களை குறிப்பிட்ட நிறத்திலான ஆடை களை அணிந்து வருமாறு பிரதேச செய லாளர்கள் அறிவுறுத்தல் விடுத்துள்ளதா கத் தெரியவருகின்றது.

இதனால், பிரதேச செயலகங்களில் கட மையாற்றும் அலுவலர்களிடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. அலுவலர்க ளுடன் கலந்துரையாடி சீருடை அணிவது பற்றி முடிவெடுக்கப்படாத நிலையில் சில அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களிடையே குழப்ப நிலை தோ ன்றியுள்ளது. ஆண் அலுவலர்களுக்கு இரண்டு நிறத்திலான சீருடையும் பெண் அலுவலர்களுக்கு எட்டு நிறத்திலான சீரு டையும் அணியவேண்டும். அத்துடன், அவர்கள் சேலை உடுத்த வேண்டும். என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கெனவே அரசாங்கத் தினால் கிராம அலுவலர்கள் மற்றும் அலு வலக உதவியாளர்களுக்கு மட்டும் சீரு டை வழங்கப்பட்டுவருகின்றமை குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனுஸ் +2 கோடி

**படம்** ஓடுகிறதோ, இல்லையோ சம்பளத்தை ஏற்றுவதை நிறுத்துவதே இல்லை ஹீரோக்கள். ஒவ்வொரு படம் நஷ்டம் அடையும் போதெல்லாம் தன் சம்பளத்தை மட்டும் ஏற்றிக் கொண்டே இருக்கிறார் என்று முன்னணி நடிகர் ஒருவரை பற்றி மேடையிலேயே புலம்பி தள்ளினார் தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம்.

இப்படி தயாரிப்பாளர்களை புலம்ப வைக்கிற லிஸ்ட்டில் தன்னையும் இணைத்துக் கொண்டிருக்கிறார் தனுஷ். ஆடுகளம் படத்திற்கு பிறகு தனது சம்பளத்தில் இரண்டு கோடிய்ய ஏற்றிவிட்டாராம். விளைவு? கோடம்பாக்கத்தில் ஒரே குமுறல் சப்தம்!

சமீபத்தில் தனுஷ் நடித்து வெளிவந்த உத்தம புத்திரன் வெற்றிப்பட லிஸ்டில் இல்லை. ஆடுகளம் படத்தின் கணக்கு வழக்குகளை ஆராய்ந்து பார்த்தால்தான் இந்த படத்தை எந்த லிஸ்ட்டில் சேர்ப்பது என்ற முடிவுக்கே வர முடியும். உண்மை இப்படியிருக்க தனுஷின் இந்த திடீர் முடிவு திரையுலகத்தை திகைக்க வைத்திருக்கிறது.




# மாமன் மச்சான்

**ஜீவாவும்,** சிம்புவும் மாமா மச்சான்ஸ் லெவல் பிரண்ட்ஸ். ஆனால் தொழில் என்று வந்துவிட்டால் உதடு வேறு, தம் வேறு என்ற கொள்கைதான் அவர்களுக்குள்!

'கோ' படத்தில் முதலில் நடிப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டவர் சிம்புதான். அந்த படத்தின் கதை விஷயத்தில் மூக்கை நுழைத்த சிம்புவை முளையிலேயே கிள்ளி எறிந்தார் கோ பட இயக்குனர் கே.வி.ஆனந்த். சிம்பு வேண்டாம் என்று முடிவெடுத்த அடுத்த வினாடியே ஜீவாவாவுக்குதான் போன் அடித்தாராம். இனி என்ன நடந்தது என்பதை ஜீவா வாயாலேயே கேட்போம்.

ஆனந்த் சார் போன் செய்து உங்களை சந்திக்கணும்னு கேட்டார். நான் இரண்டு நாள் கழிச்சு வாங்களேன் என்றேன். இல்லையில்ல. உடனே மீட் பண்ணனும். கோ படத்தில் நீங்க நடிக்கிறது சம்பந்தமா என்றார். சரி நேர்ல வர்றேன்னு சொல்லிட்டு அவர் சொன்ன ஓட்டலுக்கு புறப்பட்டேன். இந்த படத்தில் வேற ஹீரோ நடிப்பதாக இருந்ததே, டபுள் ஹீரோ சப்ஜெக்டா இருக்குமோ? அப்படியிருந்தா என்ன சொல்லி தவிர்க்கலாம்னு யோசனை பண்ணிகிட்டேதான் போனேன்.

என்னிடம் முழு கதையையும் சொன்னார் கே.வி.ஆனந்த். எல்லாத்தையும் கேட்டுட்டு இந்த கேரக்டர்ல யார் சார் நடிக்கறாங்கன்னு கேட்டேன். நீங்கதான்னு சொன்னார். அப்புறம்தான் எனக்கு நம்பிக்கையே வந்திச்சு. வேணாம்ங்கிற மூட்ல போன நான், உங்க படத்தில நடிக்க யார்தான் வேணாம்பாங்க என்று பல்டி அடிச்சுட்டேன். அப்படிதான் இந்த படம் கிடைச்சது எனக்கு என்றார் ஏக சுவாரஸ்யத்துடன்.



# தலைப்பு பரிசீலனை

**ஒருவழியாக** ஆரம்பித்துவிட்டார்கள் ஷங்கரின் 'த்ரி இடிய ட்ஸ்' படத்தை! பெரும் இழுபறியாக இருந்த இந்த படம் கை கழுவப்பட்டுவிட்டது என்றே பலரும் நினைத்தார்கள்.

முதலில் இப்படத்தில் விஜய் நடிப்பதாக இருந்தது. பின்பு கடைசி நேரத்தில் அவராக விலகிக் கொண்டார் என்றும், இல்லையில்லை படத்திலிருந்து நீக்கப்பட்டார் என்றும் தகவல்கள் பரவின. விஜய்க்கு பதிலாக சூர்யாவை நடிக்க வைக்கிற முயற்சியில் வெற்றியும் கண்டார் ஷங்கர். அதிலும் ஒரு சின்ன இழுபறி. தெலுங்கு, தமிழ் இரண்டு மொழி தயாரிப்பில் தமிழை மட்டுமாவது எங்கள் உறவினர் ஞானவேல் தயாரிக்கட்டும் என்று சூர்யா ஆசைப்பட்டதாக கூறப்பட்டது. அப்புறம் அதையும் முறியடித்து இன்று படப்பிடிப்பை துவங்கிவிட்டார் ஷங்கர்.

ஊட்டியில் நடைபெற்ற படப்பிடிப்பில் ஸ்ரீகாந்த், ஜீவா இருவரும் கலந்து கொண்டனர். இவர்கள் தொடர்பான காட்சிகள் எடுக்கப்பட்ட பின் அடுத்த மாத இறுதியில் கலந்து கொள்கிறாராம் சூர்யா. ஏதேதோ தலைப்புகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் முறையான அறிவிப்போடு தலைப்பும் வெளியிடப்படுமாம்.

# ரஜனி

**கே.எஸ்.ர**
இந்தி நடி
தயாரித்து
இருக்கிறார்
ரஜினி இர
தீபிகா படுே
சமீபத்தில்
தீபிகாவிடம் கே
நினைக்கிறேன்'
கேரக்டருக்கு தீபிக
ஆனால், தீபிகா இந்
சரிபடுத்தி நடிக்க முய
இன்னொரு முறை கி
வருகிறார். இவ்வாறு

# சர்ச்சை

**சர்ச்சைகளை** பட
விஷயம். ஆனால்
தொடரும் கலாட்டா
பின்வாங்க ஆரம்பித்த
அதிலும் தனது ம
யோசிக்க வைத்துவிட்
ஹேராம், விருமாண்
களமாக கமல் தேர்வு
களைத்தான். ஆனால்
தைத் தவிர்த்தேன் என்
இந்தப் படத்துக்கா
படம் எடுத்தால்
கலாட்டாக்களை நி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கு ஜோடி கிடைச்சாச்சு

**ிகுமார்** இயக்கும் படத்தில், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ஜோடியாக, க தீபிகா படுகோன் நடிப்பார் என்று கூறப்படுகிறது. சன் பிக்சர்ஸ் மெகா ஹிட்டான 'எந்திரன்' படத்தை அடுத்து, புதிய படத்தில் நடிக்க ரஜினிகாந்த். இந்தப் படத்தை கே.எஸ்.ரவிகுமார் இயக்குகிறார். இதில் ண்டு கேரக்டர்களில் நடிக்கிறார். அவர் ஜோடியாக நடிக்க, இந்தி நடிகை கானிடம் பேசியுள்ளனர்.

தீபிகா, இந்தப் படத்தின் தயாரிப்பாளரை சந்தித்து பேசியுள்ளார். இதுபற்றி கேட்டபோது, 'ரஜினியுடன் நடிக்க என்னை கேட்டதையே பெருமையாக என்றார். தீபிகாவின் செய்தி தொடர்பாளர் கூறும்போது, 'படத்தின் ாதான் பொருத்தமாக இருப்பார் என தயாரிப்பு தரப்பில் கூறப்பட்டது. ந வருடம் முழுவதும் பிசியாக இருக்கிறார். இருந்தாலும் கால்ஷீட்டை ற்சித்து வருகிறார். ரஜினியுடன் நடிக்கும் இந்த வாய்ப்பை தவறவிட்டால் டைப்பது கஷ்டம் என்பதால் அதற்கான முயற்சியில் தீபிகா ஈடுபட்டு அவர் கூறினார்.


கோ

# சகளை விரும்பும் கமல்

ாக்குவது கமலுக்கு பிடித்தமான அதன் பின்விளைவுகளாகத் க்களை நினைத்து இப்போது ுவிட்டார் போலிருக்கிறது.

ன்மதன் அம்பு பாடலுக்கு கிடைத்த 'மரியாதை' அவரை ரொம்பவே டது போலிருக்கிறது.

ாடிக்குப் பிறகு தானே இயக்கப் போகும் தனது அடுத்த படத்தின் கதைக் செய்தது பாபர் மசூதி இடிப்பு சம்பவம் மற்றும் அதன் பின் விளைவு , சர்ச்சைகளைத் தவிர்க்க, இந்தக் கதையைப் படமாக்குவ ாறு அவர் சமீபத்திய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

ா கதை விவாதமெல்லாம் முடிந்த நிலையில், இப்படியொரு ற்படப் போகும் விவாதங்கள், விமர்சனங்கள் மற்றும் னத்து கைவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார். இதுபற்றி கமல் கூறுகையில், 'பாபர் மசூதி கதை பலத்த சர்ச்சைகளுக்கு வழிவகுக்கும் அப்படம் எடுப்பதை கைவிட்டு விட்டேன். அதற்காக நான் பயந்துவிட்டதாக அர்த்தம் கொள்ளத் தேவையில்லை', என்றார்.

# சினி பிட்ஸ்

- ஆர்மோனியம், கிற்றார், பியானோ, புல்லாங்குழல், தபேலா, வீணை, வயலின் ஆகிய இசை கருவிகளை முறைப்படி இசைக்கும் ஆற்றல் பெற்றவர் இளையராஜா.
- கௌரவ வேடத்தில் தனுஷ் நடித்துள்ள 'சீடன்' அடுத்த மாதம் ரிலீசாகிறது. இதில் நாயகி அன்னையா. சுப்ரமணியம் சிவா இயக்கியுள்ளார்.
- 'கொச்சியில் உள்ள பாட்டி வீட்டுக்கு சென்றால் வீட்டுக்கு பின்னால் உள்ள ஏரியில் மீன் பிடிப்பதுதான் எனது பொழுது போக்கு' என்கிறார் அமலா பால்.
- 'பூ' படத்துக்கு பின் சசி இயக்கும் படம் 555. பரத் ஹீரோவாக நடிக்கிறார். நாயகி தேர்வு நடக்கிறது.
- பூபதி பாண்டியன் இயக்கும் 'பட்டத்து யாணை' படத்தில் நடிக்க உள்ளார் விஷால்.
- அடுத்த ஆண்டில் 'யாவரும் நலம்' படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்குவேன் என்கிறார் விக்ரம் குமார்.
- 'பொன்மாலைப் பொழுது' படத்தில் ஹீரோவாக அறிமுகமாகிறார் கண்ணதாசனின் பேரன் ஆதவ் கண்ணதாசன்.
- 'ஈரம்' படத்தையடுத்து அறிவழகன் இயக்கும் படத்தில் நடிக்கிறார் நகுலன் படங்கள் இல்லாததால் மராட்டி மேடை நாடகங்களில் நடித்து வருகிறார் அனுயா.


கூட்டாஞ்சோறு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அரசியலில் பிரவேசிக்க பெண்களாலும் முடியும் என எடுத்துக்காட்டிய முதல் பெண்

## திருமதி செல்லம்மா நாகேந்திரர்

நெடுந்தீவு கிராமச் சங்கம் 1912 இல் பதிவுசெய்யப்பட்ட பின் முதன் முறையாக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சங்கமாக இயங்கத் தொடங்கியது 1934 ஆம் ஆண்டிலேயாகும்.

1941 இல் இடம்பெற்ற சபைக்கான தேர்தலில் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவர் திருமதி செல்லம்மா நாகேந்திரர் ஆவார். இவர் கிராம சங்கத் தலைவராகத் தெரிவானதுடன் இலங்கையில் முதன்முறையாக கிராமச் சங்கத் தலைவியாகவும் அரசியலில் பிரவேசிக்க பெண்களாலும் முடியும் என்ற உண்மையை எடுத்துக்காட்டிய முதல் பெண் என்ற பெயரையும் பெற்று நெடுந்தீவுக்குப் பெருமை சேர்த்த பெண்ணாக இங்குள்ள மக்களால் இன்றும் நினைவுகூரப்படுகிறார்.

ஒரு கிராமச் சங்கம் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டு தனது பகுதிக்கு ஆற்றக்கூடிய சேவைகளை தனது பதவிக்காலத்தில் வழங்குவதில் ஆர்வம் காட்டியதுடன் அவற்றை நிறைவேற்றுவதில் எடுத்த துரித செயற்பாடுகளும் மக்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டதால் இரண்டாவது தடவையாக 1946 இல் தேர்தலிலும் மக்கள் அவரைத் தமது தலைவியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். முதல் தடவை 1941 ஆண்டு முதல் 1943 வரையும் பின்னர் 1946 முதல் 1948 வரையும் இரு தடவைகள் திருமதி செல்லம்மா நாகேந்திரர் சங்கத்தின் தலைவியாகப் பணியாற்றியுள்ளார்.

மக்களின் அத்தியாவசிய தேவைகளான குடி தண்ணீர்த் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மக்கள் குடியிருப்புக்கள் உள்ள இடங்களில் குடிதண்ணீருக்காக ஆங்காங்கே கிணறுகளும் கால்நடைகளுக்காக கேணிகளும் கட்டப்பட்டன.

சுகாதார சேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியதுடன் சைவசமயக் கல்வியையும் அதன் மூலம் ஒழுக்கநெறிகளை



திருமதி செல்லம்மா நாகேந்திரர் கிராம சங்கத் தலைவராகத் தெரிவானதுடன் இலங்கையில் முதன் முறையாக கிராமச் சங்கத் தலைவியாகவும், அரசியலில் பிரவேசிக்க பெண்களாலும் முடியும் என்ற உண்மையை எடுத்துக்காட்டிய முதல் பெண் என்ற பெயரையும் பெற்று நெடுந்தீவுக்குப் பெருமை சேர்த்த பெண்ணாக மக்களால் இன்றும் நினைவுகூரப்படுகிறார்.

யும் மாணவர்கள் பயிலவும், கடைப்பிடிக்கக் கூடியதுமாக தனது சொந்தச் செலவில் மத்தி பெருக்கடி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் பாடசாலை ஒன்றையும் நிறுவினார். செல்லம்மா வித்தியாசாலை என்ற பெயரில் அமைந்த அப்பாடசாலை மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியைச் சிறந்தமுறையில் வழங்கியது. இங்கு தலைமை ஆசிரியராக இருந்த திரு.ஆ. வைத்தியநாதர், திரு. க.இரத்தினராசா உட்பட உள்ளூர், வெளியூர் அதிபர்கள், ஆசிரியர்கள் மிகுந்த அக்கறை காட்டினார்கள். இங்கு பயின்ற மாணவர்கள் பலர் புலமைப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர். தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை இங்கு வகுப்புக்கள் இருந்தன. இப் பாடசாலையை இந்து போட்டிடம் கையளித்து சைவ சமயத்தின் வளர்ச்சியில் கூடுதல் கவனம் செலுத்தவும் உதவினர். இப் பாடசாலை பின்னர் நெடுந்தீவு மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது.

நெடுந்தீவு பனைவளம் உள்ளது என்பதால் அதன் பயனை மக்கள் பெறக்கூடியதாக பனங்கைத் தொழில் பயிற்சிகளை வழங்கவும் வெங்காயக் கூடையை இங்குள்ள மக்களும் பின்னக்கூடியதாக அதற்கான பயிற்சியை வழங்கவும் முதன் முதலில் கோரிக்கை விடுத்தவரும் அவரே.

தவிர, நெடுந்தீவைச் சேர்ந்தவர்களின் உறவினர்கள் வெளியிடங்களில் கூடுதலாக இருப்பதால் அவர்களுடனான தொடர்புகளைத் தபால் மூலமே மக்கள் கொண்டிருந்தனர். மிகவும் அத்தியாவசியமான அவசரத் தகவல்களை இருசாராரும் பரிமாறிக்கொள்ள முடியாத நிலை இருந்தது. இந்தக் குறையை நீக்கி வைக்கும் பொருளட்டு கம்பியில்லாத தந்திச் சேவையும் அவர் எடுத்த முயற்சியின் காரணமாக 1946 ஆம் ஆண்டு நெடுந்தீவுக்குக் கிடைத்தது.

நெடுந்தீவுக்கு புதிய தபாலகம் அமைக்கும் போது தபால்களைத் துரிதமாக எடுத்துவரக் கூடியதாக புதிய கட்டடத்தில் உலங்கு வானூர்தி இறங்கக்கூடியதாக தபாலகம் அமையவேண்டும் என தபால் அமைச்சராக அன்று பதவி வகித்த செனற்றர் திரு எஸ். நடேசன் அவர்கள் தெரிவித்திருந்ததாகவும் திருமதி செல்லம்மா நாகேந்திரர் அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு.

நெடுந்தீவு விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்ற ஒரு பிரதேசம். வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் சாப்பாடு எங்களுக்குப் பிரச்சினை இல்லை என்று சொல்வதுண்டு. 'கொடிவேல்' விதானையர் வீட்டில் சாப்பிட்டுக் கொள்ளலாம் என்பார்கள். அவரது வீட்டில் எந்த நேரமும் உணவு கிடைக்கும். அவரது கணவர் திரு. நாகேந்திரர் செல்வாக்குப் பெற்றவர். அதனால், அவரது பணிகள் மக்களுக்கான சேவைகள் அவரது காலத்தில் மிகவும் உன்னதமாக விளங்கியது. இங்குள்ள முதியவர்கள் மட்டுமன்றி இவர்களது காலத்தில் நெடுந்தீவுக்கு வந்து சென்ற அதிகாரிகள் சாதாரண பொது மக்கள் எல்லோருமே இன்றும் அவர்களது சேவைகள் குறித்து மகிழ்ச்சியுடன் பேசுவதுண்டு.

நெடுந்தீவு என்றும் பெருமைக்குரிய ஒரு கிராமமாக ஏனையவர்களால் பேசப்பட வேண்டும் என்பதில் வெறும் சொல்லளவுடன் நிற்காது அதற்கான அனைத்து விடயங்களிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்ட பெருமைக்குரிய பெண்மணி இவர்.

நெடுந்தீவு கிராம சபைக்கான கட்டடம் உருவாக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்து தற்போது கட்டடம் அமைந்திருக்கும் இடத்தைத் தெரிவு செய்த அவர் நெடுந்தீவு மத்தி சிக்கிரியான் பள்ளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட வேண்டும் எனவும் தனது பதவிக் காலத்திலேயே சிபாரிசு செய்திருந்தார். ஒரு சிறந்த மீன்பிடித் துறைமுகமாக அது உருவாக்கப்பட வேண்டும்.

1900 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 26 ஆம் திகதி பிறந்த அவர், தனது கிராமத்திற்காக வாழ்ந்து அதற்குப் பெருமை சேர்த்த பெண்மணியாக நாட்டுக்கும் வீட்டுக்கும் சிறப்புமிக்க தலைவியாக இறுதி வரை வாழ்ந்தவாராவர்.

12.07.1989 இல் தனது வாழ்வை நிறைவுசெய்த திருமதி செல்லம்மா நாகேந்திரர், 'நான் நெடுதீவுக் கிராமச் சங்க அக்கிராசனர் பதவிவகித்த காலத்தில் நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக கிராமச் சங்கங்களின் சேவை மிகவும் உபயோகப்படும் என்பதை அநுபவ பூர்வமாகக் கண்டேன். உள்ளூர் அரசியலில் தீவிரமாகப் பங்குபற்றுமாறு நான் இந்த நாட்டுப் பெண்களைக் கேட்டுக் கொள்கிறேன்.' என அகில இலங்கை கிராமச் சங்கங்களின் 25 ஆவது வருடாந்த மாநாட்டுக்கு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தாருந்தி

## ஆன்மிக ஓசை



தொலைதூரங்களை எட்டுவதும், ஒளிக்கெல்லாம் ஒளியாக இருப்பதும், ஒன்றேயானதுமான ஆத்மா என் மனம் நல்ல செயல்களை மட்டுமே செய்யுமாறு தூண்டட்டும். - சுக்லயஜூர் வேதம்



மனதில் ஆணவம் உள்ளவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். கையோடே கைகோர்த்தாலும் அவன் தண்டனைக்கு தப்பான் - நீதிமொழிகள்



இறை நம்பிக்கை இல்லாதவர்களுக்கு உயிரற்ற பூமியே ஒரு சான்றாகும். நாமே அதற்கு உயிர் கொடுத்து அதில் இருந்து தானியத்தை வெளிப்படுத்தினோம். அதில் இருந்து அவர்களும் புசிக்கிறார்கள் - திருக்குர்ஆன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமும் சமூகமும் 13





வழக்கறிஞர்
பொன். பூலோகசிங்கம்

## கேள்வி பதில்

கந்த ஞானமுத்து,
*அருள்மிகு ஞானவைரவர்,*
*தேவஸ்தானம், கைதடி மேற்கு.*

**கேள்வி :** விஞ்ஞானமும் நாகரிகமும் வளர்ந்து வரும் தற்காலத்தில் தீண்டாமையை நடைமுறைப்படுத்துவது ஓர் அநாகரிகமான செயல்தானே? அதனால் சிறுபான்மைத் தமிழர் பாதிக்கப்படுவதன் காரணம் யாது?

**பதில் :** தீண்டாமையை யார் நடைமுறைப்படுத்துகிறார்கள்? இலங்கைத் தமிழர் மத்தியில் வாழும் பூர்சுவாக்கள் தான் இது அழிந்து போகவிடாமல் கட்டிக்காத்து வருகிறார்கள். 1956ஆம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் எஸ்.என்.ஆர்.டி பண்டாரநாயக்க தாம் பதவியேற்ற சில காலத்தில் சமூகக் குறைபாடுகள் சட்டத்தைக் கொண்டு வந்தார். Social Disabilities Act என்ற சட்டம் இப்போதும் நடைமுறையில் உள்ளது.

சிறுபான்மைத் தமிழர்கள் (Minority Tamils) என்ற சொல்லே தவறானது. அப்படி யாரும் இல்லை. இலங்கைத் தமிழர்களை சிறுபான்மையினர் என்று அழைப்பது கூடத்தவறானது. காலஞ்சென்ற கே.பொன்.அருணாசலம் அவர்கள் தமிழ் மக்களது அரசியல் உரிமைகளுக்காக 1921 ஆம் ஆண்டு தமிழர் மகா சபையை (Tamil League) உருவாக்கினார். சமூக ரீதியாக பின்தள்ளப்பட்ட தமிழர், சிறுபான்மைத் தமிழர் மகா சபை (Minority Tamils League) என்ற அமைப்பை உருவாக்கினார்கள். தமிழர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்ட மேலைத்தேய ஏகாதிபத்தியவாதிகளான ஐரோப்பியர்கள் இந்தச் சமூகப் பிளவை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் நடத்தினார்கள். ஒட்டுமொத்தமான தமிழர் சமூகமே பாதிக்கப்படலாயிற்று. அந்தப் பாதிப்பிலிருந்து இற்றை வரை தமிழர் சமூகம் மீளவே இல்லை. இது மிகவும் துரதிஷ்டமானது (It is Unfortunate)

**கேள்வி :** எமது நாட்டில் நடைபெற்று முடிந்த மனிதாபிமானத்திற்கான யுத்தத்தினால் ஏற்பட்ட பலாபலன்கள் யாவை?

**பதில் :** யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல் என மாமேதை லெனின் குறிப்பிட்டார். இராணுவ விஞ்ஞான அகராதியில் இந்த யுத்தம் என்பதற்கு பல விளக்கமும் வரைவிலக்கணமும் வியாக்கியானமும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒன்று இதனை வலிந்து தாக்குதல் (Offensive Operation) என்பார்கள். அடுத்து தற்பாதுகாப்பு யுத்தம் (Defensive War) என்பார்கள். அடுத்து அழித்தொழிப்பு யுத்தம் (Combat Mission) மற்றது அபயமளிக்கும் பணி (Rescue Mission) என்கிறார்கள். இதில் எங்கு பொதுமக்களுக்கு எதுவித பாதிப்பும் இல்லையோ அங்குதான் அதனை மனிதாபிமானத்திற்கான யுத்தமும், சமாதானத்திற்கான யுத்தமும் (War for Peace) அதுவேயாகும். அமெரிக்கப் போரில் ஏனஸ்ட் ேறமிங்வேயும் (Earnest Herming Way) கிரிமியப் போரில் (Lord Byron) கவிஞர் லோட் பைரனும் பிரெஞ்சுப்போரில் மார்க்கே டீலபாயற்றும் பங்கு பற்றினார்கள்.

அவர்கள் யாவரும் பெரும் மேதைகள். அவர்கள் மனிதாபிமானத்தைக் காக்கவே போரிட்டார்கள். வரலாற்றில் இடம் பிடித்தார்கள்.

இலங்கையின் வரலாற்று சாசனம் எனக் குறிப்பிடப்படுகின்ற மகாவம்சத்தை எழுதிய மாநாமதேரர் என்ற பௌத்த பிக்கு அதன் பாட்டுடைத்தலைவனாகிய துட்டகைமுனு புத்த மதத்தைக் காப்பாற்றவே தான் எல்லாளனுடன் போரிட்டதாக அவன் குறிப்பிட்டதாக (I Fought For Baddhism)மஹாவம்சத்தில் மஹாநாமதேரர் குறிப்பிட்டுள்ளார். இதை விட திடீர் இராணுவப் புரட்சிகளைக் கூட இரத்தம் சிந்தாப் போர்கள் என்பார். அப்பாவிப் பொது மக்களைப் பாதிக்கபடக் கூடாது. அதுவே மனிதாபிமானத்திற்கான போர் என வரையறுக்கப்பட்டுள்ளது.

பண்டைக்காலத்தில் போரில் ஈடுபடும் தரப்புக்கள் பெண்கள் , குழந்தைகள், முதியவர்கள் , கால்நடைகள் (பசுக்கள்) என்போரை போர்க்களத்திருந்து அகற்றிவிட்டே போர் புரிந்தார்கள். அதனை ஆநிரை கவர்தல் என்றார்கள். இப்போதெல்லாம் போர்க்கால மரபுகள் மறக்கப்பட்டு நீண்டகாலமாய்ப் போய் விட்டது.

சட்டம் தொடர்பான உங்கள்
சந்தேகங்களை எமக்கு எழுதி
அனுப்புங்கள்
**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## உள்ளூராட்சித் தேர்தல்

*(14ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இதில் இளையோர் மட்டம் 8 பேர். ஏனையோர் 13 பேர். மொத்தம் 21 பேர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் 21 பேர்.இதில் இளையோர் மட்டம் 11 பேர் ஏனையோர் 16 பேர். மொத்தம் 27 பேர்.

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கு 18 பேர். இதில் இளையோர் மட்டம் 10 பேர். ஏனையோர் 14 பேர். மொத்தம் 24 பேர்.

பருத்தித்துறை பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் 9 பேர். இதில் இளையோர் மட்டம் 5 பேர். ஏனையோர் 7 பேர். மொத்தம் 12 பேர்.

சாவகச்சேரி பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் 15 பேர். இளையோர் மட்டம் 8 பேர். ஏனையோர் 12 பேர். மொத்தம் 20 பேர்.

நல்லூர் பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் 12 பேர். இதில் இளையோர் மட்டம் 6 பேர். ஏனையோர் 10. பேர் மொத்தம் 16 பேர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் 9 பேர். இதில் இளையோர் மட்டம் 5 பேர். ஏனையோர் 7 பேர். மொத்தம் 12 பேர்.

கரைச்சி பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் 19 பேர். இதில் இளையோர் மட்டம் 10 பேர். ஏனையோர் 15 பேர். மொத்தம் 25 பேர்.

பூநகரி பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் 10 பேர். இளையோர் 5 பேர்.ஏனையோர் 8 பேர். மொத்தம் 13 பேர்.

இவ்வாறு உள்ளூராட்சி மன்றத்துக்கு நடைபெறவுள்ள தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் அல்லது குழுவும் தமது வேட்பு மனுத்தாக்கல் செய்யும் போது பட்டியல் வழங்கப்பட வேண்டும். அத்துடன் மேலே குறிப்பிட்ட வாறு ஒவ்வொரு நகர சபைக்கும் பிரதேச சபைக்கும் பிரதி நிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இவ் உள்ளூராட்சி மன்றத்துக்கான தேர்தல் எவ்வாறு நடைபெறவுள்ளது. இதனை எவ்வாறு வாக்காளர் கைக்கொள்வது, வாக்காளருக்கு உள்ள உரிமை பற்றி நாம் நோக்குகின்ற போது,

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பின் பிரகாரம் தேர்தல் முறை, விகிதாசார முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் அம்முறையின் கீழேயே பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படக்கூடியவாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. அவற்றில் பின்வரும் இரண்டு சட்டங்கள் முக்கியமானவை.

1. 1987 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம்.

2. 1990 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம்.

இதன் பிரகாரம் விகிதாசார முறையின் பட்டியல் அமைப்பின் கீழ் தேர்தல் நடைபெறும்.

**மாதிரி வாக்குச் சீட்டு**
**வாக்களிக்கும் முறை**

| | | |
|---|---|---|
| அரசியல் கட்சி பெயர் | [symbol] | |
| அரசியல் கட்சி பெயர் | [symbol] | |
| அரசியல் கட்சி பெயர் | [symbol] | |
| குழு (சுயேச்சை) I | [symbol] | |
| குழு (சுயேச்சை) II | [symbol] | |

வாக்காளர்கள் முதலில் தமது வாக்கை தாம் விரும்பும் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு இடவேண்டும். பின்னர் தமது விருப்பு வாக்குகளை அளிக்கலாம்.

அரசியல் கட்சிகளுக்கு அல்லது சுயேச்சை குழுவிற்கு வாக்கைப் பாவிக்காமல் பிரதிநிதிகளின் இலக்கத்திற்கு முன்னால் மாத்திரம் புள்ளடி போட்டால் அது செல்லுபடியாகாது.

எனவே முதலில் புள்ளடியை அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவிற்குப் போட வேண்டும். பின்னரே விருப்புரிமை வாக்குகளைப் பாவிக்க வேண்டும்.

ஏனைய தேர்தல்களில் விருப்புரிமை வாக்குகள் மூன்றையும் ஒரே பிரதிநிதிக்கு அளிக்க முடியாது.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர் ஒருவர் தனது மூன்று விருப்பு வாக்குகளையும் விரும்பிய ஒரு பிரதிநிதிக்கு அளிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |
| 10 | | | |
| 11 | | | |

தேர்தலில் கட்சிக்கு அல்லது குழுக்களுக்கு அளிக்கப்படும். வாக்குகளின் தொகைக்கு ஏற்ப விகிதாசார முறையின் கீழ் ஆசனங்கள் கட்சிகளுக்கு அல்லது குழுக்களுக்கு கிடைக்கின்றன. கூடுதலான வாக்குகளைப் பெறும் கட்சிக்கு அல்லது குழுவிற்கு இரண்டு போனஸ் ஆசனங்களும் கிடைக்கும்.

இவ்வாறு தேர்தல் நடைபெற்று கூடுதலான ஆசனங்களை கைப்பற்றும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சை குழு இவ் நகர சபைகளை பிரதேச சபைகளைக் கைப்பற்றும். இவ் உள்ளூராட்சி மன்றங்கள் இடையில் கலைக்கப்பட்டால் தவிர இதன் பதவிக்காலம் நான்கு வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 12

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | ■ | 07 |
| 08 | ■ | 09 | 10 | 11 | 12 | 13 | ■ |
| 14 | 15 | 16 | ■ | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | ■ | 23 | ■ | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | ■ | 32 | 33 |
| ■ | 34 | 35 | 36 | 37 | ■ | ■ | ■ |
| 38 | ■ | 39 | 40 | 41 | 42 | 43 | ■ |
| 44 | 45 | 46 | ■ | 47 | 48 | 49 | 50 |

**இடமிருந்து வலம்**

1.பொது இடங்களில் ஊதியம் இல்லாமல் செய்யும் வேலை

9. நுண்கலை

14.சூரியனிலும் வரும் நெல்லிலும் வரும்

17.கலைகளில் ஒன்று (திரும்பியுள்ளது)

24. தவணை அடிப்படையில் சேமிக்கும் ஒரு முறை

27. கூத்துக்களின் இறுதியில் பாடப் படுவது (குழம்பியுள்ளது)

32. தவிர்

34. பொட்டு

39. உரையாடல்

44. கோபம்

47. லாபம்

**மேலிருந்து கீழ்**

1.ஒரு மொழி

3. பூ

4. மாங்கல்யம்

5. செல்வம் (குளம்பியுள்ளது)

6. சுவைச்சரக்குகளில் ஒன்று (தலைகீழ்)

13. இதைப் பெறுவதற்கு போராட வேண்டும் (தலைகீழ்)

15. திருமணமான பெண்கள்

20. துணி வகைகளில் ஒன்று

23. உலோகம் பெண்கள் விரும்புவது

29. கோபுரம் நேர் உச்சியில் இருப்பது

31.பணம் இதுவரை செல்லுமாம் (குழம்பியுள்ளது)

38.இந்தியாவின் புண்ணிய ஸ்தலங்களில் ஒன்று

42. கழித்தல் குறியீடு

43. மிகப்பெரிய மிருகம் (தலைகிழ்)

**குறுக்கெழுத்து போட்டி 10க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யா | ழ் | ஒ | சை | ■ | கு | ஞ் | சு |
| க | ■ | து | அ | ப | று | ■ | வா |
| சா | வி | ■ | ■ | ச | ம் | ம | தி |
| லை | ல் | மு | ■ | ளி | பு | ■ | ■ |
| ■ | வ | ணி | தை | ■ | ■ | து | பி |
| ர | ம் | வ | ■ | கா | ரி | ய | ம் |
| வு | ■ | ர் | ப | ப் | அ | ■ | ட |
| டி | செ | ■ | கை | பு | ■ | பா | கு |

## பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. **கந்த ஞானமுத்து**
கைதடி மேற்கு,
கைதடி.

2. **வி.தனபாலசிங்கம்**
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

3. **சி.அபிராமி**
199/1 கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

**குறுக்கெழுத்துப் போட்டி 12 இக்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




"எதற்காக நீங்கள் புயல் நிவாரண நிதி கேட்டு வந்திருக்கீங்க?"
நான் எழுதிய கதை புயலைக் கிளப்பிடுச்சு சார்"




"இதென்ன நவீன டீ.வியா?"
"ஆமாம் விளம்பரங்கள் வந்தால் தானே ஓஃப் ஆயிடும் !"




"மாட்டுக்கு எந்த பேங்கிலே லோன் கொடுப்பாங்க?"
எந்த பேங்கிலேயும் மாட்டுக்கெல்லாம் லோன் கொடுக்க மாட்டாங்க!




"இந்த மாத்திரையை சாப்பிடுங்கள் ஒருவாரத்தின் பின் உங்க வியாதி சரியாகிவிடும்"
"அப்போ ஒரு வாரத்தின் பின் மாத்திரையை சாப்பிடுகிறேன் டாக்டர் "




"டீ.வி. அறிவிப்பாளராக வர உங்களுக்கு என்ன தகுதி இருக்கு?"
"பாடசாலையில் படிக்கும்போது தமிழில் ஏழு எட்டு மார்க்தான் வாங்குவேன்!"




"சரித்திரக் கதாசிரியருக்குப் பெண் கொடுத்தது தப்பா போச்சு !"
"ஏன்?"
"சீதனமாக வாகனம் வேணாமாம் பல்லாக்குத்தான் வேணுமாம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

'வாடிய பயிர்களைக் கண்ட போது என் மனம் வாடியது' என்ற இராமலிங்க வள்ளலாரின் சிந்தனையைத் தூண்டும் வரிகள் மனிதநேயம் படைத்த ஒவ்வொரு மனிதனும் எப்படியிருக்க வேண்டும்? என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தகைய மனித நேயப் பண்புகள் எம்மிடம் இருக்கிறனவா? எனக் கேட்டால் ஒரு துளி கூட இல்லை என்பதே உண்மை.

அண்மையில் தமிழர் பண்டிகையான தைப்பொங்கல் தினம் தமிழர் பகுதி எங்கும் கொண்டாடப்பட்டது. புதுப்பானையில் புத்தரிசியிட்டு, சூரியக்கடவுளுக்குப் பொங்கிப் படைத்து உண்டு மகிழும் தினமாக தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவது வழக்கம். தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தைப்பொங்கல் தினமும் விடிவு தராத



தொன்றாகவே விளங்கிவருகின்றமை கண்கூடு. இவ்வருடம் தைப்பொங்கல் பண்டிகை கடந்த 15 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. வழமை போலவே உற்சாகமின்றியும் எதுவித ஆரவாரம் இன்றியும் அத்தினமும் கழிந்துபோனது.

கடந்த 30 வருடங்களில் போரினால் சீரழிந்த வாழ்வு பெற்ற தமிழர்களின் வாழ்வியலில் நல்ல திருப்பங்கள் நிகழ்ந்து வரும் இவ்வேளை, இவ்வருடம் தமிழருக்கு ஏதோ விடிவு பிறக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த எம் மக்களுக்கு அதிர்ச்சிதான் காத்திருந்தது. கடத்தல், களவு, படுகொலைகளுடன் இவ்வருடத்தின் விடியல் புலர்ந்தது. இந்நிலமை யாழ். குடாநாட்டில் தொடர்ந்த வண்ணமிருக்க கிழக்கு மாகாணமும் இயற்கையின் சீற்றத்துக்கு ஆட்பட்டது.

போரின் வலிகள் ஒருவாறு அடங்கியிருக்க இயற்கையும் ஒருகணம் சீண்டிப் பார்த்ததில் பல இலட்சக்கணக்கான எம் உறவுகள் ஏதிலிகளாய் பாடசாலைகள் மற்றும் பொது மண்டபங்களில் தஞ்சமடைந்திருந்தமை மனிதாபிமானம் உள்ளவர்களை வேதனைப் படவைத்தது.

வீடிழந்து, சொத்திழந்து, கூடியிருந்த உறவுகளைப் பிரிந்து தவித்துநின்ற எம் உறவுகளை எண்ணி வேதனைப்படாதோரே இல்லை என்ற அளவிற்கு நாட்டின் நாலாபுறமும் இருந்து மக்களின் நேசக்கரங்கள் நீண்டன.

இந்நிலையில், தைப்பொங்கல் தினத்தை எவ்வித ஆரவாரமும் இன்றி அமைதியான முறையில் கொண்டாடுமாறு பல்வேறு இந்து அமைப்புகளும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன. அதன் படி அநேகமான பிரதேசங்களில் மக்கள் அடக்கமான முறையில் கொண்டாடினர். இதனால், வழக்கம் போலவே தைப்பொங்கல் சோபையிழந்து காணப்பட்டது. இது ஒருபுறமிருக்க, இளைஞர்களின் மனநிலையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது பற்றி அலசமுற்பட்டால், தைப்பொங்கல் தினத்தன்று இளைஞர்களின் அட்டகாசங்கள் எல்லை மீறியே காணப்பட்டன. பட்டாசுகளின் வெடியோசைகள் யாழ். குடாநாட்டை அதிர வைத்தபடியிருந்தன.

சில இளைஞர்கள் வீதிகளில் போவோர் வருவோரின் காலடிகளுக்குள்ளும் பட்டாசுகளைக் கொளுத்தி எறிந்து மகிழ்ந்தனர். மற்றையவர்கள் வேதனைப்படுவதைப் பார்த்து ரசிக்கும் பண்பு எம்மிடையே அதிகரித்து வருவதற்கு இச்சம்பவமும் ஒரு முன்னுதாரணமாகும்.

கிழக்கு மாகாணத்தில் எம் சகோதரர்கள் துன்பத்தில் வெந்து துடித்தல் கண்டும் சிந்தையிரங்காத மனநிலை எல்லோர் மனங்களிலும் ஆழ வேர்விட்டுள்ளமையே எம்மினத்தின் இன்றைய இழிநிலைக்கு இதையும் ஒரு காரணமாகக் கூறலாம். யாழ். குடாநாட்டு ஒருசில இளைஞர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் பற்றி இப்பத்தியில் பல தடவை சுட்டிக்காட்டியிருந்தோம்.

அவர்களின் அராஜகமான நடவடிக்கைகள் புனித நாளான தைப்பொங்கல் தினத்திலும் கூட அதிகரித்திருந்தன.

பல இடங்களில் இளைஞர்கள் மது போதையில் அடிதடியில் ஈடுபட்டதையும் காணமுடிந்தது. பல இளைஞர்கள் குழுக்களாக சந்திக்குச் சந்தி குந்தியிருந்து வம்பளந்ததையும் காணமுடிந்தது.

பல ஆயிரம் ரூபா செலவழித்து பட்டாசுகளை வகை தொகையின்றி கொளுத்தி எறிந்தனர்.

தைப்பொங்கல் தினத்திற்கு முதல் நாள் இரவு கூட மக்கள் நிம்மதியாக உறங்கக் கூட முடியாதளவிற்கு பட்டாசுகளின் வெடியோசைகள் குடாநாட்டை அதிரவைத்தன. வெடியோசைக் கலாசாரத்திலிருந்து ஒருவாறு விட்டுப்பட்டுவிட்டோம் என்ற சந்தோசத்திலிருந்த மக்களுக்கு, குறிப்பாக மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மீண்டும் வன்னி மண்ணின் அவலத்தை மீள் ஞாபகமூட்டுபவையாக வெடியோசைச் சத்தங்கள் அமைந்திருந்தன. ஷெல்லடிகளுக்கும் வேட்டொலிகளுக்கும் மத்தியில் வாழ்ந்த நாம், மீண்டும் பழைய வாழ்வுக்குத் திரும்பி விட்டோமோ என்ற மனநிலையை ஞாபகமூட்டுவதாக அமைந்ததாக அண்மையில் மீளக் குடியமர்ந்த அன்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

பல வர்ணங்களை உமிழும் வான வேடிக்கைகளும் அவ்வப்போது வானத்தை பிரகாசிக்கச் செய்துகொண்டிருந்தன.

இலங்கையின் ஒரு பகுதியில் எமது சொந்த உறவுகள் இருப்பதற்கு இடமின்றி, உண்பதற்கு உணவின்றி, உடுப்பதற்கு உடையின்றி அல்லற்பட்டு அந்தரித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் எமக்கும் அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்ற கோதாவில் நடந்திருப்பதை மனிதாபிமானம் உள்ள எவராலுமே ஏற்றுக் கொள்ள முடியாது.

கிழக்கு மாகாணத்தில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட யாழ். குடாநாட்டிலிருந்து யாழ். பல்கலைக்கழகம் உட்பட பல பொது அமைப்புக்கள் ஈடுபட்டமை பற்றி பாராட்டாமல் இருக்க முடியாது. அங்கு எம்மவர்கள் நிர்க்கதிக்கு உள்ளாகித் துடித்துக்கொண்டிருக்கும் போது உலகிலுள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் தம்மாலியன்ற பங்களிப்பை நல்கினர். இவ்வாறு உலகிலுள்ள அனைத்து மக்களுமே எமக்காக கண்ணீர் வடித்துக்கொண்டு இருக்கையில், எமது பிரதேசத்தைச் சேர்ந்த சில இளைஞர்களின் செயற்பாடுகள் கவலையளிப்பதாக உள்ளன. பட்டாசு வாங்குவதற்காகச் செலவிட்ட பணத்தை கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியிருக்கலாம். காசைக் கரியாக்கும் கைங்கரியங்களில் ஈடுபடும் இவ்விளைஞர்கள், நிர்க்கதியாக அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் மக்களைப்பற்றித் துளியளவும் கவலைகொள்ளவில்லை என்பதே சோகம் தரும் விடயமாகும்.

உலகிலே இன்று பல்வேறு விதமான மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன. வாழ்க்கைச் சக்கரத்தின் வேகமான சுழற்சிக்கு ஈடுகொடுக்க முடியாமல், சிந்திப்பதற்கே நேரமின்றி மனிதவாழ்வு நகர்ந்து வருகிறது. இன்றைய இளஞ்சந்ததியைப் பொறுத்த வரையில் வன்முறைப் படிமங்கள் மனங்களில் பதிவு பெற்றுள்ளன.

எதற்கெடுத்தாலும் அடிதடி வன்முறை, வெட்டுக் கொத்து என வன்முறைக் கலாசாரம் விரிந்து பரந்துசெல்கின்றன. இவ் வன்முறைக் கலாசாரம் தமது வயதையொத்தவர்களுடன் மட்டும் என்று மட்டுப்படுத்திக் கொள்ளாமல், வயதுக்கு மூத்தவர்களுடனும் சண்டித்தனம் காட்டும் பண்பாடு எம் இளைஞர்களிடையே இன்று மேலோங்கியுள்ளது. 'கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்பது போல, எமது இளம் சந்ததி சென்றுகொண்டிருப்பது எமது இனத்திற்கு ஆரோக்கியமான விடயமல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.


**இலங்கையின் ஒரு பகுதியில் எமது சொந்த உறவுகள் இருப்பதற்கு இடமின்றி, உண்பதற்கு உணவின்றி, உடுப்பதற்கு உடையின்றி அல்லல் பட்டு அந்தரித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், எமக்கும் அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்ற கோதாவில் நடந்துகொண்டிருப்பதை மனிதாபிமானம் உள்ள எவராலுமே ஏற்றுக் கொள்ள முடியாது.**

எம்மினத்தின் பண்பாட்டுக் கூறுகள் சிதைவடைந்து சென்றுகொண்டிருக்கும் நிலையில் இன்றைய இளம் சந்ததி திசை மாறிப் பயணித்துக் கொண்டிருக்கின்றமையானது, சமூக அபிமானிகளைக் கவலைகொள்ள வைத்துள்ளது. தொடர்ந்தும் இளைஞர்களின் இத்தகைய அழிவுச்செயற்பாடுகளுக்குத் தூபமிடாமல், அவற்றைத் தடுத்து நிறுத்தவேண்டிய கடப்பாடு அனைவரிடத்திலும் உண்டு. அத்தகைய கடமையை விரைந்து நிறைவேற்றுவதற்கு அனைவரும் ஒருமனதுடன் முன்வர வேண்டும் என்பதே காலத்தின் கட்டாயமாகும்.

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...



# இந்து போர்ட் சு.இராசரத்தினம்

## இவரைப் பற்றி 25

**19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந்து மதத்தையும், தமிழையும் பேணிக்காத்த ஆறுமுகநாவலருக்குப் பின்னர் இந்து மதத்தைக் காக்கவென தோன்றியவர் தான் இந்து போர்ட் சு. இராசரத்தினம். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே சட்டத்தரணியாக இருந்த இவர், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை ஆரம்பித்து நாடெங்கும் நூற்றுக்கு மேற்பட்ட சைவ வித்தியாலயங்களை நிறுவி நாவலரின் வழிநின்று மதத்தையும், தமிழையும் காத்தவர். இவரைப் பற்றி சில வரிகள் இங்கே............**

* 1884 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி சுப்பிரமணியம் - மீனாட்சி தம்பதியினருக்கு மகனாக இராசரத்தினம் பிறந்தார்.
* இளம் வயதில் சைவ சமயத்திலும் தமிழ்மொழியிலும் அதிக பற்றுள்ளவரான இவர், உயர்கல்வி பெற்று சட்டத்தரணியானார்.
* கிரிக்கெட் விளையாட்டில் சிறந்தவரான இராசரத்தினம் யாழ். மத்திய கல்லூரியின் கிரிக்கெட் அணிக்கு தலைவராகவும் சிறந்த பந்து வீச்சாளராகவும் சிறந்து விளங்கினார்.
* யாழ்ப்பாணத்தில் இருந்து இலங்கையில் ஈழத் தமிழைக்காத்து வந்த நாவலரின் பணியில் ஈர்க்கப்பட்ட இராசரத்தினம் அவர் போலவே தமிழரின் கலை கலாசாரத்தையும், மதத்தையும், தமிழையும் காக்கும் பணியில் தீவிரமாக இறங்கினார்.
* அக்காலத்தில் உயர்கல்வியைப் பெறுவதற்காக எல்லோரும் மதம் மாறி வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றுச் சென்று உயர் படிப்புக்களைப் படித்துவந்தனர். இக்காலத்தில் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலையை உருவாக்கி அதிலிருந்து பயிற்சி பெற்றுத் சைவாசிரியர்களை உருவாக்கி வந்தார்.
* இவர் உருவாக்கிய திருநெல்வேலி சைவசிரிய கலாசாலை கல்வி வளர்ச்சியில் உயர்வு பெற்று பல சைவாசிரியர்களை யாழ்ப்பாணத்திற்கு அக் காலத்தில் வழங்கியது.
* இந்து போர்னாட் இராசரத்தினம் இளம் வயதில் சைவத்தமிழ் வளர்ச்சிக்கு பல திட்டங்களைத் தயாரித்தார்.
* காலந்தோறும் நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை கருத்தூன்றிக் கவனித்து வரும் இராசரத்தினம், திருநீறு பூசியவாறு படிக்க முடியாத சூழல் உருவானதைக் கண்டு திகைத்தார்.
* ஆறுமுக நாவலர், சமயப் பெரியார்களை ஒன்றிணைத்து சைவத் தமிழ்ப் பிரசாரங்களை செய்ததைக் கேள்வியுற்ற இராசரத்தினம் அதனால் ஈர்க்கப்பட்டு மீண்டும் அதேபோல் ஓர் நிலைமையைக் கொண்டுவர ஆர்வமாக இருந்தார்.
* பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்ற பெரியவர்களை சைவாசிரிய கலாசாலையில் கற்பிப்பதற்காக அழைத்துவருவதில் மிகுந்த ஆர்வத்தோடு இராசரத்தினம் செயற்பட்டார் எனலாம்.
* சேர். பொன். இராமநாதன், வை. துரைசாமி, ஆ. கனகரத்தினம் போன்றோருடன் கருத்து ஒருமித்து இலங்கையில் பல்கலைக்கழகங்கள் உருவாவதற்கு காரணகர்த்தாவாக அமைந்தார்.
* கூட்டுமுறைப் பல்கலைக்கழகங்கள் பிரதேச ரீதியாக அமையப்பெற்றால் தேசிய இனத்தவர்களுக்கு நன்மையாக அமையும் என்ற தீர்க்க தரிசனமான எண்ணக்கருத்தை இராசரத்தினம் முன்வைத்தார்.
* இவரின் தீர்க்கதரிசனமான கருத்தின் படி 1942 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகமும், 1969 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகமும் 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் அரசினால் நிறுவப்பட்டது.
* 1924 ஆம் ஆண்டு சாவகச்சேரி, கோப்பாய்த் தொகுதிகளில் அதிக வாக்குகளைப் பெற்று இந்து போர்ட் இராசரத்தினம் சட்ட சபை உறுப்பினரானார்.
* இவர் சட்ட சபை உறுப்பினராக இருந்த போது ஆங்கிலேயரின் போக்கைக் கண்டித்தும் எத்தனை முறை சட்ட திருத்தங்கள் செய்தபோதிலும் சிறுபான்மைத் தமிழரின் பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருப்பதைக் கண்டித்தும் பேசினார்.
* 1848 ஆம் ஆண்டு தான் மேற்கொண்ட ஆங்கிலக் கல்லூரி ஆசிரியத் தொழிலையும், பரம்பரைச் சொத்துக்களையும் முழுமையாக துறந்துவிட்டு நாவலரின் பொதுப்பணிகளில் முழுநேர ஊழியனாகச் செயற்பட்டு வந்தார்.
* நாவலர் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்வதற்காக 1923 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை உருவாக்குவதற்கு மூலகாரணமாக இவர் விளங்கினார்.
* சட்டவல்லுனரான இவரைத் தேடிவந்த உயர் பதவிகளை எல்லாம் வேண்டாம் என விலக்கிவிட்டு, சைவ வித்தியா (இந்து போர்ட்) சங்கத்தின் முகாமையாளராகவும் செயலாளராகவும் நீண்டகாலமாகச் செயற்பட்டார்.
* சைவ வித்தியாலயத்தில் படிக்கும் பிள்ளைகளை சாதிப்பாகுபாடு பார்க்காது, அனைவரும் கல்வியைப் பெறுவதற்கு கல்வியினைப் போதிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை இறுதிவரை கடைப்பிடித்து வந்தார்.
* பிற்பட்ட சமூகத்திர் கல்வியைப் பெற்று உயர்வடைவதற்கு முட்டுக்கட்டையான பல எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது இவரின் முகாமைத்துவத்தின் கீழ் சைவப் பாடசாலைகளின் இட ஒதுக்கீடு கொடுத்த பெருமை இராசரத்தினத்தையே சாரும்.
* காந்தீயவாதியாகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் இருந்த இவர் தன் மனதில் பட்டதைச் செய்து முடிப்பதில் ஒரு கர்மவீரனாக விளங்கினார்.
* யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, பதுளை, நாவலப்பிட்டி, புத்தளம், மன்னார், சிலாபம், கிளிநொச்சி, வவுனியா, தீவகம் போன்ற இடங்களில் 187 பாடசாலைகளை ஸ்தாபித்து அரசு பொறுப்பேற்றும் வரை அவற்றை நிர்வகித்துவந்த பெருமையும் இவரையே சாரும்.
* மதம் பரப்புவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டு செயற்பட்டு வந்த மிஷனரிகளுக்கு ஒப்பாக சைவச் சிறுவர் இல்லங்களை உருவாக்கி அதில் ஏழை, அனாதைச் சிறுவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கும் வசதிகளை ஏற்படுத்தினார்.
* பரம்பரை பரம்பரையாக சைவ மக்கள் வாழ்ந்து வரும் மாதகல் என்னும் கிராமத்தில் முதன் முறையாக சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் விக்கினேஸ்வராப் பாடசாலையை ஆரம்பித்து நாடு முழுவதும் 121 சைவப் பாடசாலைகள் உருவாவதற்கு காரணமானார்.
* மத அடக்குமுறையும், மொழி அடக்குமுறையும் நிலவிவந்த காலத்தில் சைவ ஏழை மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கிய மக்கள் சேவகன் இந்து போர்ட் சு. இராசரத்தினம் 1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி இவ்வுலகை விட்டுச்சென்றார்.

**தொகுப்பு - அஸ்வின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்போமா?



*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

அதுதான் இந்த வயதினருடைய, கட்டிளமைப் பருவத்தினருடைய இயல்பு. அவர்கள் வளர்ந்தவர்கள் போல நடந்துகொள்ள முயன்றாலும், அவர்கள் சிறுபிள்ளைகள்தான். அவர்களின் சிந்தனையில் பட்டறிவோ, அனுபவ ஞானமோ இருக்காது. இவ்வாறான இளம்பிராயத்துத் தொடர்புகள் ஏற்படுவதற்கும், பின்பு அது வளர்ந்து, நெறிபிறழ்ந்து போவதற்கும் 'மொபைல் போன்' எனப்படும் கைத் தொலைபேசிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. எமது பிரதேசத்தில் ஏற்பட்ட சடுதியான சூழல் மாற்றத்தினால் மிக அதிகளவான கைத் தொலைபேசிகள் பாவனைக்கு வந்துவிட்டன. இவ்வாறான ஒரு வசதியைத் திடீரெனப் பெற்றுவிட்ட ஒரு சமூகம், குறிப்பாக இளைய வயதினர், அதனைத் துர்ப்பாவனை செய்வதிலும் அக்கறை செலுத்துகிறார்கள். தொலைபேசிகளினால் ஏற்படும் தொடர்புகள், தொலைபேசியில் கதைக்கப்படும் விடயங்கள் எல்லாம் மிகவும் அந்தரங்கமாகப் பேணப்படக்கூடிய ஒன்றாக இருப்பதனால், அவை அதிகம் வெளித் தெரிவதில்லை. தொலைபேசியில் கதைக்கும்பொழுது, அது மிக நெருக்கமான தொடர்பாடலாக அமைந்திருப்பதனால் அது சில வேளைகளில் இரகசியமானதாக, போதையேற்படுத்துவதாக அமைந்துவிடலாம். முகம் பார்த்துக் கதைக்கும் பொழுது ஏற்படுகின்ற தயக்கங்கள், கூச்சங்கள் போன்ற எதுவும் தொலைபேசியில் கதைக்கும்பொழுது இல்லாதபடியால், எல்லைமீறிய உரையாடல்களுக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. மேலும் தொலைபேசி மூலம் ஏற்படும் உணர்ச்சிமயமான தொடர்பாடல்கள் உணர்வுகளைத் தூண்டுவதோடு, நாளடைவில் தொலைபேசி உரையாடலுக்கு அடிமையாகிப் போகவும் வழி வகுக்கின்றது. ஆண், பெண் வேறுபாடின்றி, வயது வேறுபாடின்றி, இவ்வாறு தொலைபேசி மூலம் கதைப்பதற்கு அடிமையாகிப்போன திருமணமாகாத, திருமணமான பலரை நான் சந்திக்க நேர்ந்தது.

'எந்த நேரமும் 'ரெலிபோன்'தான். சாப்பிடவும் வாறாள் இல்லை. 'ரூம்' ஐப் பூட்டிப் போட்டு சாமம் சாமமாய்க் கதைக்கிறாள். பிறகு விடிய விடிய நித்திரை கொள்ளுறாள். பள்ளிக்கூடமும் ஒழுங்கில்லை. படிப்பும் இல்லை...'

இது ஓர் அம்மாவின், இல்லை பல அம்மாக்களின் ஆதங்கம். ஆனால் அந்த அவளுக்கு அல்லது அவர்களுக்கு யார் கைத் தொலைபேசி வாங்கிக் கொடுத்தது? அதற்கான தேவை என்ன? போன்ற கேள்விகளுக்கு அந்த அம்மாக்களிடம் தகுந்த பதில்கள் இல்லை. ஒரு விடயம் சிறிய வயதிலிருந்தே, காலம் காலமாகப் பாவனையிலிருக்கும்போது அதனுடைய பாவனை சம்பந்தமான சரியான அளவுகோல்கள் இருக்கும். ஆனால் காணாத ஒன்றைத் திடீரெனக் காணும்போது அதனைக் கட்டுப்பாடாகப் பாவிக்கும் தன்மை குறைவாகவே இருக்கும். தொலைபேசி மாத்திரமல்ல, ஏனைய எல்லாவிதமான தொழில்நுட்ப வளர்ச்சிகளுடன் தொடர்பான பாவனைகளுக்கும், துர்ப்பாவனைகளுக்கும் இதுபொருந்தும்.

மேலே இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட உதாரணத்தில் தெரிகின்ற இன்னுமொரு விடயம் இந்த வகைப்பட்ட பிரச்சினைகளைப் பெற்றோர்கள் எவ்வாறு கையாளுகின்றார்கள் என்பது. 'உந்த வயசிலை உனக்கு உது கேட்குதோ?'; 'உது பற்றிக் கதைக்காதே. கொப்பர் அறிஞ்சால் வெட்டிப் போடுவார்'; 'படிக்கிற நேரம் படிக்கோணும் வேறை சிந்தனை வரக்கூடாது'; 'உமக்குப் பள்ளிக் கூடத்தை நிற்பாட்டி விட்டால்தான் சரி' என்று பெற்றோர் பொரிந்து தள்ளுகின்றபொழுது, பிள்ளைகளுக்குத் தமது பெற்றோருடன் தொடர்புகொள்ளும் வாய்ப்புகளும் வாயில்களும் அடைபட்டுப் போகின்றன. ஆக, ஒரு பிரச்சினையை (இளவயதில் இன்னுமொருவருடன் 'ஓடிப்போதல்' என்பதனை ஒரு பிரச்சினையாக ஏற்றுக்கொண்டால்...) வருமுன் காக்கின்ற வாய்ப்புகள் பெற்றோர்களின் கண்டிப்பான அணுகுமுறைகளால் தவறவிடப்படுகின்றன.

*(தொடரும்)*

வைத்திய கலாநிதி **சா.சிவயோகன்**
(உள மருத்துவ நிபுணர்)

# வீட்டு வைத்தியம்

- சூரிய வெப்பத்தால் சருமம் கருத்து விட்டதா? கவலை வேண்டாம். வேக வைத்த பச்சை உருளைக்கிழங்கிலிருந்து சாறு எடுத்து சருமத்தில் தடவி வரவும்.

- உங்களது முகத்தினை பொலிவாக வைத்துக் கொள்ள வேண்டுமா? கடலை மாவுடன் பயிற்றம் பருப்பு சேர்த்து அரைத்து காலை அல்லது மாலை நீராடச் செல்லுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு தயிர், பால் அல்லது இளநீர் சேர்த்துக் குழைத்து முகத்தில் தடவி 15 தொடக்கம் 20 நிமிடங்களுக்குள் ஊற வைத்து இளம் சுடு நீரால் முகத்தினை கழுவி வாருங்கள். உங்களுக்கும் பொலிவுடன் கூடிய அழகிய முகம் கிடைக்கம்.



- சூரிய வெப்பத்தால் தொல்லையா? மாங்காயை வேக வைத்து ஆறிய பிறகு அதன் விழுதை அடிப்பாதங்களில் தடவினால் சன் ஸ்ட்ரோக் அவதியிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

- கொலஸ்ரோலைக் குறைக்க 1 கப் இளநீர் 200 கிராம் கொட்டை நீக்கிய பப்பாளிச்சாறு சேர்த்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர நல்ல பலன் கிடைக்கும்.

- வெது வெதுப்பான வெந்நீரில் சில வேப்பிலைகளைப் போட்டுக் குளிப்பதால் சருமத்தில் தோன்றும் எரிச்சல் அடங்கும்.

- சமைக்கும் போது விரல்களில் தீக்காயம் ஏற்பட்டால் குளிர்ச்சியான சமையல் எண்ணெயில் விரல்களை நனைக்கவும். பின்னர் அந்த இடத்தில் உப்பைத் தேய்க்கவும்.

- மணல் அல்லது ஏதாவது தூசி கண்ணில் விழுந்தால் சில துளிகள் பாலை விடவும். எரிச்சல் குறையும். தூசியை பின்னர் வெளியேற்றவும் உதவும்.

- கை கால்களில் வெட்டுக்காயம் ஏற்பட்டால் சிறிது கடுகெண்ணெயைச் சுட வைக்கவும். அதனுள் வெள்ளை மெழுகுவர்த்தி ஒரு துண்டு போடவும். குளிர்ந்தவுடன் ஒரு டப்பாவில் ஊற்றிவைத்து வெட்டுப்பட்ட இடங்களில் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை தடவவேண்டும்.

- வயிற்று வலியிலிருந்து விடுதலை பெற வேண்டுமா? வெந்தயத்தைத் தண்ணீர் விட்டு விழுதாக அரைக்கவும். இதை ஒரு டம்ளர் மோரில் கரைத்துக் குடிக்கவும்.

- 1/2 கப் வெந்நீர் ஒரு டீஸ்பூன் நெய் ஒரு டீஸ்பூன் சர்க்கரை சேர்த்துக் குடிப்பதால் ஏற்படும் பிடிப்பு போகும்.

- தேள், பூரான் போன்றவை கடித்தால் உடனே அமோனியாவை கடி வாயில் தடவவும். குளிர்ந்த நீர் அல்லது ஐஸ்கட்டியால் ஒத்தடம் கொடுக்கவும். உடனே நிவாரணம் கிடைக்கும். மயக்க மருந்து போன்றவை தேவையில்லை.

- முடி கொட்டுகிறதா? தேங்காய்ப் பாலுடன் சிறிது எலுமிச்சைச் சாறைக் கலந்து உச்சந் தலையில் தேய்க்கவும். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நீராடவும். ஒவ்வொரு வாரமும் இந்த முறையைப் பின்பற்றுவதால் முடி உதிர்வது தடுக்கப்படும்.

- முட்டையின் வெள்ளைக் கருவை உடலில் பட்ட தீக் காயங்களுக்கு உடனே தடவலாம். சருமத்தில் கொப்புளங்கள் ஏற்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆவது தேசிய இளைஞர் நாடக விழா 2010

## தேசிய விருது பெற்ற கண்டல் அபத்த நாடகம் ஆற்றுகையில் இருந்து உள்நோக்கு

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

கிட்டத்தட்ட 300 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட உடல் சார்ந்த உடல் மொழி சார்ந்த பயிற்சியூடாகவும் ஆற்றுகை வெளிப்பாட்டுப் பயிற்சி ஊடாகவும் நடிப்பானது வெளிக் கொணரப்பட்டு ஆற்றுகைப் படுத்தப்பட்டது.

நாடகத்தின் உயிர்ப்பு விசை இசையாகும். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் எஸ்.சதீஸ் இசையை வழங்கினார். நாடக கருவோட்ட சிந்தனைப்புலத்தை கூறிய போது அதற்கு வலுக்கொடுக்கும் வகையில் துல்லியமான இசைக்கோலத்தை வழங்கி பலரும் பாராட்டும் வகையில் படைப்பை முழுமைத்துவமாக்கினார். நெறியாழ்கை சிந்தனைக்கு ஏற்பவும் நாடகம் சார் துல்லியமான புரிதலுக்கு அமையவும் கஜேந்திரன் இசைமூலம் உடல் மொழி வெளிப்பாட்டிற்கு உருவேற்றியுள்ளார்.

நாடக ஒப்பனையானது குறியீட்டு பிரதி நிதித்துவ அடிப்படையில் முகங்கள் மறைக்கப்பட்டு வெள்ளையடிக்கப் பட்டன. உடையானது அனைத்து நடிகர்களுக்கும் ஒரே வகையானதாக வடிவமைக்கப்பட்டன. நாடகக் காட்சிப் பின்னணியாக பட்ட மரம் ஒன்றின் மேல் சிலந்தி வலை போன்ற சிக்கல் காணப்படுவது போல காட்சிப் படுத்தப்பட்டது. இப் பட்டமரமானது நாடகத்தின் முழுக் கதைப் பொருளையும் சொல்லாமல் சொல்ல முனைந்தது.

நாடகப் போட்டிக்காக தெரிவு செய்யப்பட்ட எழுத்துருவுக்கு பேராசிரியர் சபா ஜெயராசா தந்த ஊக்கம் தேசியம் நோக்கி வெற்றியைத் தந்தது. 'எழுத்துரு எழுதப்பட்ட முறைமையானது அபத்த நாடக கட்டமைப்பு சிதையாமல் எழுதப் பட்டுள்ளது' என ஊக்கம் தந்தவர்.

கண்டல் எனும் நாடகமானது 19 ஆம் நூற்றாண்டில் அறிமுகமான அபத்த அரங்கின் பண்புகளை தன்னகத்தே உள்வாங்கி எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரின் எழுத்துரு நெறியாழ்கையில் நிகழ்கால உலகின் யதார்த்தத்தை வெளிக்கொண்டு வருவதாய் படைக்கப்பட்டது.

ஆற்றுகைக்கான தயார்படுத்தலின் நெறியாளர்களால் ஆற்றுவோரின் சிந்தனைக்கு பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டது. அபத்த நாடக பாணியானது நடிகருக்கு புதிய முறையாகக் காணப்பட்டதால் இவ் நாடகமுறை பற்றிய விளக்கம் நடிகர்களுக்கு முதல் வழங்கப்பட்டு அதற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. நாடக காட்சிகள் அனைத்தும் நெறியாளர்களின் மேற்பார்வையில் நடிகர்களினால் ஒழுங்கமைக்கப்பட்டது.

கண்டல் நாடக ஆற்றுகையின் போது நடிப்பு ரீதியிலும் பல புதிய அனுபவங்களைப் பெறக்கூடியதாக அமைந்தது. முன்னர் ஈடுபட்ட நாடக ஆற்றுகையில் இருந்த இவ் ஆற்றுகையானது முற்றுமுழுதாக வேறுபட்டதாக அமைந்தது. மொழிகளின் போதாமை உணரப்பட்டதால் மொழி கடந்த மொழிகளிற்கும் உடல் மொழிக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இதனால் நடிகர்கள் தமது உடலினை முழுவதுமாய் பயன்படுத்தும் வண்ணம் வேண்டப்பட்டனர். அதில் வெற்றியும் கண்டனர். இவ் வெற்றிக்கு நெறியாளர்களின் சிந்தனை போக்கும் அபத்த பயிற்சியுமே காரணங்களாயி என்றார்.மூத்த நாடகக் கலைஞர் கொழும்பு கலைச்செல்வன்.

எமது நாடகக் குழு கொழும்பு சென்று ஆற்றுகை செய்வதற்கான சகல ஒழுங்குகளையும் ஏற்படுத்தி தந்தார்.

ஆற்றுகையிலே பங்கு கொண்ட நடிகர்களது உணர்வும் நாடகம் சார் கற்றுக் கொண்டமைக்கான சான்றுகளும் புதியதோர் தளத்தில் பெறப்பட்டதாக இருக்கும் என நம்புகின்றேன் என்றார் நடிகர் என்.கி.கிளைநிதன்

நாடகப்படைப்பின் வெற்றியானது அப் படைப்பு சமூகத்தோடு கொண்டுள்ள தொடர்பாடலிலேயே தங்கியுள்ளது. அவ் வகையில் இவ் வெற்றியின் அனுபவப் பதிவினை நோக்கலாம்.

அபத்த நாடகங்கள் வாழ்வில் முக்கிய இடம்பெறுகின்றன. இந் நாடகத்தின் கருவாக்கத்தில் இருந்து அதன் வெற்றி வரையான பாதைகள் வித்தியாசமானதாக அமைகின்றன. நாடகம் என்பதில் சில வகையானவை விளங்கிக் கொள்ள முடியவில்லை. என்ற கருத்துநிலை காணப்படுகின்றது. ஒரு படைப்பு விளங்கவில்லை என்றால் படைப்பாளியின் தவறா அல்லது சுவைஞர்களின் பிற்போக்குத் தனமான கருத்தா என்பது வினாவிற்குரியது. எம்மிடையே அரைத்த மாவினை மீண்டும் மீண்டும் அரைப்பது போன்று யாரோ ஒருவர் உருவாக்கிய படைப்பினைப் போன்று மீண்டும் மீண்டும் படைப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதுடன் புதிய சிந்தனைப் போக்குடன் படைப்புக்கள் வெளிவரும் போது புரியவில்லை/ விளங்கவில்லை என ஒற்றை வரியில் கருத்துரைத்துவிட்டுச் செல்பவர்களை அவதானிக்கலாம்.

காரணம் ஈழத்தமிழ் அரங்கினை பொறுத்தவரையில் அபத்த நாடகங்களினது வருகை என்பது குறைவானதாகவே காணப்படுகின்றது. அவ்வடிப்படையில் அபத்த நாடகப் படைப்பிற்கான அடித்தள வேலையிடங்கள் மேற் கொள்ளப்பட்டன. இதற்காக பல்வேறு பட்ட வகையிலும் நடிகர்கள் தயார்படுத்தப்பட்டதுடன் எழுத்துப் பிரதியின் உருவாக்கத்தில் பல விவாதங் கள் மேற்கொள்ளப்பட்டு முழுமைப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு விடயமும் கூர்மையும் அவதானத்துடனும் மேற்கொள்ளப்பட்டது.

முதல் மேடையேற்றத்தின் போது நாம் எத்தகைய சிந்தனையின் அடிப்படையில் மேற்கொண்டோமோ அவற்றினை பகீரதி கணேசதுரை ஆசிரியர் குறிப்பிட்டபோது அடுத்த நகர்வுக்கு வழிகோலியது. ஆயினும் மேலும் கருத்திட்டவர்கள் விளங்கவில்லை, மேடைவுடை பொருந்தவில்லை, நாடகமில்லை என்றெல்லாம் கருத்திட்டனர்.

நாடகம் என்பது வெறுமனே வசனம் பேசுவதாகவும் அல்லது கதாநாயகத்தன சிந்தனையுடனும் காணப்படட வேண்டும் அல்லது ஆரம்பம், உச்சம், முடிவு காணப்பட வேண்டும் எனும் அரிஸ்ரோட்டலிய சிந்தனையுடன் காலத்தை ஓட்டுபவர்களுக்கு புரியாது போக மாறாக நாடக படைப்பில் அதன் வெளிப்பாட்டில் உடல் மொழிகள் முக்கியத்துவம் நேர்த்தியான அசைவியல் பாத்திரங்களுக்கிடையிலான ஒழுங்கமைப்பு நேர்த்தியான இசையிணைப்பு என்பன அமையும் போது நாடகத்தினை புரிந்து கொள்வதில் இடர்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகும்.

நடிகர்களாக வெளிவாரி பட்ட மாணவர்களே செயற்பட்டனர். ஆயினும் தொடர்நிலை நாடக செயற்பாட்டிற்கு அவர்களால் இயங்கமுடியாத போது புதிய ஆற்றுகையாளரை இணைக்க வேண்டியதால் உயர்தர நாடகமும் அரங்கியலும் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டன. இவர்களது அர்ப்பணிப்பான செயற்பாடும் நாடக வெற்றிக்கான காரணமாகியது.

நாடக காட்சிகள் நடைமுறை வாழ்வியலில் பதிவுகளாகவே காணப்படுகின்றது. சமூகத்திலே அகௌரவங்கள் கௌரவங்களாகவும் மலிந்து போய்விட்ட சமூகத்திலே இயலாமையும் வலிகளுமே எஞ்சிப் போயுள்ளதாக அமைகின்றது. மனிதர்களும் அவர்களது கனவுகளும் ஆதர்சமானவை. ஆனால் அக்கனவுகள் அதிகாரத்துவத்தில் உள்ளவர்களினால் அழிக்கப்படும் போது வாழ்வு அர்த்தமற்றதாகிவிடுகின்றது. வாழ்வு சூனியமாகி மனிதன் அந்நியமாகி வாழ்வினை இழந்து தவிப்பான். இவற்றினை மையமாகக் கொண்டே படைப்பு அமைந்திருந்தது.

இப்படைப்பில் வெற்றியானது பல புதிய சிந்தனையோட்டத்திற்கும் தன்னம்பிக்கைக்கும், விடாமுயற்சிக்கும், நேர்த்தியான திட்டமிடல், ஒழுங்கமைப்பு, அர்ப்பணிப்பான செயற்பாட்டுகொன வெற்றியாகவே அமைகின்றது.

இப்படைப்பின் வெற்றிக்கு ஆதரவும் பாராட்டும் தந்த நண்பர்களுக்கும் நாடகவியலாளர்களுக்கும் மற்றும் ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகள்.





எஸ்.ரி.குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களும் உதவிப் பொருட்களும்

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு வகையில் உதவிகளை வழங்கிவருகின்றன. இவ் உதவிகளை பிரதேச செயலகங்களில் வைத்து அரச அதிகாரிகள் முன்னிலையில் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

இவ் உதவிகளைப் பெறுவோர் பல நன்மைகளை அனுபவிக்கும் அதே வேளை, அவ் உதவிப் பொருட்களை தங்கள் வீடுகளுக்கு கொண்டு செல்வதில் பெரும் கஸ்ரங்களை எதிர் கொள்கின்றனர்.

மீளக் குடியமர்ந்த மக்களுக்குத் தொழில் உபகரணங்கள் வழங்குவதில் பல நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. எனினும் தொழில் உபகரணங்கள் அவர்களது கிராமங்களுக்கு கொண்டு சென்று வழங்கப்படுவதில்லை. இம் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்த வழங்கப்படும் பொருட்களை அவர்கள் பெற்றுக் கொண்டு செல்வதில் பல கஷ்டங்களையும் பண இழப்புக்களையும் சந்திக்கின்றார்கள்.

குறிப்பிட்ட ஒரு பிரதேச செயலகத்தில் தனிப்பட்ட தேவையின் நிமித்தம் அண்மையில் சென்றிருந்தேன். பிற்பகல் 3.30 மணியிருக்கும் அவ் அலுவலகத்தின் முன்பக்கத்தில் நிகழ்வு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. என்ன நிகழ்வு என்று அறிய ஆவலாக அங்கு சென்று பார்த்தேன்.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று இலங்கையில் உள்ள ஒரு நிறுவனம் ஒன்றின் ஊடாக வன்னியில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்தோருக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுதான் அது.

மேற்படி நிகழ்வுக்கு மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் மொத்தமாக 29 பயனாளிகள் அழைக்கப்பட்டு தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. குறிப்பிட்ட பிரதேச செயலகத்தின் நிருவாக சேவையைச் சேர்ந்த அதிகாரி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொருட்களை சம்பிரதாயமாக வழங்க புகைப்படம் எடுக்கும் செயற்பாடும் இடம்பெற்றன.

இத் தொழில் உபகரணங்களில் நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார மோட்டர், வியாபாரத்திற்குரிய தளபாடங்கள் மற்றும் தையல் இயந்திரம் ஆகியவற்றுடன் ஏழு பசுக்கன்றுகளும் அடங்கியிருந்தன. கலந்து கொண்ட பயனாளிகளில் பொருள் வழங்கப்பட்ட இடத்தில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு பசுக் கன்றுகள் வழங்கப்பட்டன.

இப்பசுக்கன்றுகளைப் பெற்றுக் கொண்ட பின்புதான் பயனாளிகள் சிந்திக்கத் தொடங்கினார்கள். 'கிடைத்த பசுக்கன்றுகளை எவ்வாறு கொண்டு செல்வது என்று' அதாவது குறிப்பிட்ட பிரதேச செயலக வளாகத்திலிருந்து தமது வீடுகளுக்கு எவ்வாறு பசுக்களைக் கொண்டு செல்வது என்ற நிலை அவர்கள் மத்தியில் தோன்றியது.



புது எஜமான்களைக் கண்ட பசுக்கன்றுகள் வெருண்டன. பயனாளிகள் செய்வதறியாத நிலை. இந்நிலையில் இருந்த ஒருவரிடன் விடயம் அறிய முனைந்தேன்.

தான் 5 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து வந்ததாகவும் பெற்றுக் கொண்ட பசுக்கன்றை எவ்வாறு கொண்டு செல்வது என யோசிப்பதாகும் தெரிவித்தார். அதற்கு நான் ஏதாவது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு போகலாம் தானே எனக் கேட்டேன்.

அதற்கு அவர் தான் லாண்ட் மாஸ்ரர்காரரிடம் கேட்டதாகவும் 'பசு மாடு மற்றும் மிருகங்களை ஏற்றுவதாக இருந்தால் உரிய பாதுகாப்புடன் தான் ஏற்ற வேண்டும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளார்கள்' எனத் தெரிவித்தார்.

இதன் போது அயலில் நின்ற இருவர் கதைத்துக் கொண்ட விடயம் எனது காதுக்கும் கேட்டது அதில் ஒருவர் 'நிறுவனங்கள் தரும் உதவிகளை எங்கள் கிராமத்தில் வைத்துத் தரலாம்தானே. ஏன் வேறொருபிரதேசத் தில் வைத்து தருகிறார்கள் என்று தெரியவில்லை' என இழுத்தார். மற்றவரும் அதற்கு இசைவாக தலையாட்டினார்.

கிராமங்களில் கொண்டு வந்த உதவிகளைத் தந்தால் இலகுவாக வீடுகளுக்கு கொண்டு செல்லமுடியும். ஆனால் இதனை ஒரு நிறுவனங்களும் மேற்கொள்வதில்லை எனத் தொடர்ந்தார்கள். அவர்கள் கதைத்துக் கொள்வதில் நியாயம் இருப்பது தெரிந்தது.

குறிப்பிட்ட பொருட்களைப் பெற்றவர்கள் தங்கள் வீடுகளுக்கு கொண்டு செல்வதற்கு குறிப்பிட்ட அளவு பணம் செலவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

உதவிப் பொருட்கள் இலவசமாகக் கிடைக்கின்ற போதும் அதனை கொண்டு செல்வதற்குரிய கூலியினை மக்களே செலுத்துவது வழமையாகும்.

எனவே பொதுமக்களுக்கு அதாவது மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கும் நிறுவனங்கள் அவர்களுடைய கிராமங்களுக்கு கொண்டு சென்று வழங்கினால் உதவியைப் பெறுபவர்கள் இலகுவாகக் கொண்டு செல்ல முடிவதுடன் மேலதிக பணச் செலவும் எற்படாது என்பது கண்கூடு.

ஞானத்தமிழ்

# தந்தைபோல் தரணியில் தெய்வமுண்டோ



தந்தையைப்போல் தரணியில்
தெய்வமுண்டோ? அவர்
தன்னை உலக்குக்கு எம்மினிய
வாழ்வுக்காக
எமக்காக ஓயாது உழைப்பவர்
என்றென்றும் எமது தந்தையே!

அறிவுப் பசியை போக்க அரிய
நூல்களைத் தேடித்தந்து
அயராது உழைப்பவர் எம் தந்தை
செல்வத்தை தேடி தேசமெங்கும்
சென்று உழைப்பவர்
செழிப்புற எம்மைவாழ வைப்பவர்
பெருமை மிகு தந்தை

சொல்லைச் செயலாக்கி சொக்கிட
வைத்து எம்
சொப்பனத்தை நினைவாக்கி
ஜோதியாக திகழும்
என்றென்றும் உழைத்திடும்
தியாகசெம்மல்
மெழுகுவர்த்தியாக இருந்து எம்மை
வாழவைப்பவர்

எம் தந்தையை என்றும்
தலைவணாக்கி
ஏற்றிப் புகழ்ந்திடுவோம் எம் தந்தையை
போற்றிப் புகழ்ந்திடுவோம்
புவி தன்னில் எம் எதிர்கால
சந்ததியினர்.

கவிஞர் கந்த ஞானமுத்து
கைதடி மேற்கு -02

## உனக்காக என் சிந்தனையில்

தானத்துரோகிகள் தடை செய்தாலும்
தனிமனிதராய்
உன் இலட்சியம் அடையும் வரை போராடு.

மானமிழந்து மாளிகையில் நீ வாழ்வதை விட
மானத்தோடு குடிசையில் வாழ்வது மேலானது.

நீ நேசிக்கும் பலர் உன்னை மறக்க
நினைத்தாலும் உன்னை நேசிக்கும் சிலரை நீ
மறக்காதே.

முடியாது என்று சொல்லி நீ ஒதுங்குவதை விட
முடியும் வரை போராடுவேன் என்பது
மேலானது.

ப.நிகிந்தன்
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய இன்பம்

அறிவுடையவர்கள் பேச்சில் அழகிருக்கும். அர்த்தம் இருக்கும் ஆழம் இருக்கும். எவ்வாறானவர் களுடன் எப்படியெல்லாம் பேச வேண்டும் எனச் சபையறிந்து பேசுபவர்கள் அறிவாளிகள். பண் டைத் தமிழ் நூல்களிலும் பெண் கள் அறிவுத்திறன் பெற்று விளங் கியதாகச் செப்புகின்றன.

ஔவையார் சிறந்த பெண் புல வர். கவி பாடுவதில் மட்டுமன்றி அறிவிலும் மேலானவர். ஔவை யாரை விடவும் பல பெண் புல வர்கள் கவி பாடியிருக்கின்றமை பற்றி நம்மில் பலருக்குத் தெரியா மலிருக்கலாம். இத்தன்மையான ஒரு நிகழ்ச்சி பற்றிப் பார்ப்போம்.

முற்காலத்தில் நந்திவர்மன் என்ற மன்னன் அரசாண்டு வந் தான். இவன் சிறந்த கொடை யாளி. வீரனும் கூட. இம் மன்னன் மீது கலம்பகம் பாடப்பட்டது. இதையே நந்திக்கலம்பகம் என் பர். அந்நூலிலுள்ள முழுப் பாடல்களும் இப்போது இல்லா விட்டாலும் சில பாடல்கள் எஞ்சி யிருக்கின்றமை தமிழிற்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

நந்திவர்மனின் மனைவி சிற ந்த அறிவும் பண்பும் உடைய வள். கவி பாடுவதிலும் வல்ல வள், கற்புக்கரசி. உயர்ந்த உள்ள மும் இனிய பேச்சும் வாய்க்கப் பெற்றவள். இத்துணை சிறப்புப் பெற்ற நந்திவர்மனின் மனைவி அழகிலும் சிறந்து விளங்கினாள். ஆனால் நந்திவர்மனோ தன் மனைவியை விடுத்து வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்தி ருந்தான். அப் பெண்ணின் மோக வலையில் வீழ்ந்த மன்னன் அவ ளுடனே காலங் கழித்தான்.

இம்மன்னின் செயல் குறித்து நந்திவர்மனின் மனைவி பெரி தும் கவலையுற்றாள். உள்ளம் துடித்து வெயிலில் கிடந்த புழு வைப் போல வருந்தினாள். இது இவ்வாறிருக்க அக் காலத்தில் இசையில் வல்லவர்கள் பாணர் கள். அவர்கள் நன்றாகப் பாடுவ துடன் மட்டுமன்றி யாழ், வீணை, குழல் முதலிய பல இசைக் கரு விகளையும் இசைப்பதில் வல்ல வர்கள். பாணர்கள் ஊர் ஊராகச் சென்று தமது பாடல்களை இசைக்கருவிகளிலும் மீட்டி பரி சில்களைப் பெறுவார்கள். பாணர் களுடைய மனைவியர்களும் நன்கு பாடுவார்கள். அவர்களை விறலியர்கள் என அழைப்பர். சங்கநூல்களிலே பாணர்களைப் பற்றிய செய்திகள் பல இடங்க ளில் வருகின்றன.

இந்த நந்திவர்மன் என்ற அர சன் கணிகைப் பெண் ஒருத்தி யின் வீட்டில் இருந்த போது பாணன் ஒருவன் அன்று இரவு முழுவதும் பாடிக் கொண்டிருந் தான். மன்னனை மகிழ்விக்கும் பொருட்டு பாணர்கள் தமது இசைக் கருவிகளில் மீட்டிப் பாடு வது வழமை. அவ்வாறே இவ னும் மன்னனை மகிழ்விக்கும் பொருட்டு பாடிக் கொண்டிருந் தான்.

பொழுது புலர்ந்தது. பாணன் நந்திவர்மனின் மனைவியான மாதரசியிருக்குமிடத்திற்கு வந் தான். பாணன் விடியுமளவும் தன் கணவன் இருந்த வீட்டில் பாடிய பாடல்களை இம் மாதரசி கேட்ட படிதான் இருந்தாள். அவளது உள்ளம் துடித்தது. கோபம் கொப் பளித்தது. பாணனை அடித்துக் கொல்ல வேண்டும் போல இருந் தது. ஆனால் அவள் கோபத்தை வெளிக்காட்டாமல் பெண்ணி யல்பில் பிழை வரக்கூடாதென்ப தால் பாணனை நோக்கி நலன் விசாரித்தாள் அந்த மாதரசி.

பாணனே நீ சுகமாக இருக்கிறா யா? நேற்றிரவு நீ பாடிய பாடல் கள் அத்தனையும் கேட்டேன். என் தங்கை (தன் கணவனின் விருப்பத்திற்குரியவள் என்ப தால் கணிகைப் பெண்ணைத் தன் தங்கை என்றாள்) வீட்டில் மன்னன் இருந்த போது நீ பாடிய பாடல்கள் என் உறக்கத்தைக் கெடுத்தன என்றாள். அதற்கு அந்தப் பாணனோ அம்மா வணக் கம்! எல்லாம் தங்கள் ஆசீர்வாதம் தான் எனது பாடல்கள் எப்படியி ருந்தன? இனிமையாக இருந்த தா? தாங்கள் தானே பாடல்களின் அருமை அறிந்தவர் என்றான். இவனது கருத்தைக் கேட்ட அம் மாதரசியோ பாணனே உனது பாடலைப் பற்றி அதிகம் எனது தங்கை (கணிகைப் பெண்) வீட் டிலே நீ விடியுமளவும் பாடிய பாடல்களைக் கேட்டு எனது தாய் 'பேய் கத்துகிறது போலிருக்கின் றது' என்றாள். மற்றவர்களோ 'நரி ஊளையிடுகிறது போலிருக்கி றது' என்றனர். எனது தோழியோ 'நாய் குரைக்கிறது' என்றாள். ஆனால், நான் அவர்களுக்கு நீ பாடியதாகத் தான் கூறினேன் என்றாள். மாதரசி கூறிய பதி லைக் கேட்ட பாணன் நாணமுற் றவனாக தலையைக் குனிந்த வாறு நின்றான்.

அரசிஅப்பாணனை நாகரிமான முறையில் புகழ்வது போல இகழ் ந்தாள். நிந்தனையிலும் ஒரு அழ கிருக்கிறது. இதனை இலக்கியத் தில் வஞ்சிப்புகழ்ச்சி அணி என்று கூறுவார்கள்.

மாதரசி அப்போது கூறிய கருத்து பாடல் வடிவில் இதோ,

'ஈட்டு புகழ் நந்தி பாணநீ எங் கையர் தம்
வீட்டிலிருந்து பாட விடியள வும்; காட்டிலழும்
பேயென்றாள் அன்னை பிறர் நரி என்றார்; தோழி
நாயென்றாள்; நீயென்றேன் நான்'

என்ற பாடல் மூலம் பா ணனுக்குத் தனது வேதனையை வெளிப்படுத்தினாள்.

முற்காலத்தில் அரசாண்ட அர சர்கள் பலர் தமது அரசியர்களை வஞ்சித்து கணிகைப் பெண்க ளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். தமது வாழ்வின் பெரும்பாலான காலத்தை களி யாட்ட நிகழ்வுகளிலேயே கழித்து வந்தன. எனப் பழந்தமிழ் நூல் கள் வாயிலாக அறியக்கிடக்கின் றது. இதனால் பல்வேறு வகை யான விபரீதங்களும் நேர்ந் துள்ளன. அரசனுக்கு மட்டுமன்றி நாட்டுக்கே ஊறு விளைவித்த மை பற்றியும் இலக்கியங்கள் வா யிலாக அறிகிறோம். சிலப்பதிகா ரத்தில் கோவலன் தன் ஆசை மனைவியாகிய கண்ணகியை விட்டுப் பிரிந்து கணிகைப் பெண்ணான மாதவியுடன் கால ங்கழிக்கத் தலைப்பட்டமையி னாலேதான் மதுரை மாநகரமே எரிந்த வரலாறு பற்றிப் படித்தி ருப்பீர்கள். எனவே தான் அரசன் தன் மக்களினதும் நாட்டினதும் பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டுமே தவிர குந்தமாக இருக்கக் கூடாது என்றே பழந்த மிழ் நூல்கள் செப்புகின்றன. தர்மநெறி வழுவாது செங்கோல் தளம்பாது ஆட்சி புரிந்த மன்னர்க ளும் உண்டென்ற வரலாற்றை யும் இலக்கியங்களூடாகப் பார்க் கிறோம்.

எனவே தான் ஒரு நாடு சிறப் புற்று இருக்க வேண்டுமாகில் அந் நாட்டுக்குச் சிறந்த தலைவ னான அரசனும் அறிவுள்ள அமை ச்சர்களும் இருக்க வேண்டும். இத னால் நாட்டு மக்கள் அனைவரும் எவ்வித இடையூறுகளுமின்றி நல்வாழ்வு வாழ்வார்கள் என்ற கருத்தை இலக்கியப் பாடல்கள் எமக்கு உணர்த்துகின்றன.

**எஸ். நதிபரன் B.A. (Hons)**

# ஊர்ப் புதினம்



வேலை ஒன்றைச் செய்ய ஓர் அவசரத் தேவை க்கு ஆணி, நட்டுக்கள், சணல் நூல், கம்பித் துண்டு என்பவற்றைத் தேடி அவதிப்படு வோர் பலரைக் கண் டுள்ளோம்.

ஏன் இதை வாசிக்கும் நீங்க ளும் அவ்வாறன ஒருவராக இருக்கக் கூடும்.

அண்மையில் உறவினர் ஒரு வரின் வீட்டுக்குச் சென்ற போது அங்கு கண்ட சம்பவம் ஒன்றை உங்களுடன் பகிர விரும்புகிறேன். அக்குடும்பத் தலைவர் ஓர் அரச உத்தியோ கத்தர். வீட்டில் பால்மா வரும் காட்போட் பெட்டி ஒன்றை வைத்துள்ளார். அதில் கையில் அகப்படும் ஆணிகள், ஊசிகள், நைலோன் நூல், சணல் நூல்,கம்பி, சிறிய தடி, பிளாஸ் ரிக் துண்டுகள், சிறிய போத் தல்கள் என அகப்படும் பொருள்கள் எல்லாவற்றையும் போட்டு வைப் பார்.வீட்டில் ஏதாவது வேலை ஒன் றைச் செய்யும் போது அவற்றுக்கு உத வக்கூடிய பொருள்களை இப் பெட்டி யில் இருந்து பெற்றுக் கொள்வார். தனது வேலையை விரைவாகவும் இல குவாகவும் நேர்த்தியாகவும் செய்து முடித்து விடுவார்.

தனது பிள்ளைகளின் பாடசாலைக் கைப்பணிப் பொருள்களை உரு வாக்கும் வேலையையும் செய்ய இப் பெட்டியிலுள்ள பொருள்கள் உதவுவ தாகவும் குறிப்பிட்டார்.

'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என எம் முன்னோர் கூறிய சொல்லின் மெய்ப்பொருளை அங்கு கண்டேன். பாவனைக்கு உதவாத பொருள் ஒன் றுமே இல்லையென்பது தான் எமது நடைமுறை வாழ்வின் உண்மை எமக் குக் கற்றுத் தருகின்றது.

நான் பார்த்த அவ்வீட்டில் கடையில் பொருள்களை வாங்கிய சொப்பிங் பைகளையும் பெரிய சொப்பிங் பையி னுள் போட்டு வைப்பார். அதனுள் பொ லித்தீன் பைகள், கடதாசிப் பைகளும் போட்டு வைத்துள்ளார். தேவைப்படும் போது அவற்றை எடுத்து பொருள்கள் வாங்குவதையும் கூறினார். கிணற்றடி யில் சம்போ வெற்றுப் பைகளை சவர்க் கார உறைகளை போடுவதற்கென்று சொப்பிங் பையொன்று வைத்துள்ளார். அதனுள் அவற்றைப் போட்டு வைப்ப தன் மூலம் மண் வளம் பாதுகாப்படுவ துடன் வீட்டுச் சூழல் துப்பரவாக இருப் பதையும் காணமுடிகின்றது. வெற்று சம்போ பக்கெற், சவர்ககார உறை கொண்டு பிள்ளைகளின் பாடசாலை ஆக்கத்திறன் வேலைகளை மிக அழ காக செய்வதாகவும் குறிப்பிட்டார்.

இவை நல்ல முன் உதாரணங் களல்லவா? நாமும் கடைப்பிடித்தால் என்ன?

சூழல் துப்பரவாகும் பணமும் மிஞ் சும் எமது வேலையயும் இலகுவாகும்.

நல்லனவற்றை பாருங்கள் கடைப்பி டித்து சிறப்பாக வாழுங்கள்.

**- சிவகாமி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கை தீவு கடற்கரை



பாரம்பரிய கலைகள், கலாச்சாரம், தொழில்கள் என்பன கட்டிக் காக்கப்படும் யாழ்ப்பாணத்தின் வட மேற்கு பகுதியில் இயற்கை அழகு எழில் கொஞ்சும் பச்சைப் பசேல் என்ற வெற்றுக் காணிகளோடு காணப்படும் ஓர் இடமே காக்கை தீவு கடற்கரை ஆகும்.

தன்னகத்தே மிகவும் குறுகிய சிறிய கடற்ப்பரப்பைக் கொண்ட இவ் கடற் கரைப் பகுதி சண்டிலிப்பாய் பிரதேச செயலக, மானிப்பாய் பிரதேச சபை ஆகியவற்றின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடமாகும்.

இச் சிறிய கடல் பகுதியினை நம்பி காக்கை தீவு கிராமத்தையும் சாவல்கட்டு கிராமத்தையும் சேர்ந்த சுமார் 845 வரையிலான மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த 600 ற்கு மேற்பட்ட மீனவர்கள் இச்சிறிய கடல் பரப்பினை நம்பி வாழ்க்கையினை நடத்தி வருகின்றார்கள்.

இவர்கள் உழைக்கும் வருமானம் அதிகம். ஆனால் இவர்களது வாழ் நிலையோ மிகவும் கொடுமை! இவ் மீனவர்கள் ஒரு நாள் கடலிற்குள் கால் வைக்காவிட்டால் அன்றைய தினம் வீட்டில் உணவு இல்லை. இங்கே தான் நாம் அனைவரும் உற்று நோக்க வேண்டும். ஆரம்பத்தில் நான் கூறியிருந்தேன் 'உழைக்கும் உழைப்போ அதிகம் வாழும் வாழ்க்கையோ மிக வறுமை' என அது இங்கே புலனாகின்றது.

எனவே இவர்களுடைய வாழ்வில் என்ன நடக்கின்றது? இவர்கள் உழைக்கும் பணம் எங்கே போகின்றது, என எனக்கு நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம் இருந்து வந்தது. அதனை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துடன் அம் மீனவர்களில் முதிர்ந்த அனுபவம் மிக்க ஒரு வயதான மீனவரை அணுகி இவ்விடயம் குறித்து வினாவினேன். அவர் அளித்த பதில் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியதுடன் மிகுந்த மனக் கவலையினையும் அளித்தது.

அவருடைய இவ் ஆழ்ந்த பதில்களை நீங்களும் அறிய வேண்டும் என்ற ஆவலுடன் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

'தம்பி நீங்கள் கேட்டது உண்மை தான் நாம் அனைவரும் நாளாந்தம் பல ரூபா பெறுமதியான கடல் உணவுப் பொருட்களைப் பிடித்து வருகின்றோம். ஆனால் அப் பணம் முழுவதும் எங்களுடைய வீடுகளிற்குக் கொண்டு செல்ல முடிவதில்லை ஐயா' எனப் பெருமூச்சு விட்டார் அந்தப பெரியவர்.

தொடர்ந்து அவர் பேசுகையில், 'தம்பி எங்கள் பகுதி மீனவர்கள் படும் நிலையினை நான் தெளிவாக கூறுகின்றேன். எனக்கு இப்ப வயது 59 முடிந்துவிட்டது. நான் இப்பவும் கடற் தொழிலிற்குச் சென்று உழைத்தால் தான் விடிய எனது குடும்பம் உணவில் கை வைக்கும். இல்லாது விட்டால் நானும் எனது மனைவியும் பிள்ளைகளும் அன்று வெறும் தண்ணீர் குடிக்க நேரிடும்' என்றார்.

**" மீனை விற்பனைக்காக கூறுபவர், விலை கூற முதல் அவற்றில் உள்ள மீன்களில் மிகப் பெரிய மீன் ஒன்றினை எடுத்து கூறல் மேற்கொள்ளப்படும். விலை நிர்ணயிக்கப்பட்ட பின்னரும் அதிலும் உள்ள மிகப் பெரிய மீன் ஒன்றினை மீண்டும் எடுப்பார்கள். அதுவும் எங்கள் மீன்தான். இவர்கள் பெரிய மீன் எடுப்பார்கள் என்பதால் வியாபாரிகள் அதற்கு ஏற்றவாறு விலையினை கேட்பார்கள். "**

இதற்கு எல்லாம் காரணம் எம்மிடம் போதிய முதலீடு இல்லாமையே. தம்பி நான் சிறு பிள்ளையாக (வயது 13) இருக்கும்போது எனது அப்பாவுடன் தொழிலுக்கு வர ஆரம்பித்தேன் அப்போது எனது அப்பாவிடம் எந்த தொழில் உபகரணமும் இல்லை (வலை, வள்ளம்). எனவே அப்பொழுது எனது அப்பா எங்கள் பகுதிகளில் உள்ள தொழிலுக்காகப் பணம் வழங்கும் கூறியான்மார்கள் என்றழைக்கப்படும் ஒருவரிடம் சென்று பணம் பெற்றார். அப்பொழுது அவர்கள் சில நிபந்தனைகளை முன் வைப்பார்கள் அதாவது நாம் பிடிக்கும் கடல் உணவுகள் அனைத்தையும் (மீன், இறால், நண்டு,கணவாய்) தங்களூடாகவே விற்பனை செய்யவேண்டும் என்றும் மீறினால் உடனடியாகவே வட்டியும் முதலுமாக தமது பணத்தை திருப்பித் தரவேண்டும் என்று கட்டளையிட்டார். வேறு வழியின்றி பணத்தை திருப்பிக் கொடுக்க சம்மதித்து பணத்தினை வாங்கி வந்து கடல் உபகரணங்களை கொள்வனவு செய்து தொழிலில் ஈடுபட்டு மீன்களைப் பிடித்து விற்பதற்காக இக் கூறியானிடம் ஒப்படைப்போம்.

இங்கு தொடங்குகிறது எங்கள் மீதான சுரண்டல். அதாவது நாம் கொண்டு வரும் மீன்களை குறிப்பிட்ட அளவை முதலில் போட்டு விலை கூற ஆரம்பிப்பார்கள். விலை கூற முதல் அவற்றில் உள்ள மீன்களில் மிகப் பெரிய மீன் ஒன்றினை எடுத்த பின் கூறல் மேற்கொள்ளப்படும் பின் விலை நிர்ணயிக்கப்பட்ட பின்னர் அதிலும் உள்ள மிகப் பெரிய மீன் ஒன்றினை எடுப்பார்கள். அதுவும் எங்கள் மீன்தான். காரணம் இவர்கள் பெரிய மீன் எடுப்பார்கள் என்பதால் வியாபாரிகள் அதற்கு ஏற்றவாறு விலையினை கேட்பார்கள்.

இப்படி எங்களுடைய மீன்களை மூன்று அல்லது நான்கு தடவைகள் விலை கூறப்படும். இதனால் கூறியானுக்கு ஆறு அல்லது எட்டு மீன்கள் கிடைக்கும் எங்கள் ஒரு தொழில் சார்பாக.

இவ்வாறு விற்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியினைத் தான் தருவார்கள். மிகுதியினை தமது கடன் கழிவு விற்பனைக் கழிவு என கூறுவார்கள்.

எனவே நாங்கள் மழை, வெயில் என பாராது கஸ்டப்பட்டு உழைத்த பணத்தில் எமக்கு கிடைப்பது மிக சொற்ப அளவு, இடைத்தரகர்கள் அநுபவிப்பது மிகப் பெரிய அளவு. இவர்கள் தரும் சிறு தொகைப் பணத்தினை நாம் தொழிலிற்குச் சென்றவர்கள் பிரிப்போம் எமக்கு ஒருவருக்குக் கிடைப்பது மிக மிக சொற்ப பணம். இதில் ஏறக்குறைய 1/2 பங்கு பணம் கூறியானுக்கு கிடைக்கும்.

இது தான் எங்கள் அப்பப்பா, அப்பா, இன்று நான், நாளை எனது பிள்ளைகள் என அனைவரும் கண்டு வரும் சுரண்டல் கலாசாரம் ஆகும்.

இப்படியாக காலம் செல்லுமானால் எமது கடல் உபகரணங்கள் முழுமையாக அழிவடைந்து எச்சப் பெறுமதி கூட இல்லாமற் போகும். மீண்டும் கூறியானை நாடிச் செல்வோம். அவர் பழைய கணக்குகள் பார்த்து ஏறக்குறைய 1/4 பங்கு அல்லது 1/2 பங்கு பணந்தான் கழிந்ததாகக் கூறி புதிய பணத்தினை தருவார். ஆகவே இப்பொழுது எங்கள் கடன் சுமை வீதம் 1 1/2 மடங்காக அதிகரித்து விடும்.

எனவே இப்படித் தான் தம்பி நாம் ஒரு நாச வட்டத்திற்குள் பல தசாப்த காலமாக அடிபட்டு வாழ்கிறோம். எனது அப்பா பட்ட கடனுடன் ஆரம்பித்து எனது கடன் எனது பிள்ளைகள் வரை போய் நிற்கின்றது' என்றார்.

இறால், மீன், நண்டு கொள்வனவுக்கென பல புதிய கூறியான்மார்கள் முளைத்திருக்கிறார்கள். அவர்கள் வேலையும் அதே பழைய கூறியான் மார்களுடைய வேலைதான். *(30ஆம் பக்கம் பார்க்க...)*

எஸ்.கே.ஆனந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் விளையாட்டுச் செய்திகள்

## உதைபந்தாட்ட சம்பியனானது இளவாலை ஹென்றியரசர் கல்லூரி

அச்சுவேலி

யாழ். வலிகாமம் கல்வி வலய பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. இரண்டு அணிகளும் தீவிரமாக விளையாடியபோதும் ஆட்ட நிறைவில் ஹென்றியரசர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை வெற்றி கொண்டு வலிகாமம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

## ஒலிம்பிக் போட்டிக்குத் தெரிவு

தெல்லிப்பளை

கோண்டாவில் சிவபூமி மன விருத்திப் பாடசாலை மாணவன் சிவராஜா துஷ்யந்தன் அகில இலங்கை விசேட தேவையுடையோருக்கான மெய்வல்லுநர் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

19 வயதான துஷ்யந்தன் 100 மீற்றர் ஓட்டப்போட்டியிலே 1ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். வடமாகாணத்தில் இருந்து இப்போட்டிக்காக ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சர்வதேச விசேட தேவையுடையோருக்கான ஒலிம்பிக் போட்டி கிரிஸ் நாட்டில் நடைபெறவுள்ளது. இதற்காக எட்டுப் பேர் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்டு கிரீஸ்நாட்டுக்கு பயணமாகவுள்ளனர். இவர்களில் துஷ்யந்தனும் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் எழுத்துப் பரீட்சை முடிவுகள்

அரியாலை

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான எழுத்துப் பரீட்சையை நாடளாவிய ரீதியில் கடந்த மாதம் நடத்தப்பட்டது.

இவர்களுக்கான பரீட்சை முடிவுகளை கொழும்பிலுள்ள இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கம் வெளியிட்டுள்ளது. இதில் யாழ். மாவட்டத்தில் 'ஏ' பிரிவில் மூவரும் 'பீ' பிரிவில் 12 பேரும் 'சி' பிரிவில் 13 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு-

'ஏ' பிரிவில் க.கனகராஜா, ப.பார்த்தீபன், தி.துஷ்யா.

'பி' பிரிவில் பி.முகுந்தன், எம்.மதிவதனன், பா.தணிகைவேள், எஸ்.யசிந்தன், ப.ஜெயகரன், எஸ்.சிவச்செல்வன், எஸ்.சாள்ஸ் இன்பதாஸ், ஐ.சசிகுமார், எஸ்.வசந்தகுமார், எஸ். மனோன்மணி, வி. சிவாசிறி, எம்.ஆர். மோகனதாஸ்.

'சி' பிரிவில் வி.ஜெயதீபன், எஸ்.பாஜுராஜா, ஆர்.முகுந்தன், எஸ்.சஞ்சயன், எம்.வினோகாந்தன், ரி.இந்துகான், ஜே.விஜிதா, கே.கஜேந்திரன், எஸ்.செல்வரதன், ஆர்.யுகராஜ், எம். நவதீபன், எஸ்.தயானி, எஸ்.சிவகாந்தன் ஆகியோரே சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான செயன்முறைப்பரீட்சை நாளை 29 ஆம் திகதி துரையப்பா விளையாட்டு மைதானத்தில் காலை 7.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

## ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழகம் வெற்றி

அரியாலை

மஞ்சி பிஸ்கட் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் யாழ்.மாவட்ட வலயப் போட்டிகள் நீர்வேலி ஐக்கிய விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.

இப் போட்டியில் 08 அணிகள் மோதிக் கொண்டன. இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழகம், ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினை இலகுவாக 25: 18, 25:22, 25:21 என 3 நேர் செற்றுகளில் வென்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

## கரப்பந்தாட்ட சங்கத்திற்கு புதிய நிர்வாகசபை தெரிவு

அரியாலை

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் 2011 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செயயப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபை உறுப் பினர்கள் விபரம் வருமாறு -

தலைவராக க.ஏகாம்பரமும் செயலாளராக கி.மனோகரனும் பொருளாளராக குமாரசிவமும் உபதலைவர்களாக ந.சுதேஸ்குமார், சி.அப்புத்துரை ஆகியோரும் உபசெயலாளராக வ.செந்தூரனும் நிர்வாக சபை உறுப்பினர்களாக க.நாகேந்திரன், ரி.திவாகர், ந.முருகதாஸ்காந்தன், ச.செல்வச்சந்திரன், செல்வி சிந்துஜா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் 32 கழகங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளன.

2010ஆம் ஆண்டில் இலங்கை கனிஸ்ட பெண்கள் கரப்பந்தாட்ட அணியில் யாழ் மாவட்ட வீராங்கனை புகழரசி இடம் பெற்றதனைப் போல் இவ்வாண்டும் பல வீரர்கள் தேசிய அணித் தெரிவில் இடம்பெற அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் எனத் தலைவர் க.ஏகாம்பரம் கூறினார்.

## யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட மைதானத்தை புனரமைத்துத் தருமாறு அமைச்சரிடம் கோரிக்கை

அரியாலை

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் விளையாட்டு மைதானத்தினை உள்ளக விளையாட்டு மைதான நிலைக்கு கொண்டுவருதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் பிரதிநிதிகள் நக்கா வீதியில் அமைந்துள்ள கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தினை நவீன மயப்படுத்தப்பட்ட உள்ளக விளையாட்டு மைதானமாக சர்வதேச தரத்திற்கு புனரமைத்துத் தருமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

மாநகர சபைக்குச் சொந்தமான மேற்படி விளையாட்டு மைதான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் மாநகரசபை அதிகாரிகள் கரப்பந்தாட்ட சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் மைதானத்தின் சுற்றாடலில் அமைந்துள்ள சனசமூக நிலைய நிர்வாகத்தினர் பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் பொது மக்களுக்கும் சனசமூக செயற்பாடுகளுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் கரப்பந்தாட மைதானத்தினை அமைத்து தருவதாகவும் இதற்குரிய மதிப்பீடுகளை விரைவில் சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அமைச்சர் பணிப்புரைவிடுத்தார்.

யாழ்பாணத்தில் கரப்பந்தாட்ட விளையாட்டை மேம்படுத்தி தேசிய நிலைக்கு வீரர்களை முன்னேற்ற வேண்டியது சகலரினதும் கடமையாகும். அதற்கு தான் உறுதுணையாக இருப்பேன் எனவும் அமைச்சர் உறுதியளித்தார்.

## வலிகாம வலய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி

அரியாலை

மஞ்சி பிஸ்கட் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் இலங்கை முழுவதும் நடாத்தப்படும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் வலிகாம வலயப் போட்டிகள் அளவெட்டி அருணாசலம் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த 22ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் சங்கானை 'யுத்' விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், சங்கானை யுத் விளையாட்டுக் கழகத்தினை 25: 18, 25:20, 19:25, 28:30, 15:09 என 3:2 என்ற செற்கணக்கில் வென்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.



காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழக கரப்பந்தாட்ட அணியினர். (படம்-அரியாலை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு எண் மூலம் பலனை அறிதல்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**07**

இந்த எண் உள்ளவர்களுக்கு அந்த ஆண்டினை நான்காகப் பிரித்தே பலனைக் கூறவேண்டும். முதல் மூன்று மாதங்களிலும் தொழில் மாற்றம் அல்லது பதவி உயர்வு, வெளியூர் செல்லுதல், குடும்பத்தில் சச்சரவு ஆகியவை நடைபெறும். பணத்தட்டுப்பாடுகள் இருந்துவரும். கணவன் மனைவியரிடையே சுமூகமான உறவு காணப்படாது.

இரண்டாவது மூன்று மாதங்களில் தீமையைத் தவிர நல்லவற்றைக் காணவும் முடியாது. துயரமான சம்பவம் ஒன்றும் நிகழலாம். பணத்தைப் பார்ப்பதே அபூர்வமாகி விடும்.

வழக்குகள் நடந்து கொண்டிருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். எதிர்பாராதவகையில் முன்னோர்களின் சொத்துக்கள் சேரும். பெண் வகையில் பண வரத்துக்கள் இருக்கும்.

மூன்றாவது மூன்று மாதங்கள் மந்த நிலையிலேயே செல்லும். தொழிலில் சச்சரவு அல்லது மனக் கவலை காரணமாக தொழில் நடைபெறுவதே கடினமாகிவிடலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியைக் காண முடியாது.

கடைசியும் நான்காவதுமான மூன்று மாதங்கள் அதிஷ்டகரமானவை. நினைத்த காரியம் நடைபெறும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். பணவருவாய் பெருகும். புதிய ஜீவன்கள் ஒன்றும் தோன்றலாம். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவும். அரசாங்கம் அல்லது தனியாரிடம் பணிபுரிபவர்களுக்குப் பதவி உயர்வும் மேலதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும்.

**08**

பெரு முயற்சிக்கப் பின்னரே எட்டு எண்ணுள்ளவர்களுக்கு காரியங்கள் பயனைத் தருவதாக முடியும். நம்பிக்கைகைத் துணைகொண்டு இருக்க வேண்டும். சிறு அவநம்பிக்கையும் வீபரீதத்தையே விளைவிக்கும். கிட்டத்தட்ட இந்த ஆண்டு பாண்டவர் அஞ்ஞாதவாசம் செய்தது போலவேதான். சிறு நன்மைகள் ஏற்பட்டாலும் தீமையே தலைதூக்கி நிற்கும். ஆனால் தெய்வ பக்தி அதிகரிப்பதன் மூலம் தீமைகளின் கொடுமை குறையும். கடைசி நிமிஷத்திலாவது உதவி கிடைக்கும்.

வழக்கு, வீண் சச்சரவு முதலியவற்றில் தலையிடாது இருப்பது நல்லது. சகோதர, சகோதரிகளிடத்திலும் சுமுகமாக நடந்து கொள்ளாவிட்டால் வீண் தொல்லைகளே ஏற்படும்.

இவ்வளவு தீமைகளுக்கிடையே பணத் தட்டுப்பாடு இருக்கவே இருக்காது. எப்படியாவது யார் மூலமேனும் பணம் வந்து கொண்டேயிருக்கும்.

சில சமயங்களில் கடைசி நிமிடத்தில் எதிர்பாராத இடத்திலிருந்து உதவி கிடைக்கும். தாம்பத்ய வாழ்க்கையில் நிம்மதி நிலவும். வெளித் தொல்லைகளை அது மறக்கச் செய்து மன மகிழ்ச்சி, அமைதி பெற்று இன்பமுடன் இருக்க துணை புரியும்.

**09**

எண்ணுடையவர்களில் அரசாங்கத்தில் பணிபுரிபவர்களுக்கு இந்த ஆண்டு யோகமானது. அவர்களுக்கு ஊதிய அதிகரிப்பும், பதவி உயர்வும் ஏற்படும். சிலருக்கு வெளியூர் மாற்றமும், புகழும் உண்டாகும். தவறான வழியில் செல்லாமலும் இந்த ஆண்டு தடுத்து நிறுத்தும்.

சொந்தமாக வியாபாரம் செய்பவர்கள் இந்த ஆண்டு தம் வியாபாரத்தை அதிகரிக்கமால் இருப்பது நல்லது. சிறிது அதிக லாபம் கிடைப்பதற்காக வேறு புது முயற்சியில் ஈடுபடலாகாது. தனிப்பட்டவர்களிடம் பணிபுரிபவர்களுக்கு நன்மையும் தீமையும் கலந்ததாகவே இருக்கும். ஊதிய உயர்வு கிடைத்தாலும் வேலைத் தொல்லை அல்லது குடும்பத்தில் சச்சரவு ஆகியவை மன அமைதியைக் கெடுக்கும்.

ஒன்பது எண்ணுள்ள எவருடைய குடும்பத்திலும் சுபகாரியம் நடைபெறும். நிலம் வாங்குதல்,புதுமனை புகுதல் போன்றவை ஏற்படும். நெருங்கிய உறவினர்களின் உதவி கிடைக்கும். நண்பர்கள் ஆதரவு காட்டி தொழிலை உற்சாகமூட்டுவார்கள்.

(முற்றும்)

## 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [28.01.11 முதல் 03.02.11 வரை]

### கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



*** மேஷம்**

மேட ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு நன்மை தரக்கூடிய நிலைகள் ஏற்படும். வேலைப்பளுவும், தொழில் நிலை அலைச்சலும் அதிகமாக அமையும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு நன்மைகள் அமைய பலாபலன் உண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலைப்பாடு இருக்கும். எதிர்பாராத வகையில் திடீர் பிரயாணங்கள் ஏற்படும் நிலையிருக்கும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு மன மகிழ்ச்சி அமையும். மாணவர்களுக்கு முயற்சி வேண்டும்.



*** இடபம்**

இடபராசி அன்பர்களுக்கு எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய நிலை இருக்கும். தொழில் நிலையில் சிறப்புகள் அமையும் பலனுண்டு. குடும்பத்தில் நல்ல மகிழ்வும் சுபகாரிய பலன்களும் ஏற்படும்.

பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலேயே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் அனுகூலமான வெற்றிகள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. பெண்களுக்கு நன்மைகள் உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



*** மிதுனம்**

மிதுன ராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலாபலன்களே ஏற்படும். அலைச்சலும், பண விரயமும் சற்று அதிகமாக இருக்கும். குடும்ப நிலையில் மனச் சஞ்சலம் தேவையற்ற பிரச்சினை இருக்கும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலேயே அமையும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள், மருத்துவ செலவுகள் ஏற்படும். கடன் நிலைகளில் மத்திமமான பலன்களே கொடுக்கும். பெண்களுக்கு மன சஞ்சலம் இருக்கும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.



*** கடகம்**

கடகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். குடும்ப நிலையில் நல்ல மகிழ்வும் நன்மைகளும் ஏற்படுகின்ற நிலையுண்டு. பணவரவு நல்ல நிலையிலே அமையும் பலனுண்டு. மனைவி மூலமாக நற்பலா பலன்கள் அமையும் நிலை உண்டு. தொழில் நிலைகளிலும் நற் பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலமான நிலை ஏற்படும். பெண்களுக்கு அனுகூல பலன் அமையும். மாணவர்களுக்கு மத்திம பலன் ஏற்படும்.



*** சிம்மம்**

சிம்ம ராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே ஏற்படும். எந்தவிடயம் என்றாலும் பொறுமை நிதானத்துடன் செயற்பட வேண்டும். தொழில் நிலையில் வேலைப்பளு, அலைச்சல் நிலைகள் அமைந்திருக்கும். குடும்ப நிலையில் பணவிரயம், மருத்துவ செலவுகள் என்பன ஏற்படும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலைப்பாடு உண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலைகள் அமைந்திருக்கும். பெண்களுக்கு மனச் சஞ்சலமிருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.



*** கன்னி**

கன்னிராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணவரவு திருப்திகரமான நிலையில் அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் மகிழ்வு தரும் விடயங்களும் ஏற்படும்.

பிள்ளைகளின் மூலம் நன்மையான பலாபலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



*** துலாம்**

துலாம்ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு நற்பலன் அமையும். மனநிலையில் சஞ்சலங்களும் யோசனைகளும் அதிகரிக்கும்.

தொழில் நிலைகளில் அலைச்சல், இழுபறி நிலை இருக்கும். குடும்பத்தில் சற்று செலவீனம் அதிகமாக அமையும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் இழுபறி நிலைகள் தொடரும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு மேன்மை உண்டு.



*** விருச்சிகம்**

விருட்சிக ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றி அமையும். தொழில் நிலைகளில் சிறு சிறு பிரச்சினைகள் இடையிடையே ஏற்படும். பணவரவு சுமாரான நிலையிலேயே அமையும்.

சகோதரர் வழியில் சிறு சிறு மனச் சஞ்சலம் ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை இருக்கும். பெண்களுக்கு மனசஞ்சலம் இருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.



*** தனுசு**

தனுசு ராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலுமான பலாபலன்கள் ஏற்படும். குடும்பத்தில் நல்ல மகிழ்ச்சி அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் நிலையுண்டு. பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். உறவினர்களின் மூலம் நன்மையான பலன்கள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



*** மகரம்**

மகரராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் தடை தாமத நிலைகள் இருக்கும். குடும்பத்தில் பணவிரயம், மனச் சஞ்சலம் என்பன அமைந்திருக்கும். பணவரவு சுமாரான மத்திமமான நிலையிலேயே அமையும். எதிர்பாராத வகைச் செலவீனங்கள் அதிகமாக இருக்கும். கடன் நிலைகளில் சற்று இழுபறியான நிலைகள் தொடரும். பெண்களுக்கு மனச் சங்சலமுண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.



*** கும்பம்**

கும்பராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலுமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் இழுபறி நிலை இருக்கும். குடும்பத்தில் மனச் சஞ்சலம், செலவீனம் என்பன அமையும். எதிர்பாராத வகை திடீர்ச் செலவீனங்கள் அமையும் நிலையுண்டு. பணவரவு சுமாரான மத்திமமான நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலனே ஏற்படும்.

பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு மத்திம பலன் ஏற்படும்.



*** மீனம்**

மீனராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றகரமான பலன் ஏற்படும். பணவரவு மிகம் திருப்திகரமான பலாபலனில் ஏற்படும். குடும்பத்தில் மிகவும் அனுகூலமான பலாபலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். கடன் நிலைகளில் அனுகூலமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இப்படையெடுப்பை மேற்கொண்ட மன்னனை வரலாற்றறிஞர்களில் ஒரு சாரார் இராஷ்ரகூட மன்னன் எனவும், வேறுசிலர் இரண்டாம் பராந்தக சோழன் எனவும் கூறுகின்றனர்.

இவன் யாராக இருப்பினும் படையெடுப்பு நடந்த இடம் நாகதீபம் என்பது முக்கிய நிகழ்ச்சியாகும். இப்படையெடுப்பு நாகதீபத்தை வெற்றி கொள்ள மேற்கொள்ளப்பட்டதா அல்லது நாகதீபத்தை வெற்றி கொண்டதன் பின்னர் அங்கிருந்து அநுராதபுர அரசின் மீது படையெடுக்க மேற்கொள்ளப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் ஏறத்தாழ இதேகாலப்பகுதியில் சோழ மன்னர்களாக இருந்த முதலாம், மற்றும் இரண்டாம் பராந்தக சோழன் இலங்கை மீது படையெடுத்தது பற்றிய செய்திகள் தமிழக வரலாற்று மூலங்களில் காணப்படுகின்றன. அதில் முதலாம் பராந்தக சோழன் இலங்கையில் சில அரசியல் வெற்றிகளை அடைந்ததாக அவன் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன. இந்த வெற்றிகளின் மூலம் அவன் 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வருமன்' எனப் புகழ்ந்துரைக்கப்பட்டதை அவனது 38வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு கூறுகின்றது (SII. VolI: 35). இச்செய்தியை கலிங்கத்துப்பரணி (இராச பாரம்பரியம் பாடல் : 23), குலோத்துங்கன் உலா (வரிகள்: 44-46), இராசராச சோழன் உலா (வரிகள் : 38-40) முதலான நூல்களும் உறுதிப்படுத்துகின்றன. இருப்பினும் இவ்வெற்றிகளையிட்டு இலங்கை வரலாற்றேடுகளில் எந்தச் செய்திகளும் காணப்படவில்லை. இருப்பினும் யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய பிற்கால இலக்கியங்கள் சோழர் வருகையுடன் கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட தமிழ் அரசின் தலைநகர் சிங்கை நகருக்கு இடமாறியதைச் சூசகமாகத் தெரிவிக்கின்றன.

**மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்**

இச்செய்திக்கும் முதலாம், இரண்டாம் பராந்தக சோழனது படையெடுப்புக்களுக்கும் இடையே தொடர்பு இருந்தற்கான நேரடி ஆதாரங்கள் காணப்படவில்லை. இருப்பினும் இவ்விலக்கியங்கள் எழுந்த காலத்தில் இலங்கையிலும், தமிழகத்திலும் சோழ அரச மறைந்து ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. அப்படியிருந்து தமிழ் அரசின் தலைநகர் மாற்றத்தை சோழர் வருகையுடன் தொடர்பு படுத்தியிருப்பது சோழரைப் பற்றிய வரலாற்று நினைவுகள் இலங்கைத் தமிழரால் மறக்கப்படவிலை என்பதைக் காட்டுகிறது. இங்கே இலங்கைப் பாளி நூல்களில் சொல்லப்படாத பராந்தகனின் இலங்கை வெற்றியை தமிழக வரலாற்றேடுகள் முதன்மைப்படுத்திக் கூறுவதையும், இக்காலத்தில் தென்னிந்திய மன்னனொருவன் நாகதீபத்தின் மீதுபடையெடுத்ததாகச் சூளவம்சம் கூறுவதையும், சோழர் வருகையுடன் உக்கிரசிங்கனது தலைநகரான கதிரமலை (கந்தரோடையா?) சிங்கை நகருக்கு இடம்மாறியதாகவும் கூறுவதை நோக்கும் போது அவன் அடைந்த வெற்றி நாகதீப வெற்றியாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு (புஷ்பரட்ணம் 2000). இந்த இடத்தில் முதலாம் பராந்தக சோழனது படையெடுப்பின் முக்கியத்துவம் பற்றிப் பேராசிரியர் கா.இந்திரபாலா கூறும் பின்வரும் கருத்துக்களை நோக்குவது அவசியமாகும்.

**12**

'மேற்கூறிய இரு கட்டங்களிலும் நடையெற்ற சோழப்படையெடுப்புக்களின் (முதலாம், இரண்டாம் பராந்தக சோழன்) விளைவாக வடபகுதி வடகிழக்குப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ள இடமுண்டு. ஏற்கனவே பல்லவர் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த போது, இப்பிரதேசத்தில் பல்லவர் அதிகாரம் பரவியிருக்க கூடும் எனக் கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் சோழர் படைகள் வடபகுதியில் வந்திறங்குவதைக் காணலாம். பராந்தக சோழன் காலத்தில் இப்பிரதேசத்தில் சோழர் ஓரளவு அதிகாரம் பெற்றிருப்பர் என்றே தோன்றுகிறது. முதலாம் பராந்தக சோழன் காலத்திலேயே சோழர் பொலநறுவையில் தங்கள் நிர்வாகத்தை நிறுவியிருந்தார்களா என்று தெரியவில்லை. அவர்கள் அதிகார மையம் பொலநறுவைக்கு வடக்கே அல்லது கிழக்கே பதவியா அல்லது கந்தளாய் போன்ற ஓர் இடத்தில் இருந்து பின்னர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டிருத்தல் கூடும்' (இந்திரபாலா 2006:262)

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மேற்கூறப்பட்ட அனைத்து அம்சங்களையும் தொகுத்து நோக்கும் போது வடஇலங்கை அதாவது நாகதீபம் பெரும்பாலும் அநுராதபுர அரசின் மேலாதிக்கத்திற்கு உட்படாத ஒரு நாடாக அல்லது தனித்துவமான பிராந்தியாமாக இருந்ததென்ற முடிவுக்கு வர முடிகிறது. இதற்கு பண்டு தொட்டு இங்கு அரசமரபு தோன்றி வளர்ந்து வந்தமையும் ஒரு காரணம் எனக் கூறலாம். இக்கருத்திற்கு ஆதாரமாக ஏழாம் நூற்றாண்டளவில் இலங்கை வந்த கொஸ்மஸ இண்டிகோ பிளிஸ்டிஸ் இலங்கை அரசியல் நிலை தொடர்பாகக் கூறிய கருத்தை ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமாகும். அவரது கூற்றிலிருந்து இலங்கையில் இரு அரசுகள் இருந்தமையும், அவற்றுள் ஒரு அரசின் மன்னனிடம் செந்நிற மணிகள் காணப்படும் நிலப்பகுதியும், இன்னொரு மன்னனிடம் மிகப்பெரிய வணிக நகரத்தை உள்ளடக்கிய துறைமுகம் இருந்ததமையும் தெரிவருகிறது. பேராசிரியர் பரணவிதான செந்நிற மணிகள் காணப்படும் நிலப்பரப்பு தென்னிலங்கை அரசு எனவும், பெரிய வணிக நகரத்தை உள்ளடக்கிய துறைமுகம் மாதோட்டம் எனவும் அது அநுராதபுர மன்னனால் ஆளப்பட்ட பகுதி எனவும் கூறுகிறார். இதில் தென்னிலங்கையில் இன்னொரு சிங்கள மன்னன் ஆட்சி இருந்தமைக்கு அதன் ஆட்சியாளன் அநுராதபுர அரசிற்கு கீழ்படிய மறுத்ததே காரணம் என விளக்கம் கூறுகிறார் (Paranavithna 1961: 184). ஆனால் முதலியார் இராசநாயகம் பெரிய வணிக நகரத்தை உள்ளடக்கிய மாதோட்ட துறைமுகம் யாழ்ப்பாணத்தை உள்ளடக்கிய அரசிற்குரியதெனக் கூறுகிறார் (Rasanayagam 1928). ஏழாம் நூற்றாண்டின் பின்னர் நாகதீபத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடையே இருந்த அரசியல் உறவுகளை நோக்கும் போது தென்னிலங்கையைக் காட்டிலும் வடஇலங்கையே அநுராதபுர அரசின் மேலாண்மைக்கு கீழ்ப்படியாதிருந்ததைக் காணமுடிகிறது.

*(தொடரும்)*

## காக்கைதீவு....

*(27ஆம் பக்கத்தொடர்ச்சி)*

அவர்களிடம் பணம் வாங்கினால் இவர்கள் பிடிக்கும் அனைத்தையும் அவர்களூடாகவே விற்பனை செய்ய வேண்டும். இவற்றில் இறால் கொள்வனவின் போது அவர்கள் தொழிலாளர்களுடைய சிறிய இறால்களை கிலோ 350 ரூபா வீதம் பெரிய இறால்களை கிலோ 550 ரூபா வீதம் கொள்வனவு செய்து அவர்கள் அதை வெளிச் சந்தையில் சிறி இறால் 450 வீதமும் பெரிய இறால் 650 வீதமும் விற்பனை செய்து ஏறக்குறைய நமது இறாலில் கிலோவுக்கு ஆயிரம் ரூபா வரை ஆதாயம் பெறுவதுடன் பணம் வேண்டியவர்களிடம் கிலோவிற்கு குறிப்பிட்ட தொகையில் 30 ரூபா அல்லது 40 ரூபா என்றும் மேலதிகமாக கழித்தும் எடுகின்றார்கள் என்றார் ஐயா.

இப்ப விளங்குதா? உழைப்பது யார் அனுபவிப்பது யார் ? என்று ஆனால் தம்பி இப்ப ஒரு குறுகிய காலமாக கூறியான்கள் மத்தியில் கடும் போட்டி காரணமாக மீனவர்களை தங்கள் பக்கம் இழுக்க சிறிய சலுகைகளாக புடைவைகள் சிறு தொகைப் பணம் என்பன புது வருடத்தில் இலவசமாக வழங்கி வருகின்றார்கள். இது நமக்கு எதற்கும் உதவுவப் போவது இல்லை.

இந்த சொந்த முதலீடு இல்லாத எமது தொழில் நாச வலையம் உடைக்கப்பட்டால் தான் நீங்கள் கேட்பது போல் உழைப்பதை உழைப்பவரே அனுபவிக்க முடியும் என்றார் பாதிக்கப்பட்ட அந்தப் பெரியவர்.

இவர்கள் மட்டுமல்ல இயற்கையும் எங்களை மேலும் கடன்காரர்களாகத் தான்மாற்றுகிறது. தம் ஏனெனில் சுனாமி, நிஷாப்புயல், [illegible] கையின் சீற்றங்களிலும் அழிந்தது எங்களுடைய பல இலட்சம் ரூபா பெறுமதியான கடல் உபகரணங்கள். இதில் புதினம் என்னவென்றால் தம்பி இழப்பீடு நடைபெற்று அடுத்த நாள் அல்லது அதுக்கு அடுத்த நாள் பிரதேச செயலகத்தினர், தனியார் நிறுவனத்தினர் மிக அவசர அசவரமாக எமது இழப்பீட்டு விபரங்களை பதிந்து போனதும் போனார்கள். பின்னர் 3 அல்லது 4 மாதங்கள் கழிந்த பின் வந்து எமக்கு இழப்பீட்டு ஏற்பட்டவர்களில் 1/4 பகுதியினருக்கு 1/10 நஸ்ட ஈட்டினை வழங்கிவிட்டு கணக்கை முடிப்பார்கள். நான் யாரையும் குறை கூற வில்லை. நமக்கு ஏற்பட்ட அவலமான அநுபவங்களைத்தான் சொல்கிறேன் தம்பி என்றார்.

எனவே தம்பி உமது கேள்விக்கான சரியான காரணம் விளங்கியிருக்கும் தானே. எங்களுடைய இந் நாச வளையத்தினை உடைத்து இவ் கூறியான்மார்களிடம் இருந்து விடுபட எமக்கு யாராவது முன் வந்து முதலீட்டு உதவிகள் செய்ய முன்வருவார்களேயானால் நீங்கள் கூறியது போல் நிச்சயமாக நாம் உழைக்கும் பணம் அனைத்தினையும் வீட்டிற்கு எடுத்துச் சென்று எமது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த முடிவதுடன் சேமிப்புக்களை உருவாக்கி எதிர்கால பாதுகாப்பிற்கும் வழி சமைப்போம் தம்பி. இதெல்லாம் எப்பொழுது யாரால் நடக்கும்! என பெருமூச்சுடனும் நம்பிக்கை இல்லாமலும் விடை பெற்றார் அந்த முதியவர்.

அவர் கூறியதை வைத்து இதுதான் காக்கை தீவு மீனவர்களுடைய உண்மை நிலை என்பதனை அறிந்து கொண்ட திருப்தியுடனும் அவர்களது நிலமையினை எண்ணி மன வேதனையுடனும் நானும் விடைபெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு



சர்வதேச வர்த்தகக் கண்காட்சி கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் தொடக்க விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட இந்திய தூதர் அசோக் கே காந்த் மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.



நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவில் வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ், முன்னாள் ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. மகேசு மற்றும் விருந்தினர்களும் மாணவர்களும் ஊர்வலமாக வருவதைப் படத்தில் காணலாம்.



எம்.ஜி.ஆர். அவர்களின் 95ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 17ஆம் திகதி யாழ். திருநெல்வேலிச் சந்தையில் கடமைபுரியும் தொழிலாளர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் உடுபுடைவைகளை கோப்பாய் தெற்கு பழம் றோட்டினைச் சேர்ந்த இ. சுந்தரலிங்கம் (யாழ். எம்.ஜி.ஆர்.) வழங்குவதை படத்தில் காணலாம்.



மயிலிட்டி வடக்கு. பாரதி சனசமூக நிலைய வளர்ச்சிக்கான சீட்டிழுப்பில் முதலாம் பரிசு பெற்றவர், நிலையத் தலைவர் பொ. சிவனேசராசாவிடம் இருந்து பரிசிலை பெறுவதை படத்தில் காணலாம்.



கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டுக்காக 'போரூட்' நிறுவன நிதி உதவியுடன் சமுர்த்தி செயற்றிட்ட அனுசரணையுடனும் தையல் இயத்திரங்கள் வழங்கப்பட்டபோது பயனாளி ஒருவர் தையல் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.



தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி கொடிகாமம் பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவின்போது பிரதம அதிதிகளான தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்த சீலன், கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெகத் பண்டார மற்றும் தென்மராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி கு. சிவானந்தன் ஆகியோர் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேர்ஸ்டனின் ஓய்வு இந்திய அணிக்கு பின்னடைவினை ஏற்படுத்தும்





பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள 10 ஆவது உலகக் கிண்ணப போட்டியினை அடுத்து இந்திய அணியின் வழிகாட்டியான பயிற்சியாளர் ஹறி ஹேர்ஸ்டன் ஓய்வு பெறவுள்ளமை இந்திய அணிக்கு பெரும் பின்னடைவினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரரான ஹேர்ஸ்டன் 3 ஆண்டுகளுக்கு முன் ஒப்பந்தம் செய்யப்பட்டார். இவர் இந்திய அணிக்கு பயிற்சியாளரானதன் பிற்பாடு இந்திய அணி டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்திணைப் பெற்றுக் கொண்டதுடன் ஒரு நாள் தரப்படுத்தலிலும் 2 ஆவது இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

அண்மைக்காலமாக தொடர் வெற்றிகளைக் குவித்து வரும் இந்திய அணி உலகக்கிண்ண போட்டியினை ஹேர்ஸ்டனின் பயிற்சியின் கீழ் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது. இந்நிலையில் ஒப்பந்தம் முடிவடைந்துள்ள நிலையில் உலகக்கிண்ண போட்டியினை அடுத்து தனது குடும்பத்துடன் காலத்தினை கழிக்க வேண்டியுள்ளதனால் தனது ஓய்வினை ஹேர்ஸ்டன் இந்திய கிரிக்கெட் சபையிடம் அறிவித்துள்ளார்.

கிரிக்கெட் என்றாலே அவுஸ்திரேலியாவினையே குறிப்பிட்டுக்கூறும் வகையில் இருந்த கிரிக்கெட் உலகத்தில் அதனை முறியடித்து இந்திய அணியை முதற்தர அணியாக கிரிக்கெட் அரங்கில் கொண்டுவந்து நிறுத்தியமையில் பெரும் பங்கு ஹேர்ஸ்டனையே சாரும். முன்பு இந்திய அணி சச்சின், டிராவிட் போன்ற ஒரு சில முன்னணி வீரர்களில் மாத்திரமே நம்பிக்கை கொண்டு ஆடிவந்தது. அவர்களின் ஆட்டத்திலேயே இந்திய அணியின் பலமும் பலவீனமும் அமைந்திருந்தமை மறுக்கமுடியாததொரு உண்மை.

இந்நிலையில் இந்திய அணியின் பயிற்சியாளராக பொறுப்பேற்று அணியின் ஒவ்வொரு வீரர்களின் திறமைகளை நன்கு இனங்கண்டு அவர்களின் ஆட்டத்திறமையை வெளிக்கொணர்ந்தார் ஹேர்ஸ்டன். இதன் மூலம் அணியின் அனைத்து வீரர்களும் போட்டியின் தன்மைக்கேற்ப ஆடக்கூடிய திறமையைப் பெற்றுக்கொண்டனர்.

இந்நிலையில் ஒவ்வொரு வீரர்களையும் நன்கு அறிந்துவைத்துள்ள ஹேர்ஸ்டன் ஓய்வு பெறுவது இந்திய அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

காரணம் புதியதொரு பயிற்சியாளர் அணிக்கு வரும் போது அவர் ஒவ்வொரு வீரர்களையும் இனம் காண்பதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும். அதேவேளை அவரின் நுணுக்கங்களை அணி வீரர்கள் பற்றிக் கொள்ள தாமதம் ஏற்படும். இவ்வாறு பல சிக்கல்கள் உருவாகும் போது இந்திய அணி தற்போது வேகமாக கிரிக்கெட் அரங்கில் முன்னகர்ந்து வருவதில் தாமதம் ஏற்படும் என்பது உண்மை.

## உலகக் கிண்ண போட்டிக்கான மைதானங்கள் தயார் நிலையில்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ள அனைத்து மைதானங்களும் தயாராகிவிட்டன என போட்டிக்குழு தலைவர் ரத்னாகர் ஷெட்டி தெரிவித்ததுள்ளார்.

அடுத்த மாதம் 19-ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் போட்டிகள் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 13 மைதானங்களில் நடைபெறவுள்ளது. இதையொட்டி போட்டி நடக்கும் மைதானங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு தயாராகி வருகின்றன.

போட்டிக்கு 23 நாட்களே உள்ள நிலையில் சர்வதேச கிரிக்கெட் சங்க அதிகாரிகள் குழு பல்வேறு மைதானங்களிலும் ஆய்வு நடத்தியது. இதையடுத்து ரத்னாகர் ஷெட்டி தெரிவிக்கையில், நாங்கள் நடத்திய ஆய்வில் போட்டி நடக்கும் அனைத்து மைதானங்களுமே தயாராகி விட்டன என்று தெரிவித்துள்ளார்.



## இன்னும் 22 நாட்களே!

கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் விருந்தளிக்க காத்திருக்கின்ற 10 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகுவதற்கு இன்னும் 22 நாட்களே உள்ளன.

இந்நிலையில் இதுவரையில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் பலசாதனைகள் நிகழ்ந்தேறியுள்ளன. அந்தவகையில் இதுவரை நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளில் அதிகமான ஓட்டங்களைப் பெற்றுள்ள வீரகள் வரிசையில் சச்சின், ஜாவித் மியான் டட், அரவிந்த டி சில்வா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

33 ஆட்டங்களில் விளையாடிய சச்சிசன் 1,732 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவருக்கு அடுத்தபடியாக பாகிஸ்தானின் ஜாவித் மியான் டட் 33 ஆட்டங்களில் 1 சதம், 8 அரைசதங்களுடன் 1,083 2 ஆவது இடத்திணைப் பெற்றுள்ள அதேவேளை இலங்கையின் அரவிந்த டி சில்வா 35 ஆட்டங்களில் விளையாடி 1,064 ஓட்டங்களைக் குவித்து 3- ஆவது இடத்தில் உள்ளார். இவர் 2 சதம், 6 அரைசதங்களை அடித்துள்ளார்.

அதேபோல் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் வரிசையில் மெக்ரத், வசிம் அக்ரம், முத்தையா முரளிதரன் ஆகியோர் முதல் 3 இடங்களில் உள்ளனர். அந்தவகையில் 4 உலகக் கிண்ணப் போட்டிகளில் 39 ஆட்டங்களில் விளையாடிய மெக்ரத் 71 விக்கெட்டுகளை வீழ்த்தி முதலிடத்திலுள்ளார். 15 ஓட்டங்களை கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு பெறுதி ஆகும்.

இவருக்கு அடுத்தபடியாக பாகிஸ்தானின் வாசிம் அக்ரம் 55 விக்கெட்டுகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். இவர் 5 உலகக் கிண்ணப் போட்டிகளில் 38 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். இதனையடுத்து 3 ஆவது இடத்தில் 4 உலகக் கிண்ணப்போட்டிகளில் 31 ஆட்டங்களில் விளையாடியுள்ள இலங்கையின் முத்தையா முரளிதரன் 53 விக்கெட்டுகளுடன் 3-ஆவது இடத்தினைப் பெற்றுள்ளார். 19 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரின் சிறப்பான பந்துவீச்சு ஆகும்.

இணைப்பாட்டத்தின் மூலம் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர்கள் வரிசையில் கங்குலி - டிராவிட் ஜோடி முதலாவது இடத்திலும் 2 ஆவது இடத்தில் சச்சின் - கங்குலி ஜோடியும், 3 ஆவது இடத்தில் டிராவிட் - சச்சின் ஜோடியும் உள்ளனர்.

இவ்வாறு பல சாதனைகளை பதிவாக்கிவந்துள்ள உலகக்கிண்ண தொடர் இம்முறையும் பலசாதனைகளை பதிவாக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday January 28, 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org